

# ஏழைச் சிறுவர்களுக்கான இலவச சத்துணவுத் திட்டம்

## ஜூலை 1ஆம் தேதி முதல் ஆரம்பம்

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் வரலாறு காணாத வகையில் அறிவித்த ஏழைப்பிள்ளைகட்கு ஆண்டு முழுதுக்குமான மதிய உணவுத் திட்டம், தமிழகத்தில் இவ்வாண்டு ஜூலை 1-ஆம் தேதி முதல் தொடங்குகிறது.

### இளஞ்சிறார்கள்

இத்திட்டம் இருபிரிவுகளாகச் செயல்படும். முதல் பிரிவு சமூகநலத் துறை கண்காணித்து நடத்துவது. இவர்கள் 2 முதல் 5 வயது வரை உள்ள சுமார் 25 இலட்சம் பிள்ளைகட்கு கிராமங்களில் அதற்காக அமைக்கப்படும் சமையற் கூடங்களிலும் ஏற்கெனவே இருக்கும் குழந்தைகள் காப்பகங்களிலும் சத்துணவு அளிப்பார்கள்.

### பள்ளிப் பிள்ளைகள்

இத்திட்டத்தின் பெரிய பிரிவு 36,000 பள்ளிகளில் சுமார் 40 இலட்சம் பிள்ளைகட்கு உணவளிப்பது. இத்திட்டம் முழுக்கமுழுக்க பள்ளிக் கல்வித்துறையின் கண்காணிப்பில் தமிழக ஆசிரியப் பெருமக்களின் மேற்பார்வையில் நடைபெறும். ஒவ்வொரு பள்ளியிலும் சமையலுக்கென்று தனியாக மகளிரும், அவருக்கு உதவியாளரும் நியமிக்கப்படுவார்கள்.

### இலவச உணவு, தட்டு, தம்ளர்

இவை தவிர உணவு அருந்தும் 40 இலட்சம் குழந்தைகட்கும் இலவசமாக உணவுத் தட்டு, தம்ளர் போன்றவை பள்ளிகளிலேயே வழங்கப்பெறும். சமையல் செய்யப் பாத்திரம் இவை அரசின் செலவிலேயே பள்ளிகளில் அளிக்கப்படும்.

### அரிசி, பருப்பு, எண்ணெய் பள்ளியின் வாசலுக்கே வரும்

அரிசி, பருப்பு, எண்ணெய் இவை தமிழக நுகர்பொருள் வழங்குத்துறை, கூட்டுறவுத்துறை இவைகளால் பள்ளிகளிலேயே அளிக்கப்படும்.

### அரசு முன்மானியம்

மற்றும் சமையலுக்கு வேண்டிய விறகு. காய்கறி மசாலா போன்றவற்றைப் பள்ளித் தலைமையாசிரியர் வாங்க மாவட்டக் கல்வி அதிகாரி முன் மானியம் அளிப்பார். பள்ளியின் தலைமையாசிரியரே எல்லாச் செலவினங்களும் செய்து பொறுப்பாகக் கணக்கு வைத்துக் கொள்வார்.

### ஆசிரியருக்கும் உணவு

பள்ளியில் மாணவர் சாப்பாட்டை மேற்பார்க்கும் ஆசிரியப் பெருமக்களும் மாணவருடன் சேர்த்து உணவருந்தி மகிழுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

### 45 காசு ஒரு பிள்ளைக்கு ஒரு நாளைக்கு

இந்தப் பள்ளி உணவுக்கு ஒரு மாணவருக்கு ஒரு நாளைக்கு 45 காசு செலவாகும். சத்து நிரம்பிய உணவாக இது இருக்கும். ஆண்டு முழுவதும் இது வழங்கப்படும். விடுமுறை நாட்களிலும், பள்ளி இல்லா நாட்களிலும் கூட உணவு உண்டு.

### கிராம உணவு ஆலோசனைக் குழு

இப்பள்ளி உணவை எல்லாவிடங்களிலும் சீருடன் நடத்த பள்ளியின் தலைமையாசிரியரே செயலாளராகக் கொண்ட பள்ளி உணவு ஆலோசனைக்குழு 10 ஊர்ப் பிரமுகர்களைக் கொண்டு இயங்கும்.

பள்ளி மதிய உணவு கணக்குகளைக் கல்வித்துறை பள்ளித் துணை ஆய்வர்கள் தணிக்கை செய்வார்கள். மதிய உணவு மானியம் மாவட்டக் கல்வி அதிகாரிகளால் அந்த அந்த ஒன்றியக் கல்வித்துறை உதவிக் கல்வி அதிகாரிகள் மூலம் காசோலை வடிவில் வழங்கப்படும்.

### பழைய திட்டம்

பழைய உணவுத் திட்டத்தில் 10 காசு அரசு மானியமும் 5 காசு ஒன்றிய மானி


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2013

துந்துபி — ஆனி 2

மலர்: 12 இதழ்: 24

16—6—1982

யமுமாக 15 காசு ஒரு நாளுக்கு ஒரு மாண வனுக்கு என்று இருந்தது. பல ஒன்றி யங்கள் இந்த 5 காசை தர முடியவில்லை. எனவே, 10 காசில்தான் பழைய உணவுத் திட்டம் நடந்து வந்தது 'கேர்' உதவியுடன்.

### புதிய திட்டம் சீர்மிகு திட்டம்

இன்று வந்துள்ள புதிய உணவுத் திட்டமோ 45 காசு ஒரு மாணவனுக்கு என்று எல்லாம் முழுதுமாக அரசு மானியமாக அளிப் பதால் பழைய திட்டத்தைவிட இது ஐந்து மடங்கு சிறந்து விளங்குகிறது என ஆசிரியர் கள் மகிழ்ச்சியுறுகின்றனர். தவிர பொது மக்கள் நன்கொடை, பஞ்சாயத்து நன் கொடை என இனி எவரையும் போய் ஆசிரி யர்கள் நாடி அலைய வேண்டியதில்லை. அரசின் கொடையே பெரும் கொடையாகி உள்ளது. இது ஆசிரியப் பெருமக்கட்கு பெரும் வரப்பிரசாதமாக அமையும்.

### சமையல் செய்ய தனியாகப் பெண்கள்

தவிர ஒவ்வொரு பள்ளியிலும் இனி எந்த ஆசிரியரும் சமையல் செய்ய வேண்டிய தில்லை. சமையலுக்கென்று அரசின் சம்பளத் துடன் கூடியவரை பெண்களும் அவர்களுக்கு உதவியாட்களும் ஒவ்வொரு பள்ளியிலும் இனி உண்டு.



## தமிழக அரசின் சத்துணவுத் திட்டம்

## பெல்ஜிய நாட்டு சமூக சேவகி பாராட்டு!

"ஏழை-எளிய குழந்தைகளுக்குத் தமிழக அரசு அறிவித்துள்ள சத்துணவுத் திட்டம் மிகவும் பயனுள்ள திட்டம்" என்று பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த சமூக சேவகி ரோசா கியார்டின் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த சமூக சேவகி ரோசாகியார்டின் இராமநாதபுர மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டப் பேரவை உறுப்பினர் திரு தாமரைக்கனி அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் "மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர் அவர்களின் சீரிய தலைமை யிலான அரசு சத்துணவுத் திட்டத்தைத் தீட்டி ஏழை-எளிய மக்களின் பசியைப் போக்க உள்ளது. இந்த நல்ல திட்டத்தை நான் மனமாரப் பாராட்டுகிறேன். பசியால் துடித் திடும் ஏழை-எளிய குழந்தைகளுக்கு வாழ்வும், அறிவும் அளிக்கும் இத்திட்டத்தைக் கொண்டு வந்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நான் மீண்டும் மனமாரப் பாராட்டு கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.



# மீன்வளம் பெருக்கிடும் திட்டங்கள்

மீன் உற்பத்தி: கடல் மற்றும் உள்நாட்டு மீன் பிடிப்பை உள்ளடக்கிய மீன் உற்பத்தியில் 1981-82-ம் ஆண்டில் இந்தியாவிலேயே முதலிடத்தைத் தமிழ்நாடு பெற்றுள்ளது. 1981-82-ல் மொத்தம் 4.10 லட்சம் டன்கள் உற்பத்தியாகியுள்ளது. கடல் மீன் உற்பத்தியை 2.35 லட்சம் டன்களிலிருந்து 2.60 டன்களாகவும் உள்நாட்டு மீன் உற்பத்தியை 1.75 லட்சம் டன்களிலிருந்து 1.85 டன்களாகவும் பெருக்கி அதன் மூலம் மொத்த மீன் உற்பத்தியை 4.10 லட்சம் டன்களிலிருந்து 4.45 லட்சம் டன்களாகவும் 1982-83-ல் உயர்த்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**மீன் பிடி துறைமுகங்கள்:**

மத்திய அரசின் அனுமதி பெற்று சின்ன முட்டம், வாலி நோக்கம் ஆகிய இடங்களில் மீன் பிடி துறைமுகங்களை நிறுவுவதற்கு தமிழக அரசு ஒப்பளித்துள்ளது. சின்னமுட்டத்தில் ரூ. 234 லட்சம் செலவில், 240 விசை படகுகளும் 10 டிராலர்களும் தங்க வசதி கொண்ட மீன்பிடி துறைமுகம் ஆகஸ்ட் '82-ல் கட்ட ஆரம்பித்து 1985-ல் கட்டி முடிக்கப்படும். வாலி நோக்கத்தில் ரூபாய் 77 லட்சம் செலவில் 150 விசைப்படகுகள் தங்க வசதி கொண்ட மீன்பிடி துறைமுகம்-1983-க்குள் கட்டி முடிக்கப்படும். இத்திட்டங்களுக்காகும் செலவில் பாதியை மத்திய அரசும் பாதியை மாநில அரசும் ஏற்றுக் கொள்ளும்.

பழையாறு மற்றும் தொண்டியில் முறையே ரூ. 60 லட்சம் மற்றும் ரூ. 90.50 லட்சம் செலவில் மீன்பிடி துறைமுகங்களை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கோட்டைப் பட்டினத்தில் ரூ. 18.50 லட்சம் செலவில் மீன்பிடி படகுகளுக்கான தங்குதுறை வசதிகள் செய்து தரப்படவுள்ளது. இதற்கான மத்திய அரசின் அங்கீகாரம் விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே இயங்கி வரும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளின் மாபெரும் சாதனைகளினால் ஊக்குவிக்கப்பட்டு வட ஆர்க்காடு, பெரியார், புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மேலும் நான்கு முகமைகள் ரூ.16,80 லட்சம் செலவில் விரிவுபடுத்தி உள்நாட்டு மீன் உற்பத்தியைப் பெருக்க அரசு ஒப்பளித்துள்ளது. இத்திட்டம் தற்போது 11 மாவட்டங்களில் செயல்படுகின்றது. ஒட்டுமொத்த மீன்வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு முகமையிலும் இரண்டு குளங்களில் தீவிர மீன் வளர்ப்பை மேற்கொள்வது மீன் வளர்ப்பு முறைகள் மற்றும் விரிவாக்கப் பணிகளை முனைப்புடன் மேற்கொள்ள வழிகோலும். இதைத் தவிர ஒவ்வொரு முகமையிலும் ஓர் மீன் குஞ்சு நாற்றங்கால் நிறுவப்படும். தமிழ்நாட்டில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் வெற்றிகரமாகச் செயல்படுவதால் இங்குள்ள இரு முகமைகளுக்கு மீன்களை சேமித்து வைக்கவும் விற்பனை செய்யவும் வசதியளிக்க மத்திய அரசு முன் வந்துள்ளது.

இயந்திரப் படகுகள் வினியோகம் கடலோர மீனவர்களுக்கு 1.06கோடி செலவில் 137 இயந்திரப் படகுகளை வாங்கி அவைகளை மீனவ வாலிபர்களுக்கு அதி

**மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர்**



லும் குறிப்பாக மீன் வளப் பயிற்சி பெற்றவர்களுக்குப் பங்கு அடிப்படையிலோ அல்லது வாடகைக் கட்டண அடிப்படையிலோ விநியோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. வாடகைக் கொள் முதல் திட்டத்தின் கீழ் தனிப்பட்டவர்களுக்குப் படகுகள் இதுவரை வழங்கப்பட்டு வந்தன. இப்போது உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் படகுகள் பங்கு அடிப்படையில் வினியோகிக்கப்படும். இத்திட்டம் இயந்திர மீன் பிடிப்பை மேற்கொள்ள மீனவ வாலிபர்களை ஊக்குவிப்பதுடன் அவர்களது வருவாயையும் அதிகரிக்க வழி வகுக்கும்.

**மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்:**

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு புத்துயிரளித்து அவற்றின் மூலம் மீனவர்கள் பயன்பெறுவதற்காக திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்காக நல்ல நிலையில் இயங்காத மீனவர் கூட்டுறவுச் சங்கங்களைக் கலைத்து விட்டு ஒரே இடத்தில் நன்கு இயங்கும் பல சங்கங்களை ஒருங்கிணைத்து அத்தகைய சங்கங்கள் செயல்படுவதற்குத் தேவையான நிதியுதவி அளிப்பதாகும். கிராமங்களில் செயல்படும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை மாவட்ட நிலையில் ஒரு விற்பனைச் சம்மேளனத்தின் கீழ் கொண்டுவந்து செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மீன் விற்பனைச் சம்மேளனங்களின் பொறுப்பானது உபரியாயுள்ள மீன்களைக் கொள்முதல் செய்து நுகர்வோருக்கு விற்பனைசெய்ய ஏற்பாடு செய்வதாகும். இதைப் பொருத்தமட்டில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் இணைக்கத்துடன் செயல்படும்.

**விலைவாசி ஆதரவுத் திட்டம்:**

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக்கழகம் தூத்துக்குடி, ஆர்க்காட்டுத்துறை மண்டபம், நாகர்கோயில் போன்ற இடங்களில் மீன்களை கொள்முதல் செய்து சென்னை, மதுரை, கோவை, திருச்சி போன்ற நகரங்களிலுள்ள மீன் விற்பனை நிலையங்கள் மூலம் சில்லரையாக மக்களுக்கு விற்பனை செய்கிறது. 1982-83-ம் ஆண்டில் மீன் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை தற்போதுள்ள 54-லிருந்து 100 ஆக உயர்த்தப்படும். தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மேற் குறிப்பிட்ட இடங்களிலிருந்து மீன்களைக் கொள்முதல் செய்வதற்கு "விலைவாசி ஆதரவு" அளிக்கும். இத்திட்டத்தின் கீழ் ஏற்கெனவே நிர்ணயித்து அறிவிக்கப்பட்டுள்ள விலைக்கு அங்கு வந்திறங்கும் எல்லா மீன்களையும் ஒட்டு மொத்தமாக கொள்முதல் செய்யும். இத்தகைய ஏற்பாடு தற்போது பிடிக்கும் மீன்களைக் காட்டிலும் அதிக மீன்களை மீனவர்கள் பிடிப்பதற்கு ஊக்குவிக்கும்.



**உவர் நீர் பண்ணைகள்:**

உவர் நீர் இறால் பண்ணைகளை மிகப் பெருமளவில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. 300 ஹெக்டேர் பரப்பளவில் ரூ. 2.65 கோடி செலவில் இத்தகைய உவர் நீர் இறால் பண்ணைகளை அமைப்பதற்கான திட்டம் தயாரித்தனுப்பப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலையும் நிதி ஆதரவையும் எதிர்நோக்கியுள்ளது. இதைத் தவிர தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகம் கழிமுகப்பகுதிகளிலுள்ளவர்களை இறால் பண்ணைகளை அமைப்பதில் ஊக்குவித்து அவர்களுக்குத் தேவையான தொழில் நுட்ப உதவியை நல்குவதுடன் இறால் வளர்ப்புக்குத் தேவையான இறால் குஞ்சு, உணவு போன்றவைகளை வழங்கும் விரிவாக்கப் பணிகளையும் மேற்கொள்ளும்.

**ஆழ்கடல் மீன் பிடிப்பு:**

இந்திய அரசு கடற்கரையிலிருந்து 320 கிலோ மீட்டர் வரை உள்ள பகுதிகளை நம் நாட்டுக்குரிய தனிப்பட்ட பயன் வளம் வாய்ந்த பகுதியாக அறிவித்துள்ளதால் பரந்து கிடக்கும் வரையறையற்ற இப்புதிய வளவாய்ப்புகளைத் தமிழ்நாடு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும். இறால் பிடிக்கும் நாவாய்களை வாங்கி மீன் பிடிப்பதன் மூலமோ அல்லது ஒப்பந்த மூலம் நாவாய்களை வாடகைக்கு விடுவதன் மூலமோ மேற்கொள்ளப்படும். இதற்குப் பொருத்தமான ஆழ்கடல்மீன்பிடி நலன்கள் மற்றும் நாவாய்களின் உருவரை மாதிரிகள் குறித்து யோசனை கூறுவதற்கு வல்லுநர்கள் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. அண்மையில் கூடவுள்ள இக்குழுவின் அறிக்கையினடிப்படையில் ஆழ்கடல் மீன்பிடிக் கலன்கள் மற்றும் நாவாய்களை வாங்குவதற்கோ ஒப்பந்த மூலம் வாடகைக்கு விடுவதற்கோ நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தற்சமயம் இந்தியாவில் சுமார் 56 ஆழ்கடல் மீன்பிடிக்கலன்கள் உள்ளன. இதை நடைமுறைத் திட்ட காலத்தில் 356 கலன்களாக அதிகரிக்க இந்திய அரசு தீர்மானித்துள்ளது. மீன் பிடி கலன்களைப் பெருக்குவதில் தமிழக அரசு தனக்குரிய பங்கை எடுத்துக் கொள்ள உள்ளது.

**தமிழ்நாட்டு மீனவர்களுக்கு சேமிப்பு நிவாரணத் திட்டம்:**

தமிழ்நாட்டு மீனவர்களுக்கு ஆண்டுதோறும் மூன்று மாதங்களுக்கு முறையான வருவாய் கிடைப்பதில்லை. புயல் காலங்களில் மீன்பிடிப்புக்குச் செல்ல முடியாததாலோ கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் பருவங்களில் மீன் பிடிப்பு இல்லாததாலோ இந்த நிலை ஏற்படுகிறது. 1982-ம் ஆண்டு ஜூன் முதல் வாரத்தில் செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின் கீழ் முறையாக வருவாய் கிடைக்கும் 9 மாதங்களிலும் மாதந்தோறும் ரூ. 10 வீதம் செலுத்தும் மீனவர்களுக்குத் தலா ரூ. 90 வீதம் அரசாங்கம் ஒதுக்கீடு செய்யும். இவ்வாறு சேமிக்கப்படும் ரூ. 180 முறையான வருவாயில்லாத மூன்று மாதங்களுக்கும் ஒவ்வொரு மீனவருக்கும் மாதந்தோறும் ரூ. 60 வீதம் வழங்கப்படும். மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மாதந்தோறும் ரூ. 10 வீதம் வசூலிக்கப்பட்டு இத்தொகை மீன் துறை உதவி இயக்குநர் இயக்கும் தனி நிதியின் கீழ் இருப்பு வைக்கப்படும். மாதந்தோறும் தரப்படும் ரூ. 60 மீன்துறை அலுவலர்கள் மூலம் வழங்கப்படும். இந்த ஏற்பாடு மீனவர்களின் தேவைகளுக்குப் பொருத்தமானதோர் திட்டமென்பதுடன் மீனவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தையும் ஏற்படுத்தும்.

**வேலை வாய்ப்புகள்:** மீன் துறைத்தலைமையக நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டு வருவதால் மீன்துறைப் பதவிகளுக்கு மீனவர்கள் தேவையாயுள்ளனர். இத்தகைய பதவிகளில் நியமனம் செய்வதற்கு கடலில் மீன்பிடிக்கையில் உயிரிழந்த மீனவர்களின் வாரிசுகளுக்குச் சலுகையளிக்கப்படும்.

*[மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 18-5-82 அன்று பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் வெளியிட்ட செய்தி]*

# எல்லோர்க்கும் குடிநீர்

தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சிகள் (சென்னை மாநகர் நீங்கலாக) நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளுக்கான புதிய குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்களை ஆய்வு செய்யவும், திட்டமிட்டுச் செயல்படுத்துவதற்கும் தமிழ்நாடு அரசால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தோற்றுவிக்கப்பட்டது. பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை நிறைவேற்றி வந்த குடிநீர் மற்றும் வடிகால்திட்டங்களையும் இந்த வாரியம் செயல்படுத்தி வருகிறது.

## ஊரகக் குடிநீர் பற்றிய ஆய்வு

தமிழ்நாட்டில் உள்ள எல்லாக்குடியிருப்புகளையும், ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள்




பார்வையிட்டு குடிநீர் பற்றிய ஆய்வு மேற்கொண்டதன் விளைவாகத் தமிழ்நாட்டில் 1 கிலோ மீட்டர் தூரத்திற்குள் நீர் ஆதாரமே இல்லாத கிராமக் குடியிருப்புகள், நீர் இருந்தும் குடிப்பதற்கு இயலாத நிலையில் உள்ள கிராமக் குடியிருப்புகள், நல்ல குடிநீர் இருந்தும் ஆண்டு முழுவதும் தொடர்ந்து நீர் கிடைக்காத நிலையில் உள்ள கிராமக் குடியிருப்புகள் என்று கணக்கிடப்பட்டதில் தமிழகத்தில் 18,167 கிராமக் குடியிருப்புகள் குடிநீர் இல்லாத பற்றாக்குறை நிலையிருந்தன என அறியப்பட்டது. இதுபோன்ற குடிநீர் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதன்மை இடம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே இது போன்ற குடிநீர் இல்லாத பற்றாக்குறை கிராமக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்குவதில் முன்னுரிமை தரப்பட வேண்டும் என்று 1977-78ஆம் ஆண்டிலேயே தமிழ்நாடு அரசால் அறிவுறுத்தப்பட்டு 1977-78லிருந்து 1979-80ஆம் ஆண்டு வரை 3,465 கிராமக் குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. ஆக, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்துற்குள் எஞ்சியுள்ள 14,702 பற்றாக்குறை கிராமக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கிட தமிழ்நாடு அரசால் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

## தன்னிறைவுத் திட்டம்

கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, சாலை வசதி, கல்விக்கூடங்கள், மருத்துவ வசதி போன்ற தேவைகளை நிறைவு செய்திடும் வண்ணம் தமிழ்நாடு அரசால் தன்னிறைவுத் திட்டம் என்னும் தன்னிகரில்லாத் திட்டம், அனைத்து மாநிலங்களுக்கும் வழிகாட்டும் திட்டமாக 1980ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. தன்னிறைவு நிறைவுபெற குடிநீருக்கே முதலிடம் என்னும் மகத்தான குறிக்கோளின் அடிப்படையில் எஞ்சியுள்ள 14,702 பற்றாக்குறை கிராமக் குடியிருப்புகளுக்கும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிடத் தீர்மானிக்கப்பட்டு முதற்கட்டமாகத் தேர்வு செய்யப்பட்ட 69 ஊராட்சி ஒன்றியங்களில் அடங்கியுள்ள 2,158 கிராமக் குடியிருப்புகளுக்கு 1980-81ல் குடிநீர்த்திட்டங்களை நிறைவேற்றிடத் திட்டமிட்டு 1982 சனவரி முடிய 1,768 பற்றாக்குறை கிராமக் குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுவிட்டது. எஞ்சியுள்ள 390 கிராமக் குடியிருப்புகளுக்கும் 1982 மார்ச் இறுதிக்குள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும் வகையில் திட்டப் பணிகள் விரைவு படுத்தப்பட்டன. தன்னிறைவுத் திட்டத்தின் இரண்டாம் கட்டமாகத் தேர்வுசெய்யப்பட்ட 150 ஊராட்சி ஒன்றியங்களில் அடங்கியுள்ள 4076 பற்றாக்குறை கிராமக்குடியிருப்புகளில் 1981-82ல் நிதியாண்டில் 2000 கிராமக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கிடத் திட்டமிடப்பட்டு இதுவரையில் 1234 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 766 குடியிருப்புகளுக்கு 1982 மார்ச் இறுதிக்குள் குடிநீர் வழங்கிடும் வகையில் திட்டப் பணிகள் செயலாக்கம் பெற்றன. எஞ்சியுள்ள 159

ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டத்தின் மூன்றாம் கட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் தொடரவிருக்கின்றன.

1980-83ம் ஆண்டு வரை நிறைவேற்றப்பட்ட, நிறைவேற்றப்படவிருக்கின்ற கிராமக் குடிநீர் திட்டங்கள் குறித்த பட்டியல் பின் வருமாறு:

| ஆண்டு | கிராமக் குடியிருப்புகளின் எண்ணிக்கை | செலவினம். ரூ (இலட்சத்தில்!) |
|---|---|---|
| 1980—81 | 2,300 | 1,721 |
| 1981—82 (எதிர் பார்ப்பது) | 32,00 | 3,291 |
| 1982—83 திட்டமிடப் பட்டுள்ளவை. | 3,200 | 3,200 |

**வறட்சி நிவாரணத் திட்டம் .**

சென்ற ஆண்டு பருவமழை பொய்த்த தன் விளைவாக ஏற்பட்ட கடும் வறட்சி நேரத்தில் தாகம் தீர்த்திடும் பணியில் 6708 இடங்களில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப் பட்டு கைப் பம்புகள் பொருத்தப்பட்டன.

**நகர்ப்புற குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்கள்**

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி நகர்ப்புற குடிநீர் திட்டங்களில் தற்பொழுது செயலாக்கத்திலுள்ள அனைத்துத் திட்டங்களையும் விரைவில் முடிக்கவும், போதுமான அளவு நீர் கிடைக்காத நகரங்களில் திட்டங்களை விரிவுபடுத்தவும் திட்ட மிடப்பட்டுள்ளது. இதில் தொழில் ரீதியிலும் வணிக முறையிலும் சமயம் மற்றும் சுற்றுலா முக்கியத்துவ அடிப்படையிலும் முக்கியத்துவம் வாய்ந்த நகரங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நகர்ப்புற குடிநீர்த் திட்டங்களை தனிக் கவனம் செலுத்தி கவனித்திடும் அடிப்படையில் 1982 சனவரியிலிருந்து ஒரு தனித்தலைமைப் பொறியாளர் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நகர்ப்புற குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்களில் 1980லிருந்து 1983 வரையில் நிறைவேற்றப்பட்ட-நிறைவேற்றப்பட விருக்கின்ற திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:

| ஆண்டு | திட்டங்களின் எண்ணிக்கை | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1980-81 | 9 | 1,591.49 |
| 1981-82 (எதிர்பார்ப்பது) | 30 | 1,392.52 |
| 1982-83 (திட்டமிடப் பட்டுள்ளது) | 22 | 1,431:00 |

மேலும் இவை தவிர 1982-83ம் நிதியாண்டில் கீழ்க்காணும் திட்டங்களையும் நிறைவேற்ற முடிவெடுக்கப்பட்டுள்ளது.

| | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| 1. மறைமலை நகர் (சென்னை அருகில்) | 388.13 |
| 2. வண்டலூர் மிருகக் காட்சிசாலை | 14.45 |
| 3. ராணிப்பேட்டை பெல் நிறுவனம் | 76.32 |
| 4. புழல்-புதிய மத்திய சிறைச்சாலை | 13.50 |
| 5. பாரதியார் பல்கலைக்கழகம் (கோவை) | 15.00 |

**உலக வங்கித் திட்டம்**

மதுரை மற்றும் கோவை மாநகரங்களுக்கும், சேலம் மற்றும் ஆத்தூர் நகராட்சிகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டங்களை விரிவு படுத்துவதற்கும் மேலும் 75 நகரங்களுக்கும் 740 கிராமக் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வசதியும் 15 நகரங்களுக்கு துப்புரவு வசதியும் அளிப்பதற்காகவும் ரூ. 104.45 கோடி திட்ட மதிப்பீட்டில் திட்டப்பணிகளை 1983 சனவரி முதல் செயலாக்குவதற்கென நிதி உதவிக்காக வாரியம் உலக வங்கியை அணுகியுள்ளது. இவை சம்பந்தமாக உலக வங்கிக் குழு மூன்று முறைகள் தமிழகத்திற்கு வருகை தந்ததோடு 1982ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திற்குள் முன்னோட்டத் திட்ட மதிப்பீட்டை முடிவு செய்யும் என்று பார்க்கப்படுகிறது.

**ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மூலம் கடனுதவி**

தமிழ்நாட்டிலுள்ள 194 நகரங்களில் செயலிலுள்ள திட்டங்களின் மேம்பாட்டிற்காகவும் மற்றும் 97 நகரங்களின் புதிய திட்டங்களுக்காகவும் சிறுவாணி குடிநீர்த் திட்டத்திற்காகவும் 1977லிருந்து 1982 வரை 2656 லட்ச ரூபாய் ஆயுள் காப்பீட்டுக் கழகம் கடனாக அளித்துள்ளது. மேலும் 1982-83ம் ஆண்டிற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து நகர்ப்புற குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்களுக்காக ரூ. 747.53 இலட்சம் கடனுதவி எதிர்பார்க்கப்படுகிறது.

**கிராமக் குடிநீர் திட்டங்கள் பராமரிப்பு**

1976ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் முதல் தமிழ்நாட்டிலுள்ள கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் ஆகியவற்றின் அன்றாட பழுதுகளை நீக்கிப் பராமரிக்கும் பொறுப்பை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமே ஏற்று செயலாற்றி வந்தது. மதுரையில் நடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் கைப்பம்புகள் பராமரிப்புப் பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டு, பராமரிப்புப் பணிகளை, விரைந்து, சுலபமாகப் பயனுள்ளதாக நிறைவேற்றும் பொருட்டு, கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித்தரும் பணிகளை மேற்கொண்டு வரும் ஊராட்சி ஒன்றியங்களிடம் விட்டுவிடலாம் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் கைப்பம்புகளின் பராமரிப்புப் பணிகளை 23-7-1981 முதல் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் ஒப்படைத்து அரசு ஆணை பிறப்பித்தது. மீண்டும் 1981 நவம்பர் மாதம் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் விசைப் பம்புகளின் பராமரிப்பைச் சரிவரக் கவனிக்கும் பொருட்டு ஊராட்சி ஒன்றிய, கோட்ட, மாவட்ட அளவில் தக்க தொழில் நுட்பப் பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, பணியிடங்கள் குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளதால், அரசின் இறுதிஆணை வரும் வரையில், பராமரிப்புப் பணிகளைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமே கவனித்துக்கொள்ளுமாறு முடிவெடுக்கப்பட்டு; வாரியம் பராமரிப்புப் பணிகளைத்தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

# சுற்றுப்புறச் சூழலில் நகர்ப்புற வளர்ச்சிப் பிரச்சினைகள்

பல நாடுகளைப்போல் இந்தியாவிலும் இயற்கை மனிதனின் கொடூரத் தன்மையால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் சுற்றுப்புறப் பிரச்சினைகள் பல ஏற்பட்டு மக்களின் நல்வாழ்வு பாதிக்கப்படுகிறது. வளர்ச்சி அடைந்த நாடுகளில் செல்வத்தின் மூலம் சுற்றுப்புறச் சுகாதாரப் பிரச்னைகள் பெரும்பாலும் ஏற்படுகின்றன.

வாழ்க்கைக்கான ஆதாரங்கள் வீணாக்கப்படுகின்றன. ஆனால் இந்தியாவில் சுற்றுப்புற ஆதாரங்களுக்கான பிரச்சினைகள் அடிப்படைத் தேவைகளைச் சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் காரணமாக உருவாகின்றன. சுற்றுப்புறச் சுகாதாரப் பிரச்சினையை திவாரி குழு இரண்டு பிரிவாக வகைப்படுத்தியுள்ளது. வறுமை மற்றும் வளர்ச்சி மூலம் ஏற்படக்கூடிய பிரச்சினை மற்றும் வளர்ச்சி ஏற்படும்போது எதிர்பாராமல் ஏற்படக்கூடிய விளைவுகள் என்று இந்தப் பிரச்சினை பிரிக்கப்பட்டுள்ளது.

முதல் பிரச்சினை மூலம் சுகாதாரமும், இயற்கை ஆதாரங்களின் ஒருங்கிணைப்பும் பாதிக்கப்படுகின்றன. இதற்குக்காரணம் வறுமை மற்றும் போதிய உணவு, எரிபொருள், இருப்பிடம், வேலை வாய்ப்பு முதலியவை இல்லாமை ஆகும்.

இரண்டாவது பிரச்சினை வேகமாக பொருளாதார வளர்ச்சியை எட்டும் முயற்சியின் ஒரு எதிர்விளைவாக ஏற்படுகிறது.

சுற்றுச்சூழல் பற்றிய நீண்டகால அடிப்படையிலான கவனம் போதிய அளவு செலுத்தப்படாதது மற்றொரு காரணமாகும். சமூக, அரசியல், தொழில்நுட்ப சுற்றுச் சூழல் அம்சங்கள் காரணமாகவும் சுற்றுப்புறம் பாதிக்கப்படுகிறது. எனவே, சுற்றுப்புறத் தூய்மை பாதுகாக்கப்பட வேண்டுமானால் தேசிய வளர்ச்சிப் பணிகள் உறுதியான காரண காரியம் உள்ள அடிப்படையில் அமைய வேண்டும்.

சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாக்கும் போது அந்தந்தப் பகுதியிலுள்ள பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். இயற்கை ஆதாரங்களை நியாயமான முறையில் பயன்படுத்த வேண்டும். மனிதர்கள் வாழும் பகுதியைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்ய வேண்டும். மனிதர்கள் வாழும் பகுதி என்று கூறும்போது கிராமப்புறத்திலும் நகர்ப்புறத்திலும் அடிப்படையான தேவைகள் வழங்கப்பட வேண்டும். இதனால் இயற்கை சூழல், கலாச்சாரப் பாரம்பரியம் பாதிப்படையாமல் பார்த்துக் கொள்ளலாம். நாடு முழுவதும் 5 இலட்சத்து 79 ஆயிரம் கிராமங்கள் உள்ளன. இவற்றில் நகர்ப்புறங்களில் உள்ள குடிசைப் பகுதிகள் 3 ஆயிரத்துக்குமேல் காணப்படுகின்றன. நாட்டின் மக்கள் தொகையில் முக்கால் பகுதியினர் கிராமப்புறக் குடிசைப் பகுதிகளிலேயே வாழ்கின்றனர்.

கிராமப்புறங்களில் சுற்றுப்புறத் தூய்மை பிரச்சினைகள் பெரும்பாலும் இயற்கை ஆதாரங்களைப் பயன்படுத்துவது அல்லது தவறாகப் பயன்படுத்துவது மூலம் ஏற்படுகின்றன. இதற்கு முக்கிய காரணம் வறுமையும், வேறு வழி இல்லாத நிலைமையுமே ஆகும். நகர்ப்புறங்களில் அரசு, நகரியம் மற்றும் மாநகராட்சி நிர்வாகங்கள், தொலைநோக்குடன் திட்டமிட்டு வசதிகளைப் பெருக்காததால் சுற்றுப்புறத் தூய்மை தொடர்பான பிரச்சினைகள் எழுகின்றன. அதே நேரத்தில் வேலையில்லாத திண்டாட்டம், கிராமப்புறங்களில் போதிய வேலையின்மை ஆகியவை நகர்ப்புறங்களில் மக்கள் குவியலை ஏற்படுத்தி சுற்றுப்புறத் தூய்மை பிரச்சினைகளை உருவாக்குகின்றன.


**எம். கே. முகர்ஜி,**

செயலர்,

பொதுப்பணி மற்றும் வீட்டு வசதி அமைச்சகம்.


1981 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகையில் 223.73 சதவிகிதம் அல்லது சுமார் 15.62 கோடி பேர் நகரங்களில் வாழுகின்றனர். 1971-81 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட பத்தாண்டுகளில் நகர்ப்புற மக்கள் தொகை 46 சதவிகிதம் அதிகரித்துள்ளது. கிராமப்புறங்களில் 18.96 சதவிகிதம்தான் இப்படி மக்கள் பெருக்கம் ஏற்பட்டுள்ளது. நகர்ப்புறங்களில் 3245 குடிசைப் பகுதிகள் உள்ளன. நகரங்களிடையே மக்கள் தொகைப் பெருக்கம் வேகமாக அதிகரித்துள்ளன. மொத்த மக்கள் தொகையில் இது 60 சதவிகித பெருக்கத்தைக்காட்டுகிறது. நகர்ப்புறங்களில் வாழும் மொத்த மக்கள் தொகையில் 27 சதவிகிதம்பேர் 12 பெருநகரங்களில் வசிக்கின்றனர். இந்த நகரங்களில் சுமார் 53 சதவிகிதம் மக்கள் பெருக்கம் ஏற்பட்டுள்ளது. இதற்குப் பெருமளவு கிராமப்புற மக்கள் குடியேற்றமே காரணமாகும். சுதந்திரத்துக்குப் பின் பல புதிய நகரங்கள் தோன்றியுள்ளன. ஏற்கனவே இருந்த நகரங்கள் விரிவாக்கப்பட்டுள்ளன. இதனால்நகர்ப்புறத்தேவையும், சுற்றுப்புறச் சூழலும் பாதிப்படைந்துள்ளன. குடிசைகள், மக்கள் நெரிசல், போக்குவரத்து பெருக்கம் திட்டமற்ற வளர்ச்சி பணிகள், அபிமானம் இல்லாத மனிதப் போக்கு போதிய தண்ணீர் சப்ளை இல்லாமை, சுகாதாரச் சீர்கேடு போன்றவை சுற்

றுச்சூழல் பாதிப்படைய பெரிதும் காரணமாகின்றன. பல நகரங்களில் சுகாதார மற்றும் குடிநீர் சர்வீசுகள் மோசம் அடைந்து வருகின்றன. 1981 மார்ச் இறுதி வரை உள்ள நிலவரப்படி 69 சதவிகித நகர்ப்புற மக்களுக்கு மட்டுமே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. ஆனால், வடிகால் வசதி 27 சதவிகிதம் பேருக்கு மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது. 1 இலட்சத்துக்கு குறைந்த மக்கள் தொகை கொண்ட நகரங்களின் நிலைமை இன்னும் மோசமாக இருக்கிறது.



போதிய நிதி ஆதாரங்கள் திரட்டுவதற்கு இயலாத சூழ்நிலைகளாகும். பிரச்சினைகள் மேலும் மோசமடைகின்றன. நகர்ப்புற பிரச்சினைகள் பற்றிக் கூறும் போது குடிசைகளே இல்லாமல் செய்துவிட வேண்டும் என்பது உட்படகார் நிறுத்த இடமில்லை. கிராமப்புறங்களுக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது என்பது வரை மேட்டுக்குடியினர் பல காரணங்களைக் கூறுகிறார்கள். இந்தியாவைப் போன்ற ஒரு நாட்டில் வறுமையை அகற்றுவதற்கு கிராமப்புற அபிவிருத்தி உயர் முன்னுரிமை பெறுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். அதே நேரத்தில் நகர்ப்புற அபிவிருத்தியையும் கவனத்தில் கொள்வது அவசியம். இதனால் கிராமப்புறப் பொருளாதார வளர்ச்சியில் நகர்ப்புறமும் பங்கேற்க முடியும். நகர்ப்புறங்களில் ஏராளமான மக்கள் மிகப்பரிதாபமான நிலையில் வாழுகின்றனர்.

நகர சபைகள் பல பணிகளைச் செய்வதாகக்கூறுகின்றன. ஆனால் நடைமுறையில் அத்தனையும் செயல் படுவதில்லை இதற்குக் காரணம் நிதிப் பற்றாக்குறையும், அரசியல் மற்றும் நிர்வாகப் பிரச்சினைகளுமாகும். இந்த அமைப்புகளுக்குப் போதிய நிதி ஆதாரங்களை உருவாக்கி அதன் திறமையை அபிவிருத்தி செய்யாவிட்டால் மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் போய்விடக் கூடும். எனவே நகரங்கள் மற்றும் மாநகரங்களுக்கான திட்டங்கள் மிகவும் கவனத்துடன் தயாரிக்கப்பட வேண்டும். நகர் மக்களின் தேவையை அறிந்து அவர்கள் குடியிருப்பதற்கான வசதிகளை அளிப்பது அவசியம். நகர்ப்புறத்தில் பயன்பாடு திட்டமிட்ட அடிப்படையில் சிக்கனமாக அமைய வேண்டும். பணி இடங்களுக்கு அருகிலேயே தொழிலாளர் குடியிருப்பு அமைத்தால் ஏழை மக்கள் அதிக நேரம் பயணம் செய்வது தவிர்க்கப்படும்.

நகர்ப்புறங்களிலுள்ள ஏழைகளை வறுமைப்பிடியிலிருந்து விடுவிப்பது மிக முக்கியமானது. இதற்கு வேலைவாய்ப்பும், குடியிருப்பு வசதிகளும் அதிக அளவில் செய்து தரப்பட வேண்டும். சட்ட ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் சுற்றுப்புற அபிவிருத்திக்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் அபிவிருத்திக்கான ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று மத்திய ஆதரவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் மற்றும் வடிகால் வசதிகள் செய்து தருவதற்கான திட்டம் ஒன்று உருவாக்கப்படுகிறது. குடிசைப் பகுதி பிரச்சினைகள் ஒரு குறிப்பிட்ட கால வரையறை கொண்ட வகையில் தீர்க்கப்பட வேண்டும். மிகவும் எளிய மக்களுக்கு முன்னுரிமை தருவது அவசியம்.

குடிசைப் பகுதி மற்றும் ஏழைகளுக்கான வீட்டுவசதி போன்றவை பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளன. பெரிய நகரங்களில் சர்வீஸ் மற்றும் சுற்றுச்சூழல் மோசம் அடைந்து வருவது நீண்ட நாட்கள் தாக்குப்பிடிக்க முடியாத ஒரு பிரச்சினையாகும். எனவே, காலங் கடத்தாமல் திட்டமிடும் அதிகாரிகளும், உள்ளாட்சி அமைப்புகளும், தொழில் நிறுவனங்களும் சமூகச் சேவை நிலையங்களும், பத்திரிகைகளும், சமுதாயத் தலைவர்களும் இதில் கவனம் செலுத்த வேண்டும். ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ள சர்வீசுகள் அபிவிருத்தி செய்யப்படவும் பராமரிக்கப்படவும் தேவையான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

நகரங்களில் மக்கள் குவியல் மற்றும் அதிக அளவில் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு ஈடு கொடுக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். மரங்களை நட்டால் மட்டும் போதாது. அவற்றை ஆடு, மாடுகள் அழித்துவிடாதபடி பராமரிப்பதும் அவசியம்.



## மாமல்லபுரம்:

# இளைஞர் முகாம் திறப்பு விழா!

நிகழ்ச்சித் தொகுப்பு :
—பி.எம்.ராஜேந்திரன்

மாமல்லபுரத்தில், கவின்மிகுகடற்கரைக் கோயில் அருகே, பன்னிரண்டு லட்சம் ரூபாய் செலவில் 'சுற்றுலாப் பயணியர் முகாம்' ஒன்று 10 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப் பட்டுள்ளது. இதன் திறப்பு விழாவும், திறந்தவெளி அருங்காட்சியகத்திற்கான கால் கோள் விழாவும் அண்மையில் (30.5.'82) சிறப்புற நடைபெற்றன.

12 தனிக்குடில்கள், 40 படுக்கைகள் கொண்ட இளைஞர்கள் முகாம், 8 துணிக் கூடாரங்கள், சிற்றுண்டி விடுதி ஆகியவை இதில் அடங்கும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தின் பத்தாண்டு நிறைவு விழாவும் இவ்விழா வுடன் இணைந்துகொண்டாடப்பட்டது.

மாண்புமிகு இந்திய அரசு சுற்றுலா-விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ஏ.பி. சர்மா அவர்கள் இவ்விழாவில் பங்கேற்று சுற்றுலாப் பயணியர் முகாமைத் திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி.ஆர். அவர்கள், திறந்தவெளி அருங்காட்சி யகத்திற்குக் கால்கோள் இட்டு, சுற்றுலா வளர்ச்சிக் கழகப் பத்தாண்டு நிறைவுவிழாவை யொட்டிய பரிசுகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழக அரசு செய்தி-அற நிலையம் - சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் தலைமையில் விழா நடைபெற்றது.

துவக்கத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச் சிக் கழகத் தலைவர் திரு துரைகோவிந்த ராசன் வரவேற்புரையாற்றினார். விழா முடி வில், சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாக இயக் குநர் திரு ஜே. ஆர். இராமநாதன் நன்றி கூறி னார்.

### சிறப்புரைகள்

இவ்விழாவில் பலரும் சிறப்புரையாற்றி னர்.

கடந்த ஓராண்டாக இம்முகாமை உருவாக்கப் பாடுபட்டவர்களுக்கும், அருங்காட்சியகம் எப்படி அமையவேண்டுமென அறிக்கை தயாரித்தளித்த குழுவினருக்கும் நன்றி தெரி வித்துக்கொண்டார் செய்தி சுற்றுலா தமிழ்ப் பண்பாட்டுத் துறைச் செயலாளர்திரு. பி.பி. கிருஷ்ணசாமி.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மாமல்லபுரம் சரித்திரச் சிறப்புடையதாக இருந்தது. அச்சிறப்பு மீண்டும் திரும்புவதற்கு அடையாளம் போன்றது இவ்விழா எனக் குறிப்பிட்டார், மத்திய சுற்றுலா-விமானப் போக்குவரத்துத் துறைச் செயலாளர் டாக்டர் திரு பி. வெங்கட்ராமன். மேலும் அவர் பேசு கையில், இந்தவிழா இந்திய அரசுக்கும் தமி ழக அரசுக்கும் இடையில் உள்ள நல்லுறவுக் கோர் எடுத்துக்காட்டு என்றார்.

திரு இரா. அன்பரசு எம்.பி. பேசுகை யில்—வசதிபடைத்தவர்களுக்காக நட்சத்திர ஓட்டல்கள் கட்டப்பட்டுவரும் இக்காலத்தில் ஏழை எளிய மக்களின் வசதி கருதி இப்படி யொரு முகாமைத் தமிழக அரசுஅமைத்திருப் பதை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன் என் றார்.

மாண்புமிகு தமிழகச் சிறப்புப் பிரதிநிதி திரு ஆர். மோகனரங்கம் எம்.பி. பேசுகை யில்-மாமல்லபுரத்தைச் சிறந்த சுற்றுலாமைய மாக்கத் தக்கவகையில் நாடாளுமன்றத்தில்








தான் ஆற்றிய உரைகளின் சாரங்களைச் சுருக்கிச் சொல்லி, அவைகளை விரைந்து நிறைவேற்றி தமிழகச் சுற்றுலாத் துறை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவ வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. துரைகோவிந்தராசன் - ஆங்காங்கே ஐம்பது, நூறு என்று வாடகை வசூலித்துவரும் இக்காலத்தில், எளிய மக்களும் சுற்றுலாத் தலங்களுக்கு வருகை தரவேண்டுமென்ற கருத்தில் உதகை போன்ற இடங்களில் கூட இப்படி ஏழரை ரூபாய் மட்டுமே வாடகையாக வரம்பிட்டு சுற்றுலா இளைஞர் முகாம்களை அமைத்திருக்கிறோம். தென்னிந்தியாவிலேயே சிறந்து விளங்குவது தமிழ்நாடு சுற்றுலாத்துறைதான் என்று பெருமையோடு குறிப்பிட்டார். மாமல்லபுரத்தில் குடும்பத்தோடு தங்கத் தகுந்த தனிக் குடில்களுக்கு ரூ. 30ம், துணிக் கூடாரங்களுக்கு ரூ. 10-ம் வாடகையாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

செங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு எச்.ஜே. இராமச்சந்திரன் பேசும்போது :- தமிழ்நாடு சுற்றுலாத்துறை, சென்ற ஆண்டில் இந்திய அரசுக்கு 564 கோடி ரூபாய் ஈட்டித் தந்துள்ளது. இந்தியாவுக்கு வெளிநாட்டிலிருந்து எட்டரை லட்சம் பயணிகள் வந்ததில் 30 ஆயிரம் பேர் தமிழகத்திற்கு வருகை தந்தனர் என்றார்.

தொகுதிச்சட்டமன்ற உறுப்பினர் திரு ஆனூர் பு. கோ. ஜெகதீசன் மாண்புமிகு மத்திய அமைச்சர், மாண்புமிகு முதல்வர், மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை-சுற்றுலா அமைச்சர் ஆகிய மூவருக்கும் பெரிய அளவிலான வாழ்த்து மடல்களைப் படித்தளித்தார்.

**தலைமை உரை**

விழாத் தலைமையேற்ற மாண்புமிகு செய்தி-அறநிலையம்-சுற்றுலாத்துறை அமைச்சர் திரு, இராம. வீரப்பன் அவர்கள் தனது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது:

இந்த விழாவுக்கு, இதற்கு முன்னால் மூன்று முறை நாள் குறிப்பிடப்பட்டு, மாண்புமிகு மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் வரச் சாத்தியப் படாததால்-நமது முதல்வர் அவர்கள், அவர் வருகிற வரை பொறுத்திருக்கலாம்; மத்திய அமைச்சர் இல்லாமல் விழாவா? அவர் எப்போது வர முடிகிறதோ அப்போது வைத்துக் கொள்ளலாம் என்று கூறியதன்பேரில் தள்ளிவைக்கப் பட்டு இப்போது நடைபெறுகிறது. மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடைப்பட்ட நல்லுறவுக்கு இதுவே சிறந்த எடுத்துக்காட்டாகும்.

ஏழரை ரூபாய் வாடகையில், 40 படுக்கைகள் கொண்ட பயணியர் முகாமை இங்கே மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். குடும்பத்தோடு தங்க 30 ரூபாய் மட்டுமே தனிக் குடில்களுக்கு வசூலிக்கப்படும்.

திறந்தவெளி அருங்காட்சியகத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டியுள்ளார். 50 இலட்சம் ரூபாய் செலவில் அமையவிருக்கும் அந்த அருங்காட்சியகத்தில், உலகமே காட்டுமிராண்டித்தனத்தில் இருந்த காலத்திலேயே தமிழன் எப்படி நாகரிகத்தோடு வாழ்ந்தான் - வளர்ந்தான் என்பதை விளக்கும் 50 தலைப்புகளிலான கல்வெட்டுகளும் சிற்பங்களும் இடம் பெறும் மூன்றாண்டுக் காலத்தில் இந்தப் பணி நிறைவடையும்.

மாமல்லபுரத்தில் ஒளி-ஒலிக் காட்சி அமைக்க, பாதித் தொகையைத் தர மத்திய அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது. ஆனால், தொல்பொருள் ஆய்வுத்துறை அதிலே கை வைக்காதே என்கிறது.

இந்த நிகழ்ச்சியையொட்டியாவது கடற்கரைக் கோயிலுக்கு, மிகவும் தள்ளி மணல் வெளியிலிருந்து விளக்குப்போடலாம் என்றிருந்தோம். அதற்கும் அவர்கள் மறுத்துவிட்டனர். எகிப்தில் பிரமிடுகளையெல்லாம் கூட இரவில் கண்டு ரசிக்கும்படி விளக்கலங்காரம் செய்யப்பட்டிருக்கிறது. இங்கே, சுற்றுலாத் துறை வளர்ச்சியின் குறுக்கே நந்திபோல் இருக்கிறது தொல்பொருள் ஆய்வுத்துறை.

பழங்காலச் சின்னங்கள் பாதுகாக்கப் படாவிட்டால் நாளடைவில் அவை அழிந்து விடக்கூடும். புராதனத் தன்மை கெடாமல் அவைகளைப் புதுப்பிக்க அனுமதி தருவதே முறையாகும்.

இங்கே, சென்னை விமானநிலையத்தில் வந்திறங்கும் பயணிகள் பெரும் கெடுபிடிகளுக்கு அவசியமில்லாமல் ஆளாகிறார்கள். இதனாலேயே பெரும்பாலோர் பம்பாயிலோ

டில்லியிலோ இறங்கிக் கொள்வதால்- தமிழகத்திற்குச் சுற்றுலா வரும் வெளிநாட்டுப் பயணிகள் எண்ணிக்கை குறைகிறது.

இது குறித்து நமது முதல்வர் அவர்களும் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளார். இந்தச் சங்கடங்கள் நீங்க மத்திய அமைச்சர் அவர்கள் ஆவன செய்திட வேண்டுகிறேன்.

முதலீடு இல்லாமலே அரசுக்கு நல்ல நிதி ஆதாரம் தேடித்தருவதாகச் சுற்றுலாத்துறை இருக்கிறது. ஆண்டுக்கு 500 கோடி ரூபாய் அளவுக்கு அந்நியச் செலாவணி ஈட்டித்தரும் இத்துறைக்கு மத்திய அரசு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும்.

**மத்திய அமைச்சர் உரை**

மாண்புமிகு மத்திய அரசு சுற்றுலா விமானப்போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ஏ.பி. சர்மா அவர்கள் பேச்சு விவரம் வருமாறு:

வேறுசில முக்கியப் பணிகள் காரணமாக, முன்பு மூன்றுமுறை தேதிதந்தும் வர இயலாமைக்காக வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலகிலேயே இந்தியா ஒரு மகத்தான நாடு. இந்தியாவில் தமிழகம் ஒரு மகத்தான நாடு. இந்த நாட்டின் வளர்ச்சியில் மத்திய அரசு பெரிதும் அக்கறை கொண்டுள்ளது. தமிழகச் சுற்றுலாத் துறை வளர்ச்சியில் நாங்கள் மிகவும் ஆர்வம் காட்டுகிறோம்.

சென்னை விமான நிலையத்தினருகே பத்துக்கோடி ரூபாய் செலவில் துணை விமான நிலையமொன்று 18 மாத காலத்தில் அமைக்கப்பட விருக்கிறது. இந்த விமான நிலையம் உள்நாட்டுப் போக்குவரத்துக்கு மட்டுமே பயன்படுத்தப்படும்.

மதுரை விமான நிலையத்தை விரிவுபடுத்த ஒரு கோடி ரூபாயும், திருச்சி விமான நிலையத்தை விரிவுபடுத்த 20 இலட்சம் ரூபாயும் நிதி ஒதுக்கியுள்ளோம்.

சென்னையிலிருந்து திருச்சிக்கு போயிங் விமானப் போக்குவரத்து தொடங்கப்பட்டுள்ளது.

ஜூலை முதல் தேதியிலிருந்து சென்னையிலிருந்து சிங்கப்பூருக்கும் கோலாலம்பூருக்கும் இடையே நேரடி 'ஏர்பஸ்' விமானப்போக்குவரத்து தொடங்கப்படவிருக்கிறது.

கல்கத்தாவில் உள்ளது போல், பம்பாயிலும் டில்லியிலும் கட்டப்பட்டு வருவது போல் - தமிழக முதல்வர் அவர்கள் இடம் தந்தால் சென்னை விமானநிலையம் அருகிலும் ஓட்டல் கார்பொரேஷன் மூலம் சர்வதேச ஓட்டல் ஒன்று கட்டப்படும்.

மாமல்லபுரத்தில் ஒளி-ஒலிக் காட்சி அமைக்க தொல்பொருள் ஆய்வுத்துறை தடையாக இருப்பதாகச் சொன்னார்கள். டில்லி செங்கோட்டையிலும், காஷ்மீர் சாலிமாரிலும் ஆமதாபாத் சபர்மதி ஆசிரமத்திலும், அதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. மாமல்லபுரத்தில் எதனால் இப்படி என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

கல்வித்துறையோடு தொடர்புடைய தொல்பொருள் ஆய்வுத்துறையோடு பேசி, மாமல்லபுரத்தில் ஒளி-ஒலிக் காட்சி நடத்த விரைவில் ஏற்பாடு செய்யப்படும்.

மாமல்லபுரம், கன்னியாகுமரி, இராமேசுவரம் போன்ற சுற்றுலாத்துறை மையங்களின் வளர்ச்சிக்கான 'மாஸ்டர்பிளான்' திட்டத்தை மத்திய அரசுக்குத் தமிழக அரசு அனுப்பியுள்ளது. அதில் ஒருபாதி நடப்பு ஆறாவது ஐந்தாண்டுத்திட்டக் காலத்திலும், மீதி ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

சென்னையுடன் பாண்டிச்சேரி, தஞ்சை, மதுரை, நெல்லை ஆகிய நகரங்களை இணைக்க உள்நாட்டு விமான சர்வீஸ் நடத்துவது பற்றியும் ஆலோசித்து வருகிறோம். மேற்குறிப்பிட்ட நகரங்களில் விமானநிலையம் இல்லாத இடங்களில் புதிதாக ஏற்படுத்தப்படும்.

ஆக்கப்பணிகளைப் பற்றிச் சிந்திக்கும் நேரத்தில் எல்லாம் தமிழ்நாடுதான் எங்கள் இதயத்திலிருக்கிறது.

**முதல்வர் உரை**

சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பத்தாண்டு நிறைவையொட்டி, சிறப்புறப் பணிபுரிந்த 59 பேர்களுக்குக் கைக் கடிகாரம்







வழங்கியும், சுற்றுலா ஏஜென்சியைச் சேர்ந்த வர்களுக்குக் கேடயம் வழங்கியும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பேசியபோது குறிப்பிட்டதாவது:

இந்த ஊரை மகாபலிபுரம் என்று சிலர் குறிப்பிடுகிறார்கள். அது தவறு. மாமல்ல புரம் என்பது தான் சரி. மகாபலிபுரம் என் றால் மகாபலி சக்ரவர்த்தியைக் குறிப்பிடுவது ஆகிவிடுமேதவிர, மாமல்லனைப் பற்றிய நினைவு வராமல்போய்விடும். ஆகவே, இனி யாவது மாமல்லபுரம் என்றே அழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே ஏழரை ரூபாயில் பயணிகள் தங்க விடுதி கட்டப்பட்டுள்ளது. ஏழை எளிய மக்கள் நலன் கருதியே இவ்வாறு செய்திருக் கிறோம். எந்த மாநிலத்திலிருந்து வந்தாலும் இந்த விடுதியில் தங்கிப்பயனடையலாம். இப் படிச் செய்திருப்பது தேசிய ஒருமைப்பாட் டுக்கு இலக்கணம் வகுத்ததாகும்.

இங்கே 25 ஏக்கர் நிலப்பரப்பில், 50 இலட்சம் ரூபாய் செலவில் அருங்காட்சியகம் ஒன்று இன்னும் சில ஆண்டுகளுக்குள் அமைக் கப்படவிருக்கிறது. இந்தக் காட்சியகத்தில் தமிழ்ப் பண்பாடு, கலை, கலாச்சாரம் ஆகிய வற்றைப் பிரதிபலிக்கும் 50 சிற்பங்கள் இடம் பெறும்.

மாமல்லபுரத்தில் மேற்கொள்ளப்படும் பலவகைப்பட்ட திட்டங்கள் காரணமாக, நாம் பாதிக்கப்படுவோமோ என்று இங்கிருப்ப வர்கள் அஞ்சத் தேவையில்லை.

... உலகத்தமிழ்- மாநாடு நடந்த நேரத்தில்-அமரர் அண்ணா அவர்கள், பூம்புகாரில் இருந்ததாமே அதைப் போலவே சென்னையிலிருந்து மாமல்லபுரம் வரை வழி நெடுகிலும் கடைகள் - அங்காடி கள் அமைக்க முடியுமா என்று என்னிடம் கேட்டார்கள். பிறகு அதுபற்றி யோசித்த போது, அதற்குப் பலகோடி ரூபாய்கள் தேவைப்படும் என்பதால் அத்துடன் நிறுத் தப்பட்டு விட்டது.

அப்படிப்பட்ட திட்டத்தின் முதற்கட் டமே இந்தப் பணி. எந்த நாட்டிலிருந்தெல் லாமோ வருகிறவர்களுக்கு, எல்லாப் பொருட் களும் கிடைக்கும் விதத்தில் வழி நெடுகிலும், இருபுறங்களிலும் கடைகள் அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு என்ற பெயர் வெளிநாடுகளி லெல்லாம் இன்னும் நல்லமுறையில் விளம் பரப் படுத்தப்படவேண்டியுள்ளது.

சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியாகப் பல் வேறு புதிய விமானப் போக்குவரத்துகளைத் தமிழ்நாட்டில் ஏற்படுத்தவிருப்பதாக மாண்பு மிகு மத்திய அமைச்சர் அவர்கள் குறிப்பிட் டார்கள். தமிழகம் என் இதயத்தின் அருகே இருக்கிறது என்றும் சொன்னார்கள். அதற் காக, அவர்களுக்குத் தமிழக அரசின் சார் பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர் கள் உரையாற்றினார்.

## பள்ளி நேரத்தில் மதபோதனை— கல்வி நிலையங்கள் தவிர்க்குமாறு வேண்டுகோள்

அண்மையில் ஒரு தொடக்கப்பள்ளிக்கு முதலமைச்சர் அவர்கள் முன்னறிவிப்பின்றி சென்றபோது பள்ளி நேரத்தில் மத போதனை நடந்துவந்ததைக் கண்டு, அவ்வாறு செய்வது விதிகளுக்குப் புறம்பானது என்று பள்ளித் தலைமையாசிரியருக்கு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்திய அரசியல் சட்டத்தின்படியும் தமிழ்நாட்டுக் கல்வி விதிகளின்படியும் அரசு கல்வி நிலையங்களிலும், உள்ளாட்சி மன்றக் கல்வி நிலையங்களிலும் பொதுவில் மத போதனை செய்யத் தடை உள்ளது.

அரசின் நிதியகங்களிலிருந்து முற்றிலும் பராமரிக்கப்படும் கல்வி நிறுவனம் எதிலும், சமய போதனை எதுவும் அளிக்கப்படுதல் கூடாது என அரசியலமைப்பின் 28 (1) ஆவது பிரிவு கூறுகிறது.

ஆனால் 28 (2) ஆவது பிரிவின்படி ஒரு கல்வி நிறுவனம் அரசினால் நிர்வகிக்கப்பட்டு, ஆனால் அதில் சமய போதனை வழங்கப்பட வேண்டும் என வேண்டுறுத்துகிற நிலை கொண்ட (Endowment) அல்லது கட்டளை (Trust) ஏதொன்றின் படியும் அது நிறுவப் பட்டிருப்பதாய் இருக்குமானால், அத்தகைய கல்வி நிறுவனத்திற்கு இந்தத் தடை பொருந் தாது. மேலும், அரசினால் அங்கீகரிக்கப் பட்டிருக்கிற அல்லது அரசு நிதியகங்கள் விருந்து உதவி பெறுகிற கல்வி நிறுவனம் எதிலும் பயிலுகிற எந்த நபரும் அத்தகைய நிறுவனத்தில் வழங்கப்படக்கூடிய சமய போதனை எதிலும் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும் என்றோ, அத்தகைய நிறுவனத்தில் அல்லது அதனுடன் சேர்ந்த இடம் எதிலும் நடத்தப் பெறக்கூடிய சமய வழிபாடு எதற்கும் வந்திருக்க வேண்டும் என்றோ, அத்தகைய நபரோ அல்லது அவர் இளையவராக (Minor) இருந்தால், அவருடைய காப்பாளரோ (Guardian) இதற்கு தம் சம்மதத்தை அளித்தாலன்றி, கட்டாயப்படுத்தப்படக் கூடாது என பிரிவு 28(3) தெளிவாகக் கூறுகிறது.

ஆகவே, அரசால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது அரசு மானியம் பெறும் தனியார் கல்வி நிலையங்களிலும் எந்தெந்த மாணவர்கள் அவர்கள் வயது வராதவர்களாயிருப்பின் அவர்கள் காப்பாளர்கள் மத போதனை பெற ஒத்துக் கொள்கிறார்களோ அவர்களுக்கு மட்டுமே சில நிபந்தனைகளுக்குட்பட்டு மத போதனை அளிக்கலாம். அத்தகைய மத போதனையைக் கல்வி நிலைய வேலை நேரத் தில் அளிக்கக்கூடாது. எந்தக் கல்வி நிலைய மாவது மேற்கண்டவற்றை மீறி நடப்பது பள்ளிக் கல்வித் துறைக்கோ பிற அரசுத் துறைக்கோ தெரியப்படுத்தப்பட்டால் அத்துறை கள் தக்க நடவடிக்கை எடுக்கும்.

மேற்சொன்ன விதிமுறைகளுக்குப் புறம் பாக எந்தப்பள்ளியிலும் மத போதனை அளித்தல் இந்திய அரசியல் சட்டத்திற்கும் கல்வி விதி களுக்கும் புறம்பானதாகையால் தவிர்க்கும்படி அனைவருக்கும் அரசு அறிவுறுத்துகிறது.



காயிதெ மில்லத் முகமது இஸ்மாயில் அவர்களின் 87வது பிறந்தநாள் விழா, தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு. கா. இராசாமுகமது அவர்கள் தலைமையில் ஜூன் 5ஆம் நாளன்று சென்னை ராஜாஜி மன்றத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

துவக்கத்தில் இசைமணி திரு யூசுப் தமது குழுவினருடன் இன்னிசை விருந்தை வழங்கினார். காயிதெ மில்லத் அவர்களின் சிறப்புகளை எடுத்துரைக்கும் பாடல்களை அழுத்தமான உச்சரிப்புடனும் அன்பு நிறைந்த உணர்வுடனும் பாடி, அவையினரை வயப்படுத்திக் கொண்டிருந்தார்.

விழாவுக்குத் தலைமை ஏற்ற மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு கா.இராசாமுகமது அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்.

''சொல்லாலும் செயலாலும் தூயவராக-ஒழுக்கத்தின் உறைவிடமாக, பண்பாட்டின் வடிவமாகத் திகழ்ந்தவர் காயிதெ மில்லத் அவர்கள். ஆயிரம் ஆண்டுகளுக்கிடையே அவரைப்போன்ற மனிதர்கள் வாழ்ந்தது கிடையாது.

''அவரது நூல்களைப் படிக்கின்றபோது, ஒரு மனிதரின் உள்ள உணர்ச்சியை மட்டுமல்ல, அந்தக் கால கட்டத்தையே பார்க்க முடிகிறது.

''சூழ்நிலையின் காரணமாக-தோன்றிய இடத்தின் காரணமாக அன்றிருந்த சாலகட்டத்தின் காரணமாக அவர் எந்தவிதமான மாற்றமும் அடையவில்லை. அதனால் தான் கண்ணியத்துக்கு உரியவர் என்று அவர் சொல்லப்பட்டார்.

''இனிமை, எளிமை, அறிவு, ஆற்றல், திறன், அன்பு, பணிவு, வாய்மை, தூய்மை, இவற்றின் மொத்த உருவம் காயிதெ மில்லத் அவர்கள். பேச்சை, மூச்சை, எண்ணத்தை, எழுத்தை, சிந்தனையை, செயலை, வாழ்வை, வளத்தை, உழைப்பை, உயிரை நாட்டுக்கு அர்ப்பணித்த தலைவர் அவர்''

அடுத்து உரையாற்றிய வலம்புரிஜான் தெரிவித்தார்:

''காயிதெ மில்லத் அவர்கள் நாட்டுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட நாட்டுத் தலைவர் மட்டுமல்லர், மொழிப்போராட்டத் தலைவரும் ஆவார்.

''அவரது பார்வை விசாலமானதாக இருந்தது. அவர் அறிவு ஜீவியாக வாழ்ந்தார். தீர்க்கதரிசன உள்ளம் கொண்டிருந்தார்''.

அடுத்து உரையாற்றிய திரு. ஏ.பி. ஜனார்த்தனம் குறிப்பிட்டார்:

''காயிதெ மில்லத் அவர்கள் சிறந்த பண்பாளர். அவர் அடக்கத்தின் எல்லை. உறுதி மிக்க தலைவர்; அவரது சிந்தனைகள் சீரியவையாகும். பெருந்தன்மையும் விட்டுக்கொடுக்கும் தன்மையும் அவரிடம் இருந்தன.'

அடுத்துப் பேசிய திரு செய்கு தம்பி குறிப்பிட்டார்:

''கண்ணியமிக்க என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்ட பெருமை படைத்தவராக விளங்கினார் காயிதெ மில்லத் அவர்கள். அந்தச் சிறப்புக்கு உரியவராக இறுதிவரை வாழ்ந்தார்.''

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள், காயிதெ மில்லத் அவர்களின் உருவப் படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார். அப்போது அவர் தெரிவித்தார்:

''இன்று காயிதெமில்லத் அவர்களின் பிறந்தநாள்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர் பிறந்த முஸ்லீம் சமுதாயம் இந்த விழா

நிகழ்ச்சித் தொகுப்பு :

**தமிழ்ப்பித்தன்**





வைக்கொண்டாடவில்லை. அவர் சார்ந்திருந்த முஸ்லீம்லீக் கட்சி அவரது பிறந்த நாளைக்கொண்டாடவில்லை. ஆனால் தமிழக அரசே இன்று கொண்டாடுகிறது என்பது சிறப்பான செய்தியாகும்.

''அவர் நாடாளுமன்ற உறுப்பினராக டெல்லியில் வீற்றிருந்தபோது, பத்தாண்டுக்காலம் அவரது அருகில் அமர்ந்திருக்கும் பேறு எனக்குக் கிடைத்தது.

''சென்னையிலிருந்து டில்லி நோக்கி ரயில் பயணம் செய்யும்போதெல்லாம் அவருடன் பல முறை செல்லும் வாய்ப்புப் பெற்றிருந்தேன். அந்தப் பயணம் இன்பப் பயணமாக அமைந்திருக்கிறது. மறக்க முடியாத பயணங்கள் அவை.

"பயணத்தின்போது, உடனிருப்போரைக் களைப்புக்கு ஆளாக்காமல், இந்திய சரித்திரத்தைச் சொல்லிக் கொண்டே வருவார்.

''ஜனாப் ஜின்னா அவர்கள் பாகிஸ்தானைப் பெற்ற பிறகு, இந்திய நாட்டில் முஸ்லீம் லீக் கட்சிக்கு ஒரு தலைவர் தேவைப்பட்டார். அப்போது காயிதே மில்லத் அவர்களையே ஜின்னா தேர்ந்தெடுத்தார்.

''பம்பாயில், ஆக்ராவில், டெல்லியில், கல்கத்தாவில் எல்லாம் முஸ்லீம் லீக்கின் பெரும்புள்ளிகள் இருந்தனர். அவர்கள் எல்லாம் வசதி படைத்தவர்கள். காயிதெமில்லத் அவர்களை விட பட்டத்திலும் பணத்திலும் அந்தஸ்திலும் உயர்ந்தவர்கள். என்றாலும், காயிதெமில்லத் அவர்களைத்தான் இந்திய முஸ்லீம்களுக்கு வழிகாட்டியாகத் தேர்ந்தெடுத்தார் என்றால், காயிதெ மில்லத் அவர்களின் சிறப்பு எளிதாக விளங்கும்.

''தலைமைப் பதவியைப் பெற்றவுடன், காயிதெ மில்லத் அவர்கள் ''நாங்கள் இந்திய நாட்டின் முஸ்லீம்கள். நீங்கள் வேறு நாட்டவர்கள்; எங்களின் நிலை உங்கள் நிலையினின்றும் மாறுபடுகிறது'' என்று ஜின்னா அவர்களை வைத்துக்கொண்டு சொன்னார்.

''காயிதெ மில்லத் அவர்களுக்குத் தேசிய பாரம்பரியம் இருக்கிறதா? நாட்டுப் பற்று இருக்கிறதா என்று சிலர் கேட்டதுண்டு.

''சென்னை ராஜதானிக் கல்லூரியில் பி.ஏ. படித்துக்கொண்டிருந்தவர், சுதந்திரப் போராட்டத்தின் காரணமாகப் படிப்பை உதறி வெளியே வந்தார்.

'அவர் அன்புக்குக் கட்டுப்பட்டவர்; அதிகாரத்தினாலோ, பணத்தினாலோ, பலத்தினாலோ சட்டத்தினாலோ அவரை வளைத்துவிட முடியாது.

சொல்ல வேண்டிய கருத்துக்களை அவர் ஆணித்தரமாகச் சொல்லுவார்.



1962ல் அறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்றத்தின் ராஜ்ய சபாவின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தபோது அவர்கள் அடிக்கடி அங்குள்ள நூலகத்திற்குச் செல்வதுண்டு. அப்படி அங்கு சென்று படித்தபோது, காயிதெ மில்லத் அவர்களின் நாடாளுமன்றப் பேச்சு வெளியிடப்பட்டிருந்த புத்தகத்தை அண்ணா அவர்கள் காண நேர்ந்தது.

''இந்தியாவின் ஆட்சிமொழியாக இருக்கத் தகுதி படைத்தது தமிழ்மொழி ஒன்றே'' என்று காயிதெ மில்லத் அவர்கள் ஒரு முறை பேசியிருந்தது அந்தப் புத்தகத்தில் வெளியாகியிருந்தது. அதைப் படித்துவிட்டு அறிஞர் அண்ணா அவர்கள்தான் காயிதெ மில்லத் அவர்களின் மொழிக் கொள்கையை நாட்டுக்கு எடுத்துரைத்தார். காயிதெ மில்லத் அவர்கள் 'நான் இவ்வாறு தமிழுக்கு ஏற்றம் தந்து பேசினேன்' என்று ஒரு இடத்தில் கூடக் கூறியதில்லை. அதிலும் அவர் அடக்கமாகவே காட்சியளித்தார்.

''5 ஆண்டுக் காலம் சென்னை மாநிலச் சட்டமன்றத்திலும் உறுப்பினராக் இருந்திருக்கிறார். எதிர்க்கட்சி என்றால் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு இலக்கணமாக அவர் திகழ்ந்தார்; வரம்பு மீறி அவர் ஒரு போதும் பேசியது கிடையாது. அரசியலில் அடி எடுத்து வைக்கும் இளைய தலை முறையினருக்கு அவரது சிந்தனைகள் வழி காட்டியாக அமையும் என்பது உறுதி.''

அதன்பின்னர், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஆய்வு அலுவலர் திரு பரஞ்சோதி நன்றி கூற, விழா இனிது நிறைவேறியது. காயிதெ மில்லத் அவர்களின் பிறந்தநாள் விழா, கருத்தில் நிறைந்த விழாவாக மலர்ந்தது.

# திரிபுராவில் ஒலித்த தீந்தமிழோசை



யோ. தேவசகாயம்,
செய்தி-சுற்றுலா மற்றும்
தமிழ்ப் பண்பாட்டுத் துறை.

மத்திய அரசின் மாநிலங்களிடையே கலைக் குழுக்கள் பரிமாற்றத் திட்டத்தின்படி, திரிபுரா மாநில அரசு, தமிழக அரசின் கலைக் குழுவிற்கு அழைப்பு விடுத்தது. இந்திய ஒருமைப் பாட்டுக்குச் செந்தமிழ் நாட்டின் சீரிய பங்கினையாற்று முகத்தான், மறைந்த நாட்டியக் கலை மேதை; தாமரைத் திரு. தண்டாயுதபாணியின் தவப்புதல்வி, செல்வி உமாவின் "சுரவந்திதா" எனும் நாட்டியப் பள்ளி, நந்தமிழ்க் கலைப் பெருமைகளை நனி சுமந்து, வட கிழக்கெல்லையில், வங்க தேசத்தின் வளைபிடியுள் இருக்கும் திரிபுராவை நோக்கி 21.4.82 அன்று, கலைப் பயணம் மேற்கொண்டது.

23.4.82 அன்று காலை இரண்டு நாள் பயணத்தின் களைப்பு கல்கத்தா மாநகரில் கால்பட்டபோது தெரிந்தது. ஓடும் மேகங்களிடையே ஓடி, ஆடும் நதிகளின் மேல் ஆடி, அரை மணி நேரத்தில் அகர்தாலா நகரை அணைத்து நின்றது அந்த விமானம். தமிழ்க் கலைஞர்களை வரவேற்க, திரிபுரா அரசின் கல்வித் துறையே திரண்டு வந்திருந்தது. மலர்ந்த முகங்களின் கரங்கள் மலர்ச் செண்டுகள் வழங்கின. மகிழ்ச்சிப் பெருக்கில் அவர்கள் மனமொழிகள் கேட்டன.

சட்டமன்ற உறுப்பினர் விடுதி சந்தோஷக்களை கட்டியிருந்தது. வீசிய இளங்காற்றில் வெள்ளை மலர்கள் காலில் விழுந்து கொண்டிருந்தன. சிறிய நகரம். செந்நாப்போதரின் விருந்தோம்பல் அதிகாரத்துக்கு விரிவுரையாற்றும் வெள்ளை நெஞ்சங்கள், திரிபுராவின் அறிமுகமே திகைக்கச் செய்தது. மாலையில் வரவேற்பு வரிசங்கு முழங்கும் வஞ்சியர் ஒரு வரிசை, நறுந் திலகமிட்டு வணங்கிய நங்கையர் ஒரு வரிசை, மாலையிட்டு மகிழ்ந்த மங்கையர் ஒரு வரிசை. இவரிடையே கணியன் பூங்குன்றனாரின் கவியோசை நெஞ்சில் எதிரொலித்தது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று திரிபுரா மக்களிடையே ஒன்றானோம். காட்சிக்கு எளியராம் கல்வி அமைச்சர் வந்தார். கனிவுடன் வாழ்த்தி வரவேற்றார். இரட்டை இனிப்புகள் வழங்கப்பட்டன. வழங்கியவர்கள் நேசம் நினைந்த போது அவை திகட்டவில்லை.

24.4.82 முதன் முதலாக திரிபுராவில் தமிழ் ஒலித்தது. பாரதியின் பாடல்களை உமா தண்டாயுதபாணி உணர்ச்சியோடு பாடினார். அவற்றுக்கு உருக்கொடுத்து



உயிர் கொடுத்து ஆடினர் கலைச் செல்வியர். இன்னொரு முறை, இன்னொரு முறை என்று கெஞ்சும் குரல்கள் கேட்ட வண்ணமிருந்தன. ஆடல் வருணனைகளை ஆங்கிலத்தில் நானுரைக்க பேராசிரியர் முகர்ஜி, வங்க மொழியில் மொழி பெயர்த்தார். பாரதியைத் தென்னகத் தாகூர் என்று சொன்னவுடன் கரவொலிகள் முழங்கின. நிகழ்ச்சி நிறைவுற்றும், மண்டபத்தில் மக்கள் வெள்ளம் நீங்காது நின்றது. தமிழ்க் கலை சொன்ன தூதின் மகிமைதான் என்னே!

26.4.82 அன்று காலையிலிருந்தே கலைக் குழுவினர் பரபரப்புடனிருந்தனர். தங்கள் கல்வி அமைச்சர், தங்களைக் காண, தமிழ்க் கலையினைக் காண, அன்று அகர்தாலா வருகிறார் என்ற செய்தி கேட்டதும் சிறுமியர் முதல், பெரியவர் வரை உற்சாகமாயிருந்தனர். கலைக் குழுவினர் மொத்தமும் கல்வி அமைச்சரை வரவேற்க விமான நிலையம் புறப்பட்டனர். கல்வி அமைச்சரும், செய்தி, சுற்றுலா (தமிழ்) பண்பாட்டுத் துறைச் செயலாளரும் நண்பகல் வந்து சேர்ந்தனர். களைப்புடன் காணப்பட்ட கல்வி அமைச்சர் கலைஞர்கள் மத்தியில் தம் களைப்பினை மறந்தார். கனிவுடன் உரையாடினார்.

அன்று மாலையில் நடந்த இரண்டாம் கலை நிகழ்ச்சி, இதயத்தை விட்டகலா இனிய நிகழ்ச்சியாகும். மாண்புமிகு கல்வி அமைச்சர் தமிழக மக்களின் சார்பாக, நிறையப் பரிசுகள் கொண்டு வந்திருந்தார். திரிபுரா மாநிலக் கல்வி அமைச்சருக்கும், கல்விச் செயலாளருக்கும், அகர்தாலா நகராட்சித் தலைவருக்கும், மலை வாழ் கலைஞர்களின் தலைவருக்கும், மாண்புமிகு கல்வி அமைச்சர் தமிழகத்து நினைவுப் பரிசுகளை வழங்கினார். திரிபுரா அரசு சார்பாக, மாண்புமிகு கல்வி அமைச்சருக்கும், செயலாளருக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. தேசிய ஒருமைப் பாட்டுணர்வை வளர்ப்பதில் தமிழகத்தின் தானைத் தலைவர், புரட்சித் தலைவரின் தலைமையில் தமிழக அரசு முன்னணியில் விளங்குகிறதென்றும், கலையைக் காத்து வளர்ப்பதில், கலைஞர்க்கெல்லாம் கலைஞராய் விளங்கும் முதல்வர் கண்ணும் கருத்துமாய் இருக்கிறாரென்றும், அத்தகைய முதல்வரைப் பெற்ற தமிழ் மண்ணிலிருந்து வந்துள்ள தமது கலைஞர்கள், திரிபுரா மக்களின் மனதினைத் தங்கள் கலையின் வாயிலாகத் தொட்டிழுப்பார்கள் என்று தாம் நம்புவ

தாகவும், மாண்புமிகு கல்வி அமைச்சர் தம் சிறப்புரையில் குறிப்பிட்டார். மேலும், திரிபுரா மாநிலம், தனது கலைக் குழுவை தமிழகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அன்புடன் அழைப்பு விடுத்தார். மாண்புமிகு தமிழகக் கல்வி அமைச்சரின் அழைப்பைத் தாம் நன்றியுடன் ஏற்பதாகத் திரிபுரா அரசின் கல்வி அமைச்சர் பதிலுரைத்தார். அன்றிரவு திரிபுரா மாநிலக் கல்வி அமைச்சர் விருந்தளித்தார். அடுத்த நாள் காலை, கலைக் குழுவின் தலைவி செல்வி உமா தண்டாயுதபாணிக்கும், அகர்தாலா நகராட்சித் தலைவருக்கும் மாண்புமிகு தமிழகக் கல்வியமைச்சர் தேநீர் வழங்கினார். கலைப் பயணம் வெற்றியடைய வாழ்த்துக் கூறி, விடை கொடுத்தார்.

27.4.82 அன்று கல்வி அமைச்சரிடம் விடை பெற்ற கலைக் குழு தர்மா நகர் எனும் மாவட்டத்தை நோக்கிப் புறப்பட்டது. மஞ்சு தவழும் மலைத் தொடர்கள். மலையைத் தொடும் மரக் காடுகள். இயற்கை கொஞ்சும் எழில் பள்ளத்தாக்குகள், செண்பகப் பூக்களின் சிரிப்பு....எதிலும் மனம் லயிக்கவில்லை. மேட்டிலும், பள்ளத்திலும், வளைவுகளிலும், சரிவுகளிலும், உருண்டு சென்றது, பேருந்து. குடல்கள் குலுங்கின. எலும்புகள் அதிர்ந்தன. உடல்கள் வாடின. இளைத்துக் களைத்து, இருட்டில் சென்றடைந்தோம். தர்மா நகர் மிகச் சிறிய ஊர், உணவும் உறைவிடமும் வேண்டிய அளவுக்கு ஏற்பாடு செய்ய இயலாத நிலை. இத்தனை சோர்விலும், இலட்சியப் பயணம் தொடர்ந்தது.

கட்டுக் கடங்காத மக்கள் கூட்டம் கலையரங்கில் கூடியிருந்தது. அடங்கா ஆர்வத்தைத் தணிக்க அதிக நேரம் கலை நிகழ்ச்சி நடத்தி நள்ளிரவு பன்னிரெண்டு மணிக்கு கலைஞர்கள் திரும்பினர். ஒரே நாளில் இங்கு இரண்டு நிகழ்ச்சிகள் நடத்தினர். 29.4.82 அன்று தர்மா நகரை விட்டு தமிழகக் கலைக் குழு, புறப்பட்டு, கைலாச சாகர் எனும் மாவட்டத்தை அடைந்தது. 'வருக! வணக்கம்!!' என்று வரவேற்ற தமிழ்ப் பதாகைகள் புத்துணர்வூட்டின. அன்றும் இரண்டு நிகழ்ச்சிகள்; அடுத்த நாள் அகர்தாலா வந்து ஓய்வெடுத்தனர். 1.5.82 அன்று உதயப்பூர் பயணம். உதயப்பூர் ஒரு எழில் கொஞ்சும் சிற்றூர். வனப்பும் வளமையும் வழங்கியவாறு ஒரு பெரிய ஏரி. அந்த ஏரியின் கரை மீது கலைக் குழுவினருக்கு வரவேற்பு. ஏழாவது கலை நிகழ்ச்சி இங்கு இனிதே முடிந்தது.



**எட்டாம் நிகழ்ச்சி, என்றும் மறக்கவொண்ணாத் தன்மையுடைத்து. திரிபுரா மாநில முதலமைச்சர் மாண்புமிகு நிருபன் சக்ரபார்த்தி அவர்கள் அன்றைய நிகழ்ச்சிக்குத் தலைமையேற்றுச் சிறப்பித்தார். எழுபத்தைந்து வயதினைக் கடந்து விட்ட இளைஞர் அவர். தோற்றத்திலும், பழக்கத்திலும், மறைந்த பெருந்தலைவர் காமராஜரை நினைவூட்டினார். எளிமையே வடிவான முதலமைச்சர், இனிமையாகப் பேசினார். இதயம் திறந்து பேசினார். தமது சிறப்புரையில் தமிழக முதல்வரை அன்புடன் நினைவு கூர்ந்தார். நீண்ட நாள் பழகிய நெருங்கிய நண்பர் போல், முதலமைச்சர்கள் மாநாட்டில், தம்முடன் தமிழக முதல்வர் பழகியது பசுமையாய் தம் மனதில் இருப்பதாகவும், பாசம் நிறைந்த தமிழக முதல்வருக்குத் தேசம் நிறைந்த வாழ்த்துக்களையும், நெஞ்சம் நிறைந்த வணக்கங்களையும் உரித்தாக்குவதாகவும் குறிப்பிட்டார். கலைகள் சிறந்த தமிழ்நாட்டில் கலைஞர்களை வாழ்த்தி, நினைவுப் பரிசுகள் வழங்குவதைத் தாம் பெரும் பேறாகக் கருதுவதாக அவர் குறிப்பிட்ட போது கரவொலி அதிர்ந்தது. கண்களில் ஆனந்தக் கண்ணீர் திக்கு முக்காடியது. எங்கள் மாநிலம் சிறிய மாநிலம். செய்ய நினைத்த வசதிகளைச் செய்ய முடியாமற் போயிருக்கலாம். குறைகளை மன்னித்து, எங்கள் அன்பினை ஏற்றுக் கொள்ளவும்' என்று அவர் பேசியபோது, திக்கு முக்காடிக் கொண்டிருந்த கண்ணீர் திரண்டு வழிந்தது.**

**3.5.82 அன்று கொவ்வாய் எனும் சிற்றூரில் இறுதி நிகழ்ச்சி. மக்கள் வெள்ளம் திரண்டிருந்தது.** மழை பொழிந்து கொண்டே இருந்தது. மழையைப் பற்றி மகாகவி பாரதியார் பாடிய பாட்டை உமா உணர்ச்சியோடு பாட, ஒப்பற்ற நடனமொன்று அரங்கேறியது. கொவ்வாயில் கலை நிகழ்ச்சி நடந்த கலை அரங்கிலிருந்து, வங்க நாடு, கூப்பிடு தொலைவில்தான் இருந்தது. வலது பக்கம் வங்கம், இடது பக்கம் இந்தியா என்று நெருக்கமாக எல்லை பிரிந்திருக்கிறது. எல்லையைக் கண்டோம், எல்லைக்கப்பால் உள்ள வங்க நாட்டிலும், தங்கத் தமிழோசை கேட்டிருக்கக் கூடும்.

4.5.82 அன்று கண்கள் கலுழ்ந்தன. நெஞ்சங்கள் நெகிழ்ந்தன! விடை பெறும் நாள்! வீசி வரவேற்ற இளங்காற்றும் விழுந்து வணங்கிய மலர்களும் வேரிற் பழுத்த பலாக்களும் சோகமேற்று சோர்ந்தன. வெறிச்சோடிக் கிடந்த விடுதியைப் பார்த்து விருந்தோம்பினோர் விம்மினர். கலையின் மொழிக்கு எத்தனை பொருள், எத்தனை ஆழம் என்றுணர்ந்தேன். கணேசன் என்ற தமிழர் கைநிறைய இனிப்புடனும், கண் நிறைய நீருடனும் நின்ற காட்சி நெஞ்சை வலிக்கச் செய்தது. அன்பு, பண்பு, ஆசை, பாசம், அடக்கம் அனைத்தும் திரண்டு வந்து கரமசைத்தன. மெல்ல நகர்ந்தது, விமானம். பிரிந்தவர்கள் வேதனையைத் தவிர்ப்பது போல, வேகமுடன் மேலே எம்பியது விமானம். கீழே அகர்தாலா. ஒரே நிமிடம்.. மீண்டும் ஓடும் மேகங்கள்.. ஆடும் நதிகள்... நிழலாடும் நினைவுகள்! திரிபுராவில் ஒலித்த தீந்தமிழோசை தீராத ஓசை! காலத்தால் மாறாத ஓசை!!

# சத்துள்ள சனோலா

வே. கருப்பன், இ.ஆ.ப.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம்.

**1966**-ஆம் ஆண்டு உழவர்களுக்கு உறுதுணையாய் இருக்க தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம் என்ற ஒரு அமைப்பு உண்டாக்கப்பட்டு, முதலில் டிராக்டர், ஆயில் என்ஜின் போன்ற விசைக் கருவிகளை தவணை முறையில் வாங்கி அளித்து, பெரும் அளவிற்கு உணவு உற்பத்தி செய்ய உதவிகரமாக இருந்தது. நாளடைவில் உழவுத் தொழிலில் நல்ல முன்னேற்றம் அடைந்ததன் காரணமாகவும், உழவர்கள் நேரிடையாக இக்கருவிகளை வாங்கிப் பயன்படுத்த, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் முன் வந்ததன் காரணமாகவும், தாய் தன்னுடைய இலக்கத்திலிருந்து மாறுபடாமல் வேளாண்மைத் தொழிலுக்கு உறுதுணையாக வேறு எந்த விதத்தில் இருக்க முடியும் என்பதை ஆராய்ந்து பல தொழில்களை தேவைக்கு ஏற்ப செயல்படுத்தி வருகிறது. டிராக்டர் போன்ற கருவிகளை வாங்கியும் இவ்விணையத்தில் உதிரி பாகங்களை குறைந்த விலையில் தரம் உயர்ந் தவைகளாகப் பெற்றும் உழவர்களுக்கு அளித்து விவசாயத்திற்கு சீரிய சேவை செய்து வருகிறது.

இது தவிர பி ஹெச்ஸி 10./• டிடிடி 25./• போன்ற பூச்சி கொல்லி மருந்துகளை தரமாக உற்பத்தி செய்து குறைந்த விலையில் உழவர் களுக்கு கிடைக்க, தாய் நிறுனம் முயற்சி செய்து வருகிறது. தாய் நிறுவனத்திலிருந்து அளிக்கப்பட்டு வருகின்ற பிஹெச்ஸி 10./• இன்று உழவர்களிடத்திலே பெரும் வரவேற்பைப்பெற்றிருக்கிறது.

மேலும் சூரியகாந்தி எண்ணையை உற்பத்தி செய்தும், சுத்திகரித்தும் நல்லதொரு விற்பனை நிலையமாகத் தன்னை மாற்றிக் கொண்டுள்ளது. சூரியகாந்திப் பயிர் ஆரம்ப காலத்திலே விளைவித்தபோது பயிர் நன்றாக விளைச்சலைக் கொடுத்தாலும், நல்ல விலையைப் பெற முடியாத காரணத்தினாலும், சூரியகாந்தி எண்ணையின் தரமும், குணமும், மக்களுக்கு விரிவாகத் தெரியாமல் இருந்த காரணமாகவும் சூரியகாந்தி விதையை வாங்கி எண்ணையைப் பிழிந்து விநியோகிக்கப் பலர் முன் வராததன் காரண ாகவும், உழவர்களிடத்திலே பெரும் ஏமாற்றம் ஏற்பட்டு ஏறக்குறைய 60,000 ஏக்கர்களுக்கு மேல் பயிராகி வந்த சூரியகாந்திப் பயிர் மிகவும் குன்றந்து, பகுதியிலேயே சூரியகாந்திப் பயிர் இருக்குமோ என்ற அளவிற்கு ஒரு நிலையை அடைந்த போது தாய் நிறுவனம் அதை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு சூரியகாந்தி எண்ணையைப் பிழிந்து, சுத்திகரித்து, நல்ல முறையிலே மக்களுக்கு விநியோகிக்க முன் வந்தது. இதன் மூலமாக சூரியகாந்தி விதையைப் பயிர் செய்வோர்களுக்கு நல்லதொரு விலை கிடைக்கவும் வகை செய்தது. போச்சம் பள்ளியில் 1978ம் ஆண்டு சூரியகாந்தி விதையிலிருந்து எண்ணையைப் பிழியும் ஆலை ஒன்றை அமைத்து, சூரியகாந்தி எண்ணையை சுத்திகரித்து, சென்னை, பெங்களூர், கொச்சி, ஹைதராபாத் போன்ற பல முக்கிய நகரங்களிலே விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு நல்ல முறையில் விநியோகமும் செய்து வருகின்றது. 1978-79ம் ஆண்டு மட்டும் இந்த ஆலையில் இருந்து ஏறக்குறைய ரூபாய் 48 லட்சத்திற்கு மேல் ''சனோலா'' என்ற சூரியகாந்தி எண்ணெய் விற்பனையாகி உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இதன் உற்பத்திபெருகி நடப்பு ஆண்டு மட்டும் ஏறக்குறைய ஒரு கோடி மதிப்புள்ள 3500 டன்னுக்கு மேல் விதை கிடைக்கும் அளவிற்கு இந்தப்பயிர் மீண்டும் மறுமலர்ச்சி பெற்றிருக்கிறது. இது இந்த தாய் இணையகத்தின் ஒரு தனிப்பெரும் சாதனை என்று சொன்னால் அது மிகையாகாது. உழவர்கள் இந்தப் பயிரை வளர்ப்பதில் கவனம் செலுத்துகிறார்கள். அதன் மூலம் நல்லதொரு சத்துள்ள, அதேசமயத்தில், சுகவாழ்விற்கு ஏதுவான ஒரு எண்ணையை மக்களுக்கு அளிக்கும் பேற்றை தாய் இணையகம் பெற்றதை பெருமையாகக் கருதுகிறது.

ஆகவே, ''சனோலா'' என்ற சூரியகாந்தி எண்ணெய் உபயோகிப்பதன் மூலம் இருதய நோயாளிகள், கொழுப்புச் சத்து அதிகம் உள்ளவர்கள் ,ரத்த அழுத்தம் உள்ளவர்கள் ஆகியவர்களுக்கு ஒரு பேரமிர்தம் ஆகவும், மணமும், நிறமும், குணமும் ,குன்றாமலும், விரும்பி உண்பதற்கு ஏதுவான சத்துள்ள உணவுப் பொருட்களை உண்டாக்குவதற்கும் உதவிகரமாக இருக்கிறது. குறைந்த காலத்திலே பயிரிடுவதன் மூலமாகவும், குறைந்த செலவிலே இப்பயிரை உற்பத்தி செய்ய முடியும் என்பதாலும், இவ்விளைச்சலின் மூலம் குறைந்த காலத்திலே நிறைந்த லாபம்பெறமுடியும் என்றகாரணத்தினாலும், உழவர்களுக்கும் இது ஒரு பேருதவியாக இருக்கும் பயிர் வகையாகும்.

உண்பதற்கு ஒரு சிறந்த மருந்தாகவும், உற்பத்தியாளர்களுக்கு ஒரு சிறந்த விளைபொருளாகவும் இருக்கின்ற ஒரு இணைப்பை இந்த தாய் நிறுவனம் செய்திருக்கிறது. இதன் வளர்ச்சி மேலும் பெருகிடும்; நல்லதோர் எதிர்காலத்தை ''சனோலா'' பெறும் என்பது உறுதி.

''சனோலா'' என்ற சூரியகாந்தி எண்ணெய் இன்று இவ்வளவு சீரும் சிறப்போடும் விற்பனை ஆகி வருவதற்குக் காரணம், இந்த எண்ணெய், மருத்துவர்களிடையே ஒருபெரும்

வரவேற்பினைப் பெற்றதேயாகும். மருத்துவர்கள் குழாம் இன்று இந்த எண்ணையை, இருதய நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கும், கொழுப்பு சத்து அதிகம் ஆகி அவதிப்படுபவர்களுக்கும் சிபாரிசு செய்வதால், அவர்களுக்கு இது ஒரு பேரமிர்தமாகி அமைந்திருக்கிறது. இதய நோய் நிபுணர்கள் இந்த எண்ணையை வாங்கி உபயோகிக்கும்படி தம்மிடம் வரும் நோயாளிகளை ஊக்குவிக்கிறார்கள். ஏன், நமது மாண்புமிகு தமிழக முதல்வர்கூட தாம் செல்லும் விருந்துகளிலெல்லாம் பலகாரங்கள் ''சனோலா'' என்ற சூரியகாந்தி எண்ணையில் செய்யப்பட்டவைதானா என்பதை அடிக்கடி விசாரித்து அதை உபயோகிக்குமாறு ஊக்குவிப்பது அனைவருக்கும் தெரிந்ததே.



சில முக்கிய சமையல் எண்ணெய் வகைகளின் உட்பொருள்களின் வகைகள்:—

| எண் | எண்ணெய்-கொழுப்பு வகைகள் | பூரிதகொழுப்பு அமிலங்கள் | அபூரித கொழுப்பு அமிலங்கள் | உடலுக்கு தேவையான கொழுப்பு அமிலங்கள் |
|---|---|---|---|---|
| | | சதவிகிதம் | சதவிகிதம் | சதவிகிதம் |
| 1. | சூரியகாந்திவிதை எண்ணெய் | 7.50 | 34.00 | 58.05 |
| 2. | பருத்திகொட்டை எண்ணெய் | 21.70 | 35.80 | 42.5 |
| 3. | நல்லெண்ணெய் | 13.60 | 47.40 | 39.0 |
| 4. | கடலை எண்ணெய் | 17.40 | 61.20 | 21.4 |
| 5. | பாம் ஆயில் | 47.50 | 43.00 | 8.5 |
| 6. | நெய் | 61.50 | 34.20 | 4.3 |
| 7. | வனஸ்பதி | 61.35 | 28.35 | 3.05 |
| 8. | தேங்காய் எண்ணெய் | 91.70 | 5.67 | 2.70 |

அதோடு மட்டுமல்ல, சூரியகாந்தி எண்ணெயில் பொறிக்கப்படுகின்ற பலகாரங்கள் அநேக நாட்கள், அதன் மணமும், குணமும் குறையாமல் உண்பவர்களைக் கவரும் வண்ணம் அமைந்திருக்கிறது. வறுத்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களை இந்த எண்ணெயை உபயோகித்து செய்வதால் நல்லதொரு பயன் கொடுத்திருக்கிறதென்று அந்த ஏற்றுமதி தொழிலில் சடுபட்டவர்கள் கூறுகிறார்கள். இந்த எண்ணெயில் பொறிக்கப்படுகின்ற பலகாரங்கள் காந்தல், சுவை குன்றுதல், எண்ணெய் கசிவு ஏற்படுதல் போன்ற பாதிப்புகளிலிருந்து அறவே விடுபட்டு மிகவும் அழகாகவும், அதே சமயத்தில் மணமுள்ளதாகவும், ருசி உள்ளதாகவும் அமைந்திருக்கிறது. குறைந்த அளவு எண்ணையில் அதிக அளவு பதார்த்தங்கள் செய்ய கூடுமாதலால் சிக்கனத்தின் சின்னமாகத் திகழ்கிறது. இப்படி பலரும் போற்றி பயன்படுத்தும் வண்ணம் நல்ல தரமான எண்ணெய் நியாயமான விலையிலேயே வேண்டிய அளவு கிடைக்க தாய் இணையகம் தன்னை முடுக்கிக் கொண்டுள்ளது.

கலப்படம் செய்வது கொள்ளை வியாபாரிகளுக்கு கைவந்த கலை. பாலில் தண்ணீரைக் கலப்பது போல, அரிசியில் கல்லை கலப்பது போல, எண்ணெயிலும் தரம் குறைந்த விலை குறைந்த எண்ணெயைக் கலந்து பெரும் லாபம் பெற்று வருகின்ற எண்ணெய் வியாபாரிகளிடையே, தாய் இணையகம் கலப்படமற்ற, தரமான, அளவு குறையாத ''சனோலா'' என்ற சூரியகாந்தி எண்ணையை விநியோகித்து தன் தனித்தன்மையை நிலைநாட்டி வருகின்றது. தகுந்த பாதுகாப்போடு, திறக்க முடியாத மூடிகளோடு கூடிய 1 லிட்டர் பாட்டில்களிலும், 5 கிலோ 'ஜெரி கேன்' மூலமும் ''சனோலா'' எண்ணையை விநியோகித்து வருகிறது. இந்த எண்ணெய் பற்றாக்குறை இருந்து வந்தது. தமிழக விவசாயிகள் மட்டுமல்லாது அண்டை மாநிலங்களான, கர்நாடகம், ஆந்திரா போன்ற மாநில விவசாயிகளும் பயன் பெறும் வண்ணம் அவர்களது சூரியகாந்தி விதைகளை வாங்கி போதிய அளவு இந்த ஆண்டு இருப்பு வைக்கப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் இந்த அளவிற்கும், இதற்கு மேலும் கொள்முதலை அதிகப்படுத்தி வேண்டிய அளவு ''சனோலா'' என்ற சூரியகாந்தி எண்ணெய் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை தாய் தொழில்கள் இணையகம் செய்து கொண்டிருக்கிறது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்கிறோம்.

# திரைக் காவியம்

இம்மாநிலத்தில் திரைப்படத் தொழிலை எதிர் நோக்கியுள்ள பல இடர்ப்பாடுகளில், கூடுதலான தயாரிப்புச் செலவு, படங்களின் தரக் குறைவு இவை இரண்டும் அடங்கும். தேசீய அளவில் மக்களின் நலத்தை அடிப்படையாகக் கொண்டு சமூக பொருளாதாரத்தை முன்னேற்ற உதவும் கருத்துக்களான மது விலக்கு, சாதி ஒழிப்பு, தீண்டாமை, நாட்டின் ஒருமைப்பாடு இவற்றில் ஏதாவது ஒன்றை மையக் கருத்தாக வைத்து திரைப்படம் தயாரிப்பவர்களுக்கு உதவுவதற்காக "நிதி உதவித் திட்டம்" பிப்ரவரி 1978-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் 1 படத்திற்கு 1 லட்ச ரூபாய் வீதம் தேர்வு செய்யப்பட்ட 5 படங்களுக்கு அரசு உதவித் தொகை அளித்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 1 ஆம் நாள் முதல் அடுத்த ஆண்டு மார்ச்சு 31 ஆம் நாள் வரையுள்ள காலவரம்பிற்குள் தயாரித்து, தணிக்கை குழுவினரால் சான்றிதழ் வழங்கப்பட்ட படங்களே தேர்வு செய்ய தகுதி வாய்ந்த படங்களாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இத்தகைய திரைப்படங்களைத் தேர்ந்தெடுக்க அமைக்கப்படும் குழு அரசுக்கு ஆலோசனை நல்குகிறது. இத்திட்டத்தின் கீழ் 1979–80 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டு, தணிக்கைக்கு வந்த தமிழ்ப் படங்களுக்கு உதவித் தொகை அளிக்கப்பட்டது.



**சிறந்த திரைப்படங்கள்- கலைஞர்களுக்குப் பரிசுகள் :**

உயர்ந்த கலைத் திறம், சிறந்த தொழில் நுணுக்கம் செறிந்த பாராட்டுக்குரிய சிறப்பான படங்கள் தயாரிப்பதை ஊக்குவிப்பதற்காக, ஆண்டு தோறும் பரிசுகள் வழங்கும் திட்டம் 1978–79 ஆம் நிதி ஆண்டிலிருந்து செயற் படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 1 ஆம் நாள் முதல் அடுத்த ஆண்டு மார்ச்சு 31 ஆம் நாள் வரையுள்ள கால வரம்பிற்குள் தயாரித்து தணிக்கை குழுவினரால் சான்றிதழ் வழங்கப்பட்ட படங்களே தேர்வு செய்யத் தகுதி வாய்ந்தவைகளாகக் கருதப்படுகின்றன. இதற்காக அமைக்கப்பட்ட குழுவில் இவை தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

1979–80 ஆம் ஆண்டுத் தயாரிப்புகளுக்கான பரிசுகள் ரூ. 2,30,000 செலவில், சிறந்த படம், சிறந்த நடிகர், நடிகை. இயக்குநர், கதாசிரியர், வசனகர்த்தா, ஒளிப்பதிவாளர், இசை அமைப்பாளர், பின்னணி பாடகர், பாடகி, துணை நடிகர், துணை நடிகை, சிறந்த குழந்தைகள் படம், ராஜா சாண்டோ நினைவுப் பரிசு ஆகியவை அளிக்கப்பட்டன.

**குழந்தைகள் திரைப்படங்களுக்கு உதவி :**

இந்திய குழந்தைகள் திரைப்படச் சங்கத்தின் வேண்டு கோளின்படி சிறந்த குழந்தைகள் திரைப்படங்களைத் தமிழில் தயாரிக்கவும், சிறந்த மற்ற மொழிக் குழந்தைகள் படங்களை தமிழில் மொழி மாற்றம் செய்யவும் ரூ. 4 லட்சம் உதவி செய்ய இவ்வரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதில் ரூ. 2 லட்சம், குழந்தைகள் திரைப்படச் சங்கத்திற்கு ஏற்கனவே வழங்கப் பட்டுள்ளது.

மேலும் நவம்பர் 14, 1981 முதல் நவம்பர் 23, 1981 வரை சென்னையில் நடை பெற்ற இரண்டாவது உலகக் குழந்தைகள் திரைப்பட விழாவைச் சிறப்புற தமிழக அரசு முன்னின்று நடத்தி பல விதங்களில் உதவி செய்தது. இதற்காக அரசு ரூ. 2.80 லட்சம் ஒப்புதல் அளித்து, இத்தொகை முழுவதும் விழாவில் மேம்பாட்டிற்காகச் செலவு செய்து, உலகக் குழந்தைகள் திரைப்பட விழா வெற்றிகரமாக நடைபெற வழிவகை செய்தது. இவ்வரசின் உதவியை விழாக்குழுவினர் மிகவும் பாராட்டியுள்ளனர்.

திறமை மற்றும் இதர வசதிகள் இருந்தும் நிதி வசதியின்மை காரணமாக குழந்தைகளுக்காக படம் எடுக்க முடியாத நிலையில் இருக்கும் தயாரிப்பாளர்களுக்கு விரைவில் செயல்படத்துவங்க விருக்கும் திரைப்பட நிதி நிறுவனம் மூலம் உதவலாம் என்பது பற்றிய கருத்துரு தற்பொழுது அரசின் ஆய்விலுள்ளது.

அரசு தற்பொழுது குழந்தைகளுக்கான சிறந்த திரைப்படத்திற்கு ரூ. 25,000 ரொக்கப்பரிசும், ரூ. 200 மதிப்புள்ள வெள்ளிப் பதக்கமும் அளிக்கும் திட்டத்தில் மாறுதல் செய்து ரூ. 5,000 மதிப்புள்ள மூன்று தங்கப் பதக்கங்கள் மற்றும் ரொக்கப் பரிசு ரூ. 10,000 இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களின் நினைவாக வழங்குவது அரசின் பரிசீலனையில் உள்ளது.

நாட்டின் கலாச்சாரம், ஒழுக்கம், பண்பாடு, கண்ணியம், ஆகியவற்றைக்கருத்திற் கொண்டு குழந்தைகள் மனதைக் கவரும்படி எடுக்கப்படும் படங்களுக்கு வரிவிலக்கு அளிப்பதைப் பற்றியும் அரசு ஆலோசித்து வருகிறது.

### தமிழ்நாடு திரைப்பட நிதியுதவிக் கழகம் :

நிதி நிலையற்ற திறம் வாய்ந்த திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு, நிதி உதவி செய்திட திரைப்பட நிதி உதவிக் கழகம் ஏற்படுத்தும் விதத்தில், அரசு நிலை ஆணை எண். 122, செய்தி, சுற்றுலா, மற்றும் (தமிழ்) பண்பாட்டுத் துறை, நாள் 28–8–1981 ஆணை ஒன்று வெளியிட்டது. இதனுடைய தலைமையகம் சென்னையில் இருக்கும். இந்த நிறுவனத்தின் ஒப்பிய முதலீடு சுமார் ரூ. 2 கோடியாக இருக்கும். இந் நிறுவனத்தின் நடைமுதல் ரூ. 50 லட்சம். மேலும், இந் நிறுவனத்தின் பங்கு முதலீடாக ரூ. 10 இலட்சம் அளிக்க அரசு உத்தேசித்துள்ளது. விரைவில் இந்நிறுவனத்தைப் பதிவு செய்யவும்முறைப்படி தொடர்ந்து செயல்படச் செய்யவும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### திரைப்பட, தொலைக் காட்சி தொழிற் பயிற்சி நிறுவனம் :

திரைப்படத் தயாரிப்பில் பல பிரிவுகள், மற்றும் நடிப்பு இவற்றில் பயிற்சி அளிப்பதற்காக இந்நாட்டில் நிறுவப்பட்டுள்ள இரு நிறுவனங்களில் ஒன்றுதான் சென்னையில் உள்ள தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக் காட்சி தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனம். இந் நிறுவனம் தமிழ்நாடு அரசின் செய்தி, சுற்றுலா மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறையின் கீழ் இயங்கி வருகிறது. 1948-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்நிறுவனம் கணிசமான வளர்ச்சி பெற்று வந்துள்ளது. திரைப்படத் தயாரிப்பு தொலைக் காட்சி சம்பந்தப்பட்ட எல்லாப் பிரிவுகளிலும் பயிற்சி அளித்து தேர்வு நடத்தி, வெற்றி பெற்றோர்க்குச் சான்றிதழ் வழங்கு



வதுடன், திரைப்படத்திற்குள்ள ஆற்றலை மக்களுக்கு உணர்த்துதல், திரைப்படத் தொழில் பற்றிய ஆய்வு நிகழ்த்துதல் ஆகியவை இந்நிறுவனத்தின் குறிக்கோளாகும். படப்பிடிப்பு, ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு, படச்சுருள் கழுவுதல், திரைப்படம் இயக்குதல், திரைக்கதை வசனம் எழுதுதல், படத் தொகுப்பு, நடிப்பு, தொலைக்காட்சி இயக்குதல் ஆகியவற்றில் இங்கு பயிற்சியளிக்கப்படுகிறது. மேற்கூறியவற்றில் நடிப்புப் பயிற்சி சான்றிதழ் பயிற்சியாகும். மற்றவை டிப்ளமோ பயிற்சிகளாகும். தமிழ்நாடு அரசின் மாநில தொழில் நுட்பக் கல்விக் குழுவினரால் டிப்ளமோத் தேர்வுகள் கடைசி ஆண்டில் நடத்தப்பட்டு, டிப்ளமோக்கள் வழங்கப்படுகின்றன.

பல்வேறு பிரிவுகளில் பயிலும் மாணவர்கள் பல குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவும் கல்வியாண்டில் செய்முறைப் பயிற்சியின் ஒரு பகுதியாக ஒரு சிறிய கதைப்படமும், ஒரு கருத்து விளக்கப் படமும் தயாரிக்கின்றனர். மாணவர்களுக்கு பல்வேறு பிரிவுகளில் பயிற்சி அளிப்பதை முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றுவதுடன், தொழில்முறையில் மற்றும் அரசின் படத் தயாரிப்பு வேலைகளும் இந்நிறுவனத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

படப்பிடிப்புத்தளங்களும் திரைப்படத்தொழில் நுட்பக்கல்லூரியிலுள்ள சாதனங்களும் விரும்புகின்ற தனிப்பட்ட திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்படுகின்றன. இதனால் வருமானம் ஓரளவுக்குக் கிடைப்பதுடன் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள புகழ்பெற்ற தொழில் நுட்பப் பணியாளர்களின் ஆற்றலை நேரில்கண்டு அவர்களோடு பணிபுரிய மாணவர்களுக்கு நல்ல வாய்ப்பாகவும் அமைகிறது. இந்நிறுவனத்தில் பயின்று வெற்றியுடன் திரும்பும் மாணவர்களுக்கு பொதுத்துறையிலும் தனியார் துறையிலும் வேலை வாய்ப்புகள் நன்முறையில் உள்ளன.

இந்நிறுவனத்தின் பணிகளை மேம்படுத்த இவ்வாண்டு குரல் மாற்றும் (டப்பிங்) அரங்கு அமைப்பதற்கும், புதிய கருவிகள் வாங்குவதற்கும், மாணவர் விடுதி கட்டுவதற்கும், மொத்தம் ரூ. 16 லட்சம் செலவில் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

### தமிழ் நாடு திரைப்படப் பிரிவு :

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மாநிலத்தில் நடைபெறும் அரசின் ஆக்கப்பணிகளை, மக்கள் பங்கேற்கும் பொதுநிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்து, படமாக்கி, செய்திப் படங்களாக மத்திய அரசின் திரைப்படப் பிரிவின்மூலம் வெளியிடுகிறது.

இத்துடன் அரசின் பல்வேறு துறைகளின் பணிகளை, மக்களுக்குத் தேவையான செய்திகளை கருத்து விளக்கப்படங்களாக (டாகுமெண்டரி) எடுத்து இத்திரைப்படப்பிரிவு வெளியிடுகிறது. இப்படங்களும் (35 மில்லி மீட்டர் அளவில்) திரையரங்குகளுக்கு

மத்திய அரசின் திரைப்படப் பிரிவின்மூலம் வெளியிடப்படுகின்றன. 16 மில்லி மீட்டர் அளவில் அரசின் செய்தி, விளம்பரப் பிரிவுகளுக்கும் அனுப்பப்பட்டு பொது மக்களுக்குக் காட்டப்படுகின்றன.

**தமிழ்நாடு திரையரங்குக் கழகம், சென்னை.**

தமிழ்நாடு திரையரங்குக் கழகம் பொறுப்பு வரையறுக்கப்பட்ட அரசு தனி நிறுவனமாகத் தொடங்கப்பட்டது. தமிழ் நாட்டில் பகுதி நிலைத் திரையரங்குகளைக் கட்டவும் அவற்றை நிலையான திரையரங்குகளாக, மாற்றவும் புதிதாக நிலையான திரையரங்குகள், டூரிங் திரையரங்குகள், திறந்த வெளி திரையரங்குகள் கட்டவும், திரைப்படக் கருவிகள் வாங்கவும் நிதி உதவி செய்வது இக்கழகத்தின் நோக்கமாகும். இதுவரை இக்கழகம் பகுதி நிலைத் திரையரங்குகள் கட்டவும், அவற்றை நிலையான திரையரங்குகளாக மாற்றவும் மட்டுமே கடனுதவி செய்துள்ளது. இக்கழகத்திற்கு அரசால் முழுவதுமாக செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 35·00 இலட்சம். மேலும் ரூ. 15.00 லட்சம் நீண்டகாலக் கடனாக அரசு அளித்துள்ளது.

இந்நாள் வரையில் சட்டப்படி செல்லத்தக்க ஒப்பளிப்புகள் 81 ஆகும். இவற்றில் 74 பேர் திரையரங்குகளைக் கட்டி முடித்து திரைப்படக் காட்சிகள் நடத்துகின்றனர். ஒரு திரையரங்கிற்கு அதிகபட்சம் அளிக்கும் தொகை ரூ 1.20 லட்சம் ஆகும். இக்கழகம் இதுவரை ரூ. 93·23 லட்சம் கடன் தொகை அளிக்க ஒப்பளித்துள்ளது. ஒப்பளித்துள்ளதில் ரூ. 87.25 லட்சம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இக்கடன் தொகை அண்டு ஒன்றுக்கு 17 சதவீத வட்டி வீதம் 60 சமமான தவணைகளில் வசூலிக்கப்படுகிறது.



**தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1955 மற்றும் தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்கு படுத்துதல்), விதிகள் 1957.**

தமிழ்நாட்டு மக்களில் பெரும்பகுதி மக்களுக்கு குறிப்பாக ஏழை எளிய நடுத்தர மக்களுக்கு பொழுது போக்குவதற்குரிய சாதனமாகவும், பெரும்பகுதி ஊராட்சி நகராட்சிகளுக்கும் ஒரு பகுதி அரசுக்கும் வருவாய் திரட்டக்கூடிய துறையாகவுள்ளது. திரைப் படத்துறை வளர்ச்சி அடைய ஊக்கமளிக்கும் வகையில், திரை அரங்குகள் அதிகப்படுத்தும் முயற்சியாக, இக்காலத்திற்குப் பொருந்தாத விதிகளையும், கட்டுப்பாடுகளையும் தளர்த்தியுள்ளது. இதன் விளைவாக தமிழ்நாட்டின முக்கிய நகரங்களில் எல்லாம், நல்ல வசதிமிக்க தரமான திரை அரங்குகள் குறிப்பிடத்தக்க அளவில் பெருகியுள்ளன. பொதுமக்களுக்குப் பாதுகாப்பளிக்கும் வகையில் டூரிங் திரை அரங்குகளில் சுலபத்தில் நெருப்புப் பிடிக்கும் கூரைகளை அகற்றிவிட்டு, சுலபத்தில் நெருப்புப் பிடிக்காத கூரைகளை அமைக்கவேண்டும் என்ற ஆணைக்கிணங்க அமைக்கப்படும் டூரிங் திரை அரங்குகளின் கட்டுமானச் செலவு பெரிய அளவில் உயர்ந்துள்ள நிலையில் உரிமக் காலத்தை ஐந்து ஆண்டுகளாக உயர்த்த வேண்டுமென்ற பரவலான கோரிக்கைகளை ஆழ்ந்து பரிசீலித்து ஐந்து ஆண்டுகளாக இப்பொழுது உயர்த்தப்பட்டுள்ளது. அதே சமயத்தில் இவ்வரசு திரைப்படங்களுக்குச் செல்லும் பொதுமக்களுக்குத் தேவையான எல்லா வசதிகளும்—பாதுகாப்புகளும் கிடைக்குமாறு பார்த்துக் கொள்வதில் கண்டிப்பாக இருக்கிறது.



# நூல் நயம்

## பொழுது புலர்ந்தது

ஆசிரியர் : கவிஞர் பட்டுக்கோட்டை இராசேந்திரன்

வெளியீடு : சங்கீதா பதிப்பகம் 27 அம்மையப்ப முதலி சந்து, இராயப்பேட்டை சென்னை-600 014.

பக்கம் 248 விலை ரூ. 13

ஆறு தலைப்புகளில் யாக்கப் பட்ட மரபுக் கவிதைகள் எழுபத்து நான்கு கொண்ட தொகுப்பு இந்நூல். அகப்பொருள் கவிதைகள் அதிக அளவில் இடம் பெற்றிருப்பது இளைய சமுதாயத்துக்கு இனிய விருந்தாகும். கதைப் பாடலும், கவியரங்கக் கவிதைகளும் நூலுக்குச் சிறப்புச் சேர்க்கின்றன.

'முதலாவது கவிதைத்தொகுப்பு இது' என நூலாசிரியர் முன்னுரையில் கூறியிருப்பதை நம்ப முடியவில்லை; அந்த அளவுக்குச் சிறப்பாகக் காணப்படுகிறது. சிற்றூரின் பின்னணியை வருணிக்கும் போது, நம்மை அங்கேயே இழுத்துச் சென்று விடுகின்றன கவிதை வரிகள். பாவேந்தரிடம் பயிற்சி பெற்றவர் இவர் என்பதை ஒவ்வொரு கவிதையும் எடுத்துச் சொல்கிறது.

'கண்ணீர்க் கவிதைகள்' என்னும் தலைப்பில் மறைந்த தமிழ்ச் சான்றோர் சிலரைக் குறித்து எழுதப் பெற்றுள்ள கவிதைகள் பேனா ஓவியங்களாகவே திகழ்கின்றன. இனிய நடை, துள்ளுநடை, சுகமான நடை அனைத்தும் இந்நூலில் உண்டு. கவிதையன்பர்களுக்குப் பல்சுவை விருந்தாக விளங்குகிறது இந்நூல்.

## வீணை மலர்கள்

ஆசிரியர் : நாவேந்தன்

வெளியீடு : நாயகி பதிப்பகம் 32 புதுப்பங்களாத் தெரு, சிந்தாதிரிப் பேட்டை, சென்னை-600 002.

பக்கம் 120 விலை ரூ. 6

மரபுக்கவிதை மல்லிகைகளும் புதுக்கவிதை மருக்கொழுந்துகளும் சேர்த்து இணைக்கப் பெற்ற கதம்பச் சரமாகத் திகழும் இந்நூலிலே புதுமை ஒன்று உண்டு. ஒவ்வொரு கவிதையையும்மற்றொரு கவிஞர் ஆய்வு நடத்தித் சில வரிகளில் தீட்டியுள்ள மதிப்புரைதான் அந்தப் புதுமை.

கவிதைகள் அனைத்தும் எளிய, இனிய நடையில், உள்ளத்தைத் தொடுகின்ற விதத்தில் அமைந்துள்ளன. 'மயக்கும் மழலை' என்ற கவிதை முதிர்ந்தோரையும் மயக்கி விடுகிறது. பல பிரச்சினைகளையும் கவிதைகளாக்கி, அவற்றிற்கு விடையையும் சுவையுறக் கூறியிருக்கிறார். மறைந்த மேதைகளைக் குறித்து எழுதப் பெற்றுள்ள கவிதைகள் அவர்களை உயிர் பெற்று உலா வரச் செய்கின்றன.

## கனவுப் பூக்கள்

ஆசிரியர் : ஆலந்தூர் மோகனரங்கன்

வெளியீடு : வசந்தா பதிப்பகம், 21 தர்மராஜா கோயில் தெரு, ஆலந்தூர்.

பக்கம் 96 விலை ரூ. 4.26

காதல் மணத்திற்கு எதிர்ப்புத் தோன்றுவதும் அதன் காரணமாக காதலர்கள் தற்கொலையை நாடுவதும், பின்னர், பெற்றோர்கள் மனம் வருந்தி அழுவதும் பொதுவாக அவலக் காப்பியத்தின் அணுகு முறையாகும். அதே உத்தி இந்தக் குறுங்காவியத்திலும் பின்பற்றப்பட்டிருக்கிறது.

கவிதையில் சொல்லாட்சி நிறைந்திருக்கிறது; உவமைகளில் புதுமை மிளிர்கின்றது. நடையில் விறுவிறுப்புத் தென்படுகிறது. பாத்திரப் படைப்புகள் தெளிவாகத் தீட்டப்பட்டுள்ளன. அவர்தம் பண்புகள் தக்க வகையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. கருத்துச் செறிவுமிக்க கவிதை நாடகமான இந்நூல் கவிதை நாடகத் துறை வளர்ச்சிக்கு உதவுகிறது என்று சொல்லலாம்.

**இப்பகுதிக்கு இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். அரசியல் கட்சிகள் தொடர்புள்ள நூல்கள், மதிப்புரை செய்யப்படுவதில்லை**

## குற்றங்களே தீர்ப்பு எழுதினால் !

ஆசிரியர் : கவிஞர் துரை வசந்தராஜன்

வெளியீடு : இளந்தேவி பதிப்பகம், சர்க்கரை வீதி, குருவராயப்பேட்டை - 631 101.

பக்கம் விலை ரூ. 5

மரபுக் கவிதைகளும் புதுக் கவிதைகளும் கலந்து உருவாக்கப் பெற்ற நூல் இது. புதிய சமுதாயத்தைக் காணும் உணர்வுகள் ஆசிரியரின் எழுத்துக்களில் காணப் பெறுகின்றன. துணுக்குக்கவிதைகளும் சுவை கூட்டுகின்றன.

உழைப்பைப் போற்ற வேண்டும் என்ற கொள்கையும் உழைப்புப் பலன் தரும் என்ற செய்தியும், உழைக்கும் இனத்தின் பெருமையும் பல கவிதைகளில் சிறப்பித்துச் சொல்லப் பெற்றிருக்கின்றன. எளிய நடை, எவரும் படித்துப் புரிந்து கொள்ளலாம்.

## நினைவுக்கலை

ஆசிரியர் : தசாவதானி எம். இராமையா

வெளியீடு: இளங்கோ பதிப்பகம் கருணாநிதி நகர் கோவில்பட்டி–627701

விலை ரூ. 7.50 பக்கம் 130

நினைவாற்றல் என்பது பெரும் பேறாகும். இது பயிற்சியால் வளர்த்துக் கொள்ளக் கூடியது என்பதை நூலாசிரியர் தெளிவாக, சான்றுகளுடன் எடுத்துக் கூறியுள்ளார்.

நினைவாற்றலை வளர்ப்பதற்குரிய உடற்பயிற்சி முறைகளையும், வழிபாட்டு முறைகளையும், உணவு முறைகளையும் சொல்லியிருப்பதுடன், மறதி என்பது மனிதனை நெருங்காதவாறு பார்த்துக் கொள்வதற்குரிய வழி வகைகளையும் தெரிவித்திருக்கிறார். அவதானம் என்றால் என்ன என்பதையும் விளக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

— தமிழ்ப்பித்தன்

# குழந்தைகள் நலனுக்குச் சத்துணவு



இந்திய அரசால் உருவாக்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தை நலத் திட்டங்கள் தமிழ்நாட்டில் சென்னை மாநகர், தர்மபுரி மாவட்டத்தில் உள்ள தளி, மதுரை மாவட்டத்திலுள்ள நிலக்கோட்டை ஆகிய இடங்களில் ஒவ்வொரு இடத்திலும், 100 அங்கன்வாடிகளைக் கொண்டு மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் பின்வரும் அம்சங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. துணைச் சத்துணவு, 2. நோய்த் தடுப்பூசி போடுதல், 3. உடல்நலப் பரிசோதனை, 4. மேற் சோதனைகளுக்குப் பரிந்துரை செய்தல், 5. சத்துணவு மற்றும் சுகாதாரக் கல்வி 6. முறை சாராக் கல்வி, 7. நடைமுறைக் கல்வி (15-44) வயதுக் குட்பட்ட வளர்ந்த பெண்களுக்கு.

இத்திட்டத்தின் எல்லா அம்சங்களின் மூலம் பயனடைவோர் எண்ணிக்கை 21,000 குழந்தைகளும், 9,000 மகளிர்களும் ஆவர்.

1982-83-லிருந்து மேலும் 36 இடங்களில் இத்திட்டம் விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்சமயம் நடத்தப்பட்டுவரும் மூன்று திட்டங்களும் மொத்தச் செலவு ரூ. 50.63 இலட்சத்தில் 19.93 இலட்சம் இந்திய அரசும் 30.70 இலட்சத்தைத் தமிழ்நாடு அரசும் ஏற்கும்.

**உலக வங்கி உதவியுடன் சென்னை நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தாய் சேய் நலப் பணிகள் திட்டம்:**

இந்தியஅரசின் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணி திட்டத்தைப் போலவே உலக வங்கி உதவியுடன் சென்னை நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தாய்சேய் நலப் பணிகள் திட்டம் நடைபெற்று வருகின்றது.

தற்போது இத்திட்டத்தின் கீழ் 126 குழந்தை நல நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு குழந்தைகள் நல நிலையமும் ஒரு குழந்தை நல அமைப்பாளர், இரு ஆயாக்கள் மூன்று மருத்துவ அலுவலர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. மருத்துவப் பணியாளர்கள் உதவியுடன் மருத்துவ அலுவலர்கள் நடமாடும் மருத்துவமனை வாயிலாக மருத்துவப் பரிசோதனைகள் நடத்தி வருகின்றனர். துணைச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 'கேர்' (CARE) நிறுவனம் இலவசமாக வழங்கும் பாலாகாருடன் உணவு வகையிலான செலவினமாக 4.5 பைசா பயனடைவோர் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படுகிறது.

12,600 பேர் பயனடையும் இத்திட்டத்திற்கு 1982-83-ம் ஆண்டிற்கு 44.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.



**சிறப்புச் சத்துணவுத் திட்டம்:**

வாழ்வில் சத்துணவுக் குறைவால் நலிவுற்ற, பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள 6 மாதம் முதல் 6 வயது வரை நிரம்பிய குழந்தைகளுக்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்து நிறைந்த ''பாலாகார்'' மற்றும் ''சாலட்'' எண்ணெய் போன்ற உணவுப் பொருட்களைக் கொண்டு உணவுப் பண்டம் தயாரித்து, நாள்தோறும் வழங்கப்படுகிறது. சென்னை, கோவை, மதுரை ஆகிய மாநகராட்சிகளிலும், புதுக்கோட்டை நகராட்சியிலும் திருத்தப்பட்ட சிறப்புச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் சத்து நிறைந்த பாலாகார் பயன் பெறுபவர்களுக்கு அவரவர் இல்லங்களிலேயே சமையல் செய்து குழந்தைகளுக்குப் போடுவதற்கு வழங்கப்படுகின்றது. மருத்துவர்கள் மூலம், மருத்துவ வசதிகளும் அளிக்கப்பட்டு, நோய்த்தடுப்புக்காக முன் தடுப்பு ஊசி, மற்ற தடுப்பு ஊசிகளும் போடப்பட்டு, விட்டமின் மாத்திரைகளும் வழங்கப்படுகின்றன.

சிறப்புச் சத்துணவுத் திட்டம் 55 உள்ளாட்சி நிறுவனங்களிலும் திருத்தியமைக்கப்பட்ட சிறப்புச் சத்துணவுத் திட்டம் 4 மாநகராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்டு அதன் மூலம் 2,76,530 நபர்கள் பயன்பெற்று வருகிறார்கள். இத்திட்டத்திற்காக 1981-82ம் ஆண்டு ரூ. 61.40 இலட்சம் செலவு செய்யப்பட்டது.

அரசின் குழந்தை நலத்திட்டம், சத்துணவு வழங்குதல், இளங்

குழந்தைகளுக்கு முன்னாதாரக் கல்வி அளித்தல், உடல் நலச் சோதனை செய்தல், நோய்த் தடுப்பு ஊசி போடுதல் ஆகியவை உள்ளடங்கியவை. இவை குழந்தைகள் நல நிலையங்கள் மூலம் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுவோர் எண்ணிக்கை 3.76 இலட்சமாகும். 2 வயது முதல் 5 வயது வரை குழந்தைகளும், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் மகளிரும் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுகின்றனர். "கேர்" நிறுவனத்தின் மூலம் ஒரு நபருக்கு 80 கிராம் பாலாகார் மற்றும் 4 கிராம் சாலட் எண்ணெய் காய்கறிகளுடன் சேர்ந்து உப்புமா அல்லது கிச்சடி ஆக வழங்கப்படுகிறது.

தற்பொழுது தமிழகம் எங்கும் 4,343 குழந்தை நல நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இது தவிர, பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தில், ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டத்தின் கீழ் 50 குழந்தைகள் நல நிலையங்கள் செயல்படுகின்றன. குழந்தைகள் நல நிலையங்கள் பல ஆதி திராவிட குழந்தைகளுக்காகவும், மலைச்சாதியினரின் குழந்தைகளுக்காகவும் நடத்தப்படுகின்றன. இத்திட்டப் பணிகளுக்காக 1982-83ம் ஆண்டுக்கு ரூ. 6.14 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**'கேர்' நிறுவன உதவியுடன் உணவு வழங்கு திட்டம்:**

மக்கள் தொகையில் நலிந்த பிரிவினராய் உள்ள பள்ளிப்பருவமடையாத குழந்தைகள், கருவுற்ற தாய்மார்கள், மற்றும் தாய்மார்கள் ஆகியோரிடையே பொதுவாகக் காணப்படும் ஊட்டச் சத்துக் குறைவைச் சரிசெய்யும் நோக்கத்துடன் தமிழ்நாட்டில் "கேர்" நிறுவனத்தின் உதவியுடன் சத்துணவு வழங்கும் திட்டம் 1970-ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகிறது.



இத்திட்டத்தின் கீழ் 3,322 நிலையங்களின் மூலம் ஓர் ஆண்டில் 300 நாட்களில் 60,000 குழந்தைகள் மற்றும் 20,000 தாய்மார்களுக்குச் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. சென்ற நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 1,09,19,000 மதிப்புள்ள உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

**திருத்தியமைக்கப்பட்ட ஊட்டச் சத்துணவுத் திட்டம்:**

ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகள், மற்றும் கருவுற்ற தாய்மார்கள் ஆகியோரின் சத்துணவு நிலையை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் குறிக்கோள். ஒவ்வொரு ஒன்றியத்திலும் 30 குழந்தைகள் காப்பகங்கள் மூலம் உணவு வழங்குதல், உடல் நலம் பேணுதல், மற்றும் சத்துணவுக் கல்வி ஆகியவற்றை ஒருங்கே அளிக்கும் திட்டமிது. இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவதற்கு 120 பேர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

"கேர்" நிறுவனத்தால் அளிக்கப்படும் உணவினைக் கொண்டு இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. உப்புமா, புட்டு மற்றும் பொங்கல் போன்ற உணவுப் பொருட்களும், காய்கறிகளும் வழங்கப்படுகின்றன. சிறு பாடங்களும், நல்வாழ்வுப் பழக்க வழக்கங்களும் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படும். குழந்தைகள் விளையாட விளையாட்டுப் பொருட்கள் அளிக்கப்பட்டு அவர்களின் அறிவு வளர வகை செய்யப்படும்.

ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களில் பணியாற்றும் மருத்துவ அலுவலர்களின் துணையோடு உடல்நலம் காக்கும் பணி நிறைவேற்றப்படும். அவ்வப்போது உடல்நிலை பரிசோதனை மருத்துவ அதிகாரிகளால் நடத்தப்படும். இத் திட்டத்தின் கீழ் பயனடைவோர்க்கு வைட்டமின் மாத்திரைகள் வழங்கப்பட்டு தொற்று நோயிலிருந்து குழந்தைகள் காக்கப்படுவர்.

பயிற்சி முகாம்கள் மூலம் சத்துணவுக் கல்வி கிராமப்புற மகளிர்க்கு அளிக்கப்படும் சத்துணவு, நல்வாழ்வு பற்றிய பயிற்சி முகாம்கள் ஒன்றியத்தின் சத்துணவுத் திட்டக்காலத்தில் நடத்தப்படும். இம்முகாம்களில் 60 மகளிர்க்குப் பயிற்சி அளிக்கப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் சில ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவைகளில் இச்சத்துணவுத் திட்டம் நிறைவேற்றப்படும்.

**தொழிலாளர் சத்துணவுத் திட்டம்:**

தமிழ்நாடுதான், தொழிலாளர் சத்துணவுத் திட்டத்தை முதலாவதாக 1969ல் இருந்து தொழிலாளர் குடும்பங்களின் நல்வாழ்விற்காக "கேர்" நிறுவனத்தின் உதவியுடன் அமல்படுத்தி வருகிறது. பெண் தொழிலாளர்களில் அல்லது ஆண் தொழிலாளர்களின் மனைவியரில் கர்ப்பமாக இருக்கும் அல்லது தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்கும் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் மட்டுமே இத்திட்டம் பொருந்தும்.

நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 80 கிராம் சத்துணவு கோதுமையும், 7 கிராம் எண்ணெயும் "கேர்" நிறுவனத்தால் இலவசமாக வழங்கப்பட்டு தொழிற்சாலையில் சமைத்து விநியோகிக்கப்படுகிறது. நிறுவனத்தினர் போக்குவரத்து, சமையல் செய்ய ஏற்படும் செலவை மட்டுமே ஏற்கவேண்டும்.

இத்திட்டம் 107 நிறுவனங்களில் 27,000 நபர்களுக்குப் பயன்பெறும் முறையில் நடைபெறுகிறது. குழந்தைகளுக்குச் சத்துணவு அளிப்பதன் மூலம், உடல்வளம் உயர்ந்து சிறுவயதில் ஏற்படும் மரணம் தடுக்கப்படும். தங்கள் குழந்தைகள் திடகாத்திரமாக இருப்பார்கள் என்பதால் தொழிலாளர்கள் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தைக் கடைப்பிடிக்க விழைகிறார்கள்.

**டானிடா நிதி உதவியுடன் தமிழக அரசு செயல்படுத்தும் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநல பிராந்தியத் திட்டம்**

இத்திட்டம் டென்மார்க் அரசின் நிதி உதவியுடன் தமிழக அரசு செயல்படுத்தும் ஒரு ஒருங்கிணைந்த மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்திட்டமாகும். இத்திட்டத்தினால் தென் ஆர்க்காடு மற்றும் சேலம் மாவட்டங்களில் வாழும் ஏறத்தாழ இருபது இலட்சம் மக்கள் பயன்பெறுவர். சுகாதாரத்தையும் குடும்பநலத்தையும் மையமாகக் கொண்டு, மற்ற வளர்ச்சிப் பணிகளான குடிதண்ணீர் வசதி, சுற்றுப்புறச் சுகாதாரம், ஊட்டச்சத்து, பயிற்சி, சுகாதாரம், குடும்பநலம் சம்பந்தப்பட்ட கல்வி முறைகள் சமுதாய நல நிதிப் பணிகள், திட்டம் பற்றிய தகவல் தொடர்பு முறைகள், சுகாதாரம் பிரச்சினைகளுக்கான புதிய மாற்றுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட இருக்கின்றன.

மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகள், சோகை நிலையிலுள்ள சூலுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரின் ஊட்டச் சத்து மேம்பாட்டிற்காக, ஒரு ஊட்டச்சத்துத் திட்டம் சோதனை முறையில் சேலம் மாவட்டத்தில் கொளத்தூர் ஒன்றியத்திலும், தென்னார்க்காடு மாவட்டத்தில் மைலம் ஒன்றியத்திலும் இந்த ஆண்டு செயலாக்கப்பட இருக்கிறது.

இந்த ஒன்றியங்களில் ஒவ்வொரு 1,500 மக்கள் தொகைக்கும் ஒரு சத்துணவு நிலையம் அமைக்கப்படும். இந்நிலையங்களில் குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் சத்துணவு அளிப்பதோடு மட்டுமல்லாமல், சுகாதாரம் மற்றும் ஊட்டச் சத்துப் பற்றிய கல்வியும் பயிற்றுவிக்கப்படும். திட்டப்பணிகளில் மக்கள் பங்கு பெறுவது இத்திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாகும்.

**தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம்:**

உலக வங்கி உதவியுடன் நடத்தப்படும் இத்திட்டம் சமூக நலத்துறை மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை ஆகிய இரண்டு துறைகளும் இணைந்து செயல்புரியும் ஒரு அமைப்பில் நடைபெறுகிறது.

மூன்று வயதிற்குட்பட்டிருக்கும் குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரிடையே நிலவும் ஊட்டச்சத்துக் குறையைக் களைவதும், அவர்களது ஊட்டச் சத்து நிலையை உயர்த்துவதும், குழந்தைகள் இறப்பு விகிதத்தை 25 சதவிகிதம் குறைப்பதும், நோய்ப் பராமரிப்பு முதலியன நல்குவதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

3 மாதம் முதல் 36 மாதங்கள் வரை உள்ள குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களது எடை ஒவ்வொரு மாதமும் எடுத்து எடைக்குறிப்பேட்டில் குறிக்கப்படுகிறது. ஊட்டச்சத்துணவு தேவைப்படும் குழந்தைகளுக்கு 90 நாட்களுக்கு உணவளிக்கப்பட்டு அவர்களது வளர்ச்சியை மாதா மாதம் எடை எடுத்து மதிப்பிடப்படும். எடை அதிகரிக்காத குழந்தைகளிடம் என்ன குறைபாடு உள்ளது என்று கண்காணிக்கப்படுகிறது.

**திட்டங்களின் கூறுகளாவன:**

1. நல்வாழ்வுப் பணி, 2. குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் கூடுதல் ஊட்டச் சத்துணவு தயாரித்து அளித்தல், 3. குழந்தைகள் மற்றும் தாய்மார்களின் வளர்ச்சி மதிப்பிடல், 4. ஊட்டச் சத்துக் கல்வி விளக்கம்.

இத்திட்டம் ஆறு மாவட்டங்களில் - மதுரை, இராமநாதபுரம் புதுக்கோட்டை, செங்கற்பட்டு, வடார்க்காடு, திருநெல்வேலி-உள்ள 173 ஊராட்சி ஒன்றியங்களில் படிப்படியாகச் செயல்படுத்தப்பட உள்ளது.

முதல்கட்டமாக மதுரையில் கொட்டாம்பட்டி வட்டாரத்தில் ஒரு முன் மாதிரித் திட்டமாக ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தில் 1980 நவம்பர் மாதம் முதல், குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கும், ஊட்டச்சத்து வழங்கப்பட்டு வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 1,500 மக்கள் தொகைக்கு ஒரு சத்துணவு நிலையமும், 5,000 மக்கள் தொகைக்கு ஒரு தாய்சேய் நல நிலையமும் அமைக்க வழி செய்யப்பட்டுள்ளது.

**ரூ 100 கோடி அளவில் குழந்தைகளுக்கான இலவச உணவுத் திட்டம்:**

இது முழுக்க முழுக்க பெண்கள் பொறுப்பேற்று நடத்தக் கூடியது. இத்திட்டத்தின் மூலம் ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவு கூடப் பெற முடியாத 2 வயது முதல் 10 வயதுக்குள் இருக்கும் ஏழைக்குழந்தைகளுக்கு இலவசப் பகல் உணவு அளிக்கப்படும்.



இரண்டு வயதிலிருந்து பள்ளிக்குச் செல்லும் வயது வரையில் குழந்தைகள் தங்களை மறந்து தாங்கள் எந்தச் சாதிக் குழந்தையோடு உட்கார்ந்து சாப்பிடுகிறோம் என்று அவர்களுக்குத் தெரியாத நிலையில் அவர்கள் ஒன்று கூடிவாழும் சூழ்நிலை ஏற்படுத்தப்படும். அதே நேரத்தில் ஒன்றாக உட்கார்ந்து உணவருந்திப் பழகுவது சாதி உணர்வைப் போக்கப் பயன்படும்.

5 முதல் 6 வயதிற்குள் முடிந்த வரையில் அவர்களுக்கு அவ்வப்போது எழுத்துக்களும் சொல்லிக் கொடுக்கப்படும். ஆகவே, குழந்தைகள் பள்ளிக்குப் போகும் போது அவர்கள் புதிதாக 'ஆனா ஆவன்னா' தெரிந்து கொள்வதற்குப் பயிலாக, அங்கே போகும் போதே சமத்துவ உணர்வு மற்றும் இந்த எழுத்துக்களைத் தெரிந்து கொண்டு செல்ல முடியும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது.

**செயல்முறை ஊட்டச் சத்துணவுத் திட்டம்:**

தமிழகத்தில் செயல்முறை ஊட்டச் சத்துணவுத் திட்டம் சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது. மக்கள் தங்கள் வருவாய்க்குள் தங்களுக்குக் கிடைக்கும் எளிமையான உணவுகளிலேயே ஊட்டச் சத்து நிரம்பிய உணவு பெற முடியும் என்பதைக் குறிப்பாகத் தாய்மார்களுக்கு அறிவிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாவது கருவுற்ற தாய்மார்களும், பாலூட்டும் தாய்மார்களும், ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் தாய்ப்பால் மறக்கச் செய்யப்பட்ட குழந்தைகளும் எத்தகைய சத்துணவுகளை உட்கொள்ள வேண்டும் என்பது குறித்து அறிவுறுத்தலாகும். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 30 குழந்தைகள் கர்ப்பிணி முதல் 6 வயதிற்குட்பட்ட 80 குழந்தைகளும், 40 கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் 'கேர்' நிறுவனம் வழங்கும்



உணவுப் பொருட்களின் உதவியால் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. தங்களைச் சுற்றியுள்ள இடங்களிலேயே தங்களுக்குக் கிடைக்கக் கூடிய பருப்பு வகைகள், பசுமைமிகு கீரைகள், காய்கறிகள், கனி வகைகள் உற்பத்தி செய்து உட்கொள்ளச் செய்யுமாறு அறிவுரை கூறப்பட்டு வருகிறது.

சுமார் 60 கிராமப்புறப்பெண்களுக்கு இரண்டு நாட்களில் இத்திட்டத்தின் கீழ் சுகாதார முறையிலும் சத்து இழக்காத வகையிலும் உணவுப் பொருட்களைத் தயாரிக்கும் முறை குழந்தைகள் உணவு, கவனம், குடும்ப நலம் ஆகியவை குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் குழந்தைகளுக்கு உணவுச் சத்துக் குறைவினால் ஏற்படும் வியாதிகளைத் தடுக்கவும் தொற்றுநோய் தடுப்பு ஊசி மருந்தும் வைட்டமின் மாத்திரைகள் வழங்குதலும் முதலியன இத்திட்டத்தின் கீழ் நடைபெறுகின்றன.

இத்திட்டமானது மத்திய அரசு, யூனிசெப் மற்றும் மாநில அரசு நிதி உதவியுடன் 1962-63 முதல் தொடங்கப்பட்டது. 1978-79ம் ஆண்டு முடிய இத்திட்டத்திற்கு மத்திய அரசு ரூ. 73.62 இலட்சம் அளித்துள்ளது. 1979-80 முதல் இத்திட்டமானது முழு அளவில் மாநில அரசு நிதியிலிருந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் 85 ஊராட்சி ஒன்றியங்களில் ஆரம்பிக்கப்பட்டு 53 ஊராட்சி ஒன்றியங்களில் முடிவு பெற்று விட்டது. இவ்வாண்டில் 32 ஒன்றியங்களில் தற்போது நடைமுறையில் உள்ளது. இவ்வொன்றியங்களில் குழந்தைகள் காப்பகங்கள் நடைபெற மாநில மற்றும் ஒன்றிய நிதியுடன் 800க்கும்மேற்பட்ட குழந்தைகள் காப்பகங்கள் கட்டப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கு 1981-82ம் ஆண்டிற்குரு.31 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் ஆண்டு ஒன்றுக்கு 52,000 குழந்தைகளும் 26,000 கருவுற்ற தாய்மார்களும், பாலூட்டும் தாய்மார்களும் பயனடைகின்றனர்.



# ஆசிய விளையாட்டுப் போட்டியின் கதை

ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு முன், ஆசியாவுக்கு எனத் தனி ஒலிம்பிக் போட்டிகள் என்ற கருத்து முதன் முதலாக வெளி வந்தது. இந்தக் கருத்தினை வெளியிட்டவர் பேராசிரியர் ஜி. டி. சோந்தி என்ற இந்தியர் ஆவார்.

இந்தியர் ஒருவர் எடுத்துக் கொண்ட முயற்சியின் அடிப்படையில் உருவெடுத்த விளையாட்டுப் போட்டிகள் என்ற காரணத்தால், முதல் ஆசிய ஒலிம்பிக் பந்தயங்கள் 1951ஆம் ஆண்டு டெல்லியிலேயே தொடங்கின.

இந்தியாவின் முதல் பிரதம அமைச்சர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள்தான் முதல் ஆசிய போட்டிகளைத் தொடங்கி வைத்தார்.

ஏறக்குறைய முப்பது ஆண்களுக்குப் பின்னர், 1982, நவம்பர் 19ஆம் தேதியன்று திருமதி இந்திராகாந்தி அவர்கள் 9-வது ஆசிய விளையாட்டுப் போட்டியைத் திறந்து வைக்க இருக்கிறார்கள்.

முப்பத்து ஒன்று ஆண்டுகள் எட்டு ஆசிய ஒலிம்பிக் பந்தயங்கள் உருண்டோடிவிட்டன. மீண்டும் இந்த ஒன்பதாவது ஆசிய ஒலிம்பிக் போட்டிகள் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. முதல் ஆசிய ஒலிம்பிக் பந்தயமான டெல்லி ஒலிம்பிக் பந்தயம் கூட 1950-ஆம் ஆண்டில் தொடங்குவதாகத்தான் (இலண்டன் மாநகரத்தில் 1948ஆம் ஆண்டு நடந்த உலக ஒலிம்பிக் பந்தயத்திற்கு வந்திருந்த ஆசிய நாடுகளின் பிரதிநிதிகளை அழைத்துப் பேராசிரியர் டாக்டர் சோந்தி நடத்திய மாநாட்டில்) முடிவு செய்யப்பட்டது

ஆனல், ஒரு கண்டம் தழுவிய விளையாட்டுப் போட்டிக்கான ஏற்பாடுகள் செய்வதற்குக் காலம் போதாத ஒரே காரணத்தால் முதல் ஆசிய ஒலிம்பிக் போட்டிகளை டெல்லியில் 1951ஆம் ஆண்டு சற்றுத் தள்ளி நடத்த அனுமதி வழங்கப்பட்டது. முதல் போட்டியைச் சற்றே தள்ளி வைக்க அவகாசம் தரப்பட்டதே தவிர தொடர்ந்துவரும் போட்டிகள் 1954, 1958, 1962 என்ற அடிப்படையில் நடத்தப்படும் என்றே முடிவு செய்யப்பட்டது. அந்த அடிப்படையில் தான் 1954 முதல் 1982 வரை ஆசிய ஒலிம்பிக் போட்டிகள் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற்றன.

| | |
|---|---|
| 1954 | மணிலா (பிலிப்பைன்ஸ்) |
| 1958 | டோக்கியோ (ஜப்பான்) |
| 1962 | ஜகார்த்தா (இந்தோனேசியா) |
| 1966 | பாங்காக்(தாய்லாந்து) |
| 1970 | பாங்காக்(தாய்லாந்து) இரண்டாவது தடவை |
| 1974 | டெக்ரான் (ஈரான்) |
| 1978 | பாங்காக்(தாய்லாந்து) மூன்றாவது தடவை |
| 1982 | புதுடெல்லி (இந்தியா) |

1951ஆம் ஆண்டில் நடத்திய முதல் ஆசிய ஒலிம்பிக் பந்தயம் கீழ்க்கண்ட ஐந்தே ஐந்து ஆட்டங்களில்தான் போட்டிகள் நடத்தியது.

கூடைப்பந்து, சைக்கிள் பந்தயங்கள், கால்பந்து, நீச்சல்போட்டிகள், தடகளப் போட்டிகள்.

1982ஆம் ஆண்டு ஆசிய ஒலிம்பிக் பந்தயங்களில் 21 ஆட்டங்களில் போட்டிகள் நடைபெறப் போகின்றன. முப்பதுக்கும் மேற்பட்ட ஆசிய விளையாட்டுப் போட்டிக் கூட்டமைப்பு நாடுகள் பங்கேற்கப்போகின்றன.

விளையாட்டுப் போட்டிகள் 16 நாட்கள் நடக்கப் போகின்றன. பம்பாயில் பாய்மரப் படகு போட்டியும் (YACHTING) ஜெய்ப்பூரில் துடுப்புப் படகுப் போட்டியும் ( ROWING ) தவிர மற்றப் போட்டிகள் அனைத்தும் புதுடெல்லியில் எழுப்பப்படும் பிரமாண்டமான விளையாட்டு அரங்குகளில் நிகழவுள்ளன.

பெரியதொரு திறந்தவெளி மைதானம், உள் விளையாட்டு அரங்குகள், சைக்கிள் பந்தயத்துக்கு என்று ஒரு ''வேலோட்ரோம்'' சிறப்பான நீச்சல் குளம், ஓடுகிறவர்களுக்கு ஒரு டார்டான் ஓடுகளம் (TARTAN TRACK) என்று அத்தனை அமைப்புகளும் அசுரவேகத்தில் தயாராகிக் கொண்டு இருக்கின்றன.

1982-ஆம் ஆண்டு நவம்பர் 19லிருந்து, டிசம்பர் 4 முடிய ஆசியாவின் நினைவு, எண்ணம் நம்பிக்கை, அத்தனையும் புது டெல்லியைச் சுற்றியே இருக்கும்.

# சிறு தொழில் வளர்ச்சிக்கு ஒரு சிட்கோ

அளவு சிறிது, அழகு பெரிது' என்பது ஒரு பிரபலமான கருத்து. மக்களாட்சியின் பலன்கள், தொழில் துறையிலும் பரவலாகக் கிடைக்கும் வகையில், குறைந்த அளவு தனிநபர் முதலீடு—அதிக அளவு வேலை வாய்ப்பு, என்ற அடிப்படையில், அரசின் சமூக நோக்கங்களுக்கு ஏற்ப, வேகமான தொழில் வளர்ச்சி ஏற்படுவதில் சிறு தொழில் துறை ஆற்றவேண்டிய முக்கிய பணியை உணர்ந்து, 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) என்ற தனி அமைப்பு உருவாக்கப்பட்டது. தொழில் மற்றும் வர்த்தக இயக்குநரகம் கவனித்து வந்த பணி 'சிட்கோ'விற்கு மாற்றப்பட்டது. ஆரம்பத்தில் இது தனியார் நிறுவனமாக இருந்தது. 1971-ஆம் ஆண்டு, பொது நிறுவனமாக மாற்றப்பட்டது. இதன் உரிமை முழுவதும் மாநில அரசுக்குச் சொந்தமானது.

சிட்கோவின் முக்கிய நோக்கங்கள்

- ★ தொழிற்கூடங்கள் தவணை முறை கொள்முதல் திட்டம் உள்பட கட்டமைப்பு வசதிகளை சிறு தொழில்களுக்கு அளித்தல். வளர்ச்சி மையங்களில் மேம்படுத்தப்பட்ட மனைகள், கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் மிகச்சிறிய தொழில்களுக்கு நிர்மாணிக்கப்பட்ட பணிக்கூடங்கள் ஆகியவை அமைத்தல்.
- ★ மத்திய அல்லது மாநில மானியம் வழங்குதல்.
- ★ வட்டியில்லா விற்பனை வரிக் கடன் உதவி.
- ★ குறைந்த அழுத்த மின் கட்டண உதவி.
- ★ முக்கிய பொருட்கள் வினியோகம்
- ★ விற்பனை உதவி
- ★ அடிப்படை மூலதன உதவிக்கான அனுமதி
- ★ படித்த வேலை வாய்ப்பற்றவர்களுக்கு விளிம்புத் தொகை உதவி அளித்தல்
- ★ நலிந்த தொழில் புனரமைப்பு
- ★ தொழில் வினைஞர்களுக்கு வழிகாட்டுதல்.

சிறு தொழில்களுக்கான வரையறையின்படி நிலம், கட்டடம், இயந்திரம் ஆகியவை சம்பந்தப்பட்ட தொகை, 20 லட்சம் ரூபாய்க்கும் குறைவாக உள்ள தொழில்களாகும். இதே நோக்கங்களுக்காக ரூ. 25 லட்சத்துக்கும் குறைவாகத் தேவைப்படும் துணைத் தொழில்களும், சிறு தொழில்களாகக் கருதப்படுகின்றன.

சிறு தொழில் துறையின் நலனைக் கவனித்துக்கொள்வதற்காக சிட்கோ, டிஐஜசி, தொழில் மற்றும் வர்த்தக இயக்குனரகம் தவிர மேலும் தேசிய சிறு தொழில் நிறுவனம், அபிவிருத்தி ஆணையர் (சிறு தொழில்கள்) போன்ற பல அமைப்புகளும் உள்ளன.

வட்டிவிகிதம், இரும்பு-எஃகு, தேனிரும்பு, சுட்ட நிலக்கரி, பாரஃபின் மெழுகு போன்ற முக்கிய மூலப் பொருட்களை வழங்கல் ஆகியவற்றில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

சிறு தொழில் துறை ஆற்றவேண்டியுள்ள முக்கியமான பணிகள், மற்றும் தொழில் அதிபர்கள், குறிப்பாக முதல் தலைமுறையைச் சேர்ந்தவர்களாக இருக்கும் தொழில் அதிபர்களின் சிறப்பான பிரச்னைகள், ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, கட்டமைப்பு வசதி அளித்தல், வளர்ச்சி மையங்களில் தொழிற் கூடங்களை நிர்மாணித்தல் மூலப்பொருட்களை வழங்கல், எளியமுறை கடன் உள்ளிட்ட தாராள கடனுதவி, விற்பனை வசதிகள், தொழில் முறை ஆலோசனை, நலிந்த தொழில்கள் புனரமைப்பு போன்ற கூட்டுச் சலுகைகள், உற்பத்தித் திறன் உயர்வு, அதிக வேலைவாய்ப்புப் பெருக்கம் ஆகியவற்றை நோக்கில் கொண்டு, இவைகளை வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக, சிட்கோ அளித்து வருகின்றது.

சென்னையில் தலைமையகத்தைக் கொண்ட 'சிட்கோ'வின் கிளைகள், அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் உள்ளன. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இதன் கட்டுப்பாட்டில் 49 தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. சிறு தொழில் துறைக்கு முக்கியமான மூலப் பொருட்களை வழங்குவதற்காக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் மூலப் பொருள் கிடங்குகள் உள்ளன.

'சிட்கோ'வின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 5 கோடி. இதில், ரூ. 4.60 கோடி செலுத்தப்பட்ட மூலதனமாகும். இந்த நிறுவனத்தில் ஆண்டு ஒன்றுக்கு மூலப் பொருள் விநியோகம் மூலம் ரூ. 20 கோடி, உதவிகள் மூலம் ரூ. 3 கோடி, விற்பனை உதவி மூலம் ரூ. 3 கோடி, என்ற அளவுகளில் வர்த்தகப் புழக்கம் நடைபெறுகிறது.

இந்த நிலையில், இனிவரும் ஆண்டுகளில் நாட்டின் முன்னோடி சிறு தொழில் வளர்ச்சி நிறுவனங்களில் ஒன்றாக, சிறு தொழில் துறையில் வேகமான தொழில் வளர்ச்சியை மேற்கொள்வதற்கு, 'சிட்கோ' பண்படுத்தப் பட்டுள்ளது.

## சிறுதொழில்களுக்குக் கூட்டமைப்பு வசதிகள்

தவணை முறை கொள்முதல் திட்டத்தின்கீழ், 'சிட்கோ' 200 சதுர அடி முதல் 6000 சதுர அடி வரையிலான பல்வேறு அளவுகளில், அதிக பரப்பளவை உள்ளடக்கி நிர்மாணிக்கப்பட்ட தொழிற் கூடங்களை சிறு தொழில்களுக்கு அளிக்கிறது. இத்திட்டத்தின் கீழ், கடன் தொகையை 10 ஆண்டு காலத்துக்குள் செலுத்தலாம். இதில் தவணை களைத் தாமதித்து செலுத்த, அனுமதிக்கப்படும் இரண்டு ஆண்டுகளும் உள்ளடங்கும். இதற்கான வட்டி விகிதம் பின்தங்கிய பகுதிகளில் 10.5 சதவிகிதமும், பிற பகுதிகளில் 13.5 சதவிகிதமும் ஆகும்.

இதுவரை 'சிட்கோ' தவணைமுறை கொள்முதல் திட்டத்தின் கீழ், 1005 தொழிற் கூடங்களை பல்வேறு பகுதிகளில் நிர்மாணித் துள்ளது. இந்தத் தொழிற் கூடங்கள் மூலம் சுமார் 25,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. மரபு ரீதியான 33 தொழிற் பேட்டை களையும் சிட்கோ நிர்வகிக்கின்றது. இவற்றில் அரசுக்குச் சொந்தமான 783 தொழிற் கூடங்கள் உள்ளன. இத்தொழிற் கூடங்கள் மூலம் ஏறத்தாழ 20,000 பேர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

சிறு தொழில்கள் தேவைகளுக்கு ஏற்ப, மேம்படுத்தப்பட்ட மனை களையும் பல்வேறு வளர்ச்சி மையங்களில் சிட்கோ அளிக்கிறது. இது வரை, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில், 951 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுமார் 30,000 பேர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

இனிவரும் ஆண்டுகளில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில், சிறு தொழில் முனைவோருக்கு நலம் பயக்கும் வகையில், பெருமளவில் மனைகளை ஒதுக்கீடு செய்ய 'சிட்கோ' உத்தேசித்துள்ளது.

## ஊக்கங்கள்

### மத்திய அல்லது மாநில மானியம் வழங்குதல்

தமிழ் நாட்டில், பின் தங்கிய தாலுகாக்களென மத்திய அரசால் குறிப்பிடப்பட்டுள்ள 33 பின் தங்கிய தாலுகாக்களில் அமைக்கப்படும் சிறு தொழில்கள், நிலம், கட்டடம், இயந்திரம் போன்ற நிரந்தர மூலதன முதலீட்டில், 15 சதவிகிதத்திற்கு இணையாக, மத்திய அரசு மூலதன முதலீட்டு மானியம் பெற தகுதியுள்ளவையாகும். இவை தவிர, தமிழ்நாடு அரசு அறிவித்து உள்ள 24 பிற தாலுகாக்களும், மாநில மானிய உதவி பெறத் தகுதி உள்ளவை. ஒவ்வொரு வகையி லும் சிறுதொழில் ஒன்றுக்கு அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச மானியத் தொகை, ரூ. 3 லட்சம் ஆகும்.

இதுவரை (28-2—'82 வரை) 2,455 சிறு தொழில் நிலையங் களுக்கு பலனளிக்கும் வகையில் மத்திய மாநில திட்டங்களின் கீழ் ரூ. 678.46 லட்சம் அளவுக்கு சிட்கோ மானிய அனுமதி அளித்துள்ளது. இந்தத் தொழில் நிலையங்கள் மூலம், ஏறத்தாழ 20 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

### வட்டியில்லா விற்பனை வரிக்கடன் வசதி

தமிழகத்தில் சென்னை நகரை ஒட்டி 15 கிலோ மீட்டர் சுற்று வட்டாரத்துக்கு அப்பால் உள்ள இடங்களிலும் கோவை, மதுரை, சேலம், திருச்சி ஆகிய நகரங்களை ஒட்டி 8 கிலோ மீட்டர் சுற்று வட்டாரத்துக்கு அப்பாலுள்ள இடங்களிலும் அமைந்துள்ள எல்லா புதிய சிறு தொழில் நிலையங்களும் இத்திட்டத்தின் கீழ் உதவி பெறத் தகுதி பெற்றவை. ஆனால் 3 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட நகரியங்கள், இந்த உதவியைப் பெறத் தகுதி பெற்றவை



அல்ல. ஒரு சிறு தொழிலுக்கு அனுமதிக்கப்படத்தக்க அதிகபட்ச கடனுதவி 1.25 லட்சம் ரூபாய் அல்லது நிரந்தரச் சொத்துக்களின் மதிப்பில் 8 சதவிகிதம். 6-வது ஆண்டிலிருந்து கடனை திருப்பிச் செலுத்த வேண்டும். இந்தக் கடனுக்கு வட்டி கிடையாது. இதுவரை (28–2–1982 வரை) இத்திட்டத்தின் கீழ் 17 தொழிலகங்களுக்குப் பயனளிக்கும் வகையில் சிறு தொழில் முனைவோருக்கு ரூ. 14.68 லட்சம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

## குறைந்த அழுத்த மின் கட்டண வசதி

இத்திட்டத்தின் கீழ், சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமம், நகர்ப்புற நிலவரி ஆளுகை, நகர்ப்புற நில உச்சவரம்பு ஆளுகை ஆகியவைக் குட்பட்ட பகுதிகள் தவிர, தமிழகத்தில் எங்கும் அமைக்கப்படும் சிறு தொழிலகங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் மானியம் அளிக்கப்படுகிறது. தொழிலகம் உற்பத்தி தொடங்கிய நாளிலிருந்து, 3 ஆண்டு வரைக்கும், மானியம் வழங்கும் வகையில் கட்டுப்பாடு உள்ளது.

28-2-1982 வரை, இத்திட்டத்தின் கீழ் 160 சிறு தொழிலகங்கள் பலன் பெறும் வகையில், 1.30 லட்சம் ரூபாய் மானியம் அளிக்க, சிட்கோ அனுமதி அளித்துள்ளது.



## அடிப்படை மூலதன உதவிக்கான அனுமதி

50,000 அல்லது அதற்குக் குறைவான மக்கள் தொகை கொண்ட கிராமப்புற, மற்றும் ஓரளவு நகர்ப்புறங்களில் அமைக்கப்படும் மிகச் சிறிய தொழில்களுக்கு, இத்திட்டத்தின் கீழ் உதவி அளிக்கப்படுகிறது. நிரந்தர மூலதன முதலீடு, முன்-இயக்க செலவுகள், மற்றும் 3 மாத பணிச் செலவுக்கான மூலதனம் அடங்கிய மொத்த முதலீட்டில், 10 சதவிகிதம், அல்லது ரூ. 20,000 இரண்டில் எது குறைவோ, அந்த அளவுக்கு கடனுதவி அளிக்கப்படும். ரூ. ஒரு லட்சத்துக்கும் மேற்படாத ஆலை-இயந்திர முதலீடு கொண்ட மிகச்சிறிய தொழிலங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் பலன் கிடைக்கும். விளிம்புத் தொகை உதவி மீது ஆண்டுக்கு 4 சதவிகிதம் தனிவட்டி விதிக்கப்படும். கிராமப்புறங்கள் மற்றும் ஓரளவு நகர்ப்புறங்களில் அமையும் மிகச்சிறிய தொழிலகங்களுக்கு இது பேருதவியாகும்.

## விளிம்புத் தொகை உதவி

படித்த வேலை வாய்ப்பற்றவர்கள், தங்களுடைய புதிய சிறு தொழிலகங்களைத் தொடங்கும் போது, நிதி நிறுவனங்கள் அனுமதிக்கும் பிரதான கடன் தொகையில், 10 சதவிகிதத்தை இத்திட்டத்தின் கீழ் விளிம்புத் தொகை உதவியாக சிட்கோ அளிக்கிறது. இதுவரை 864 பேருக்கு இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 97.87லட்சம் அளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், 10,200 பேர் வேலை வாய்ப்பை பெறுகின்றனர்.

## முக்கிய மூலப் பொருட்கள் வினியோகம்

இரும்பு-எஃகு, சுட்ட நிலக்கரி, தீக்குச்சி மெழுகு, காரீயம்-துத்தநாகம், பாரஃபின் மெழுகு, பொட்டாசியம் குளோரேட், காஸ்டிக்சோடா, சோடா ஆஷ், வச்சிரம், இறைச்சி கொழுப்பு, கொழுப்பு அமிலங்கள் போன்ற அரிதான தொழில்துறை மூலப்பொருட்களை சிட்கோ கொள்முதல் செய்து வினியோகிக்கிறது. இந்தப் பொருட்களை பெரிய உற்பத்தியாளர்களிடமிருந்து சிட்கோ கொள்முதல் செய்து பதிவு பெற்ற சிறு தொழில்களுக்கு, மாவட்ட தொழில்மைய பொது மேலாளர் மதிப்பீட்டின் அடிப்படையில் வினியோகம் செய்யப்படுகிறது. தேவைப்பட்டால், அரிதான மூலப்பொருட்களை பல்வேறு நாடுகளில் இருந்து சிட்கோ இறக்குமதியும் செய்கிறது. 28-2-1982 வரை சிட்கோ வினியோகித்துள்ள முக்கிய மூலப் பொருட்களின் விவரங்கள் விருடவாரியாக கீழே தரப்பட்டுள்ளன.

## விற்பனை உதவித் திட்டம்

தமிழ் நாட்டில் சிறு தொழில்களுக்கு விற்பனை உதவிகளை அளிப்பதற்கான வழிமுறை ஒன்றை, சிட்கோ உருவாக்கி உள்ளது. 1978–79 ம் ஆண்டு, விற்பனை உதவிக்கான பணி தொடங்கியது. 1978-79ல், வர்த்தகப் புழக்கம் ரூ. 26 லட்சம் என்ற சிறிய தொடக்கத்திலிருந்து, சிட்கோவின் தீவிரப் பணியின் மூலம், 1980-81ஆம் ஆண்டு

ரூ. 177.20 லட்சம் அளவுக்கு வர்த்தகப் புழக்கம் உயர்ந்தது. நடப்பு ஆண்டில் 28-2-82 வரை சிறு தொழில் நிலையங்களிடம் ரூ. 317.31 லட்சம் மதிப்புக்கு உத்தரவுகள் (Order) கொடுக்கப்பட்டுள்ளன, இவற்றில் ரூ. 150.06 லட்சம் மதிப்புள்ள உத்தரவுகள் (Orders) நிறைவு செய்யப்பட்டுவிட்டன. 31-3-82-க்குள் விநியோகங்களின் (Supply) அளவு ரூ. 200 லட்சத்தை எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பல்வேறு அரசு துறைகள் அமைப்புகள், எழுப்புகின்ற ஒப்பந்த கோரிக்கைகளில், சிறு தொழில் சார்பில் சிட்கோ தவறாமல் பங்கு ஏற்று, இதன் மூலம் தமிழக அரசு சிறு தொழில்களிடமிருந்து கொள் முதல் செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள 401 பொருள்கள், மற்றும் பிற பொருட்களைவிட சிறு தொழில்களின் பொருட்களுக்கு 15 சத விகிதம் விலை முன்னுரிமை போன்ற கொள்கை ஆதரவுகளின் பலன்கள், உரியவர்களுக்குக் கிடைக்க சிட்கோ வழி வகுக்கின்றது. சிட்கோவில் விற்பனை உதவி திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சிறு தொழில்கள், டேவணித் தொகை மற்றும் உத்தரவாத முன் பணம் போன்றவற்றைக் கட்டுவதில் இருந்து விலக்கு அளிக்கப் படுகின்றது.

1981-82 ஆண்டுக் காலத்தில் துவங்கி கணிசமான முன்னேற்றம் காணப்பட்டுள்ள சிட்கோவின் மற்றொரு பணி விநியோகம் மற்றும், பைசல் தலைமை இயக்குனரகத்தின் கொள் முதல் திட்டத்தில் பங்கு ஏற்றதாகும். இதன் மூலம், சிட்கோவின் பதிவு பெற்ற சிறு தொழிலகங்களுக்கு உத்தரவாத முன் பணம் கோரிக்கையிலிருந்து, விலக்கு மற்றும், விலை முன்னுரிமை போன்ற வசதிகள் அளிக்கப் படுகின்றன. 1981-82 ஆம் ஆண்டில், இந்த இயக்குனரகத்திடம் இருந்து ரூ. 10.93 லட்சம் மதிப்புள்ள ஆர்டர்கள் பெறப்பட்டு, 11 தொழிலகங்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டன. இது தவிர ஒரு பொருளுக்கு விலை உடன்பாடு பெறப்பட்டு, ஒப்பந்த அடிப்படையில், சிட்கோ எதிர்பார்க்கப்படும் வர்த்தகப் புழக்கம் ரூபாய் 10 இலட்சம் ஆகும்.

ஒரு பொருளுக்கான விகித ஒப்பந்தத்தின் கீழ், ரூபாய் 15 இலட்சம் அளவில் விற்பனைக்கு உரிய அளவு, இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.









## நலிந்த தொழில்கள் புனரமைப்புத் திட்டம்

நலிந்த தொழிலகங்களுக்கு ரூ. 20,000 வரை சிட்கோ அதிக பட்ச உதவி அளிக்கிறது. நிதி நிறுவனங்கள் அனுமதித்துள்ள கூடுதல் வசதிகள் அனைத்தையும் பெறுவதற்கு தொழில் முனைவோர் விளிம்புத் தொகையை செலுத்த வேண்டிய கூடுதல் மூலதனத் தேவையில், 50 சதவிகிதம் அளிக்கப்படுகிறது. சில குறிப்பிட்ட நிலைமைகளில் விளிம்புத் தொகை உதவி 75 சதவிகிதம் வரை அளிக்க நலிந்த தொழில் புனரமைப்புக்கான குழு பரிந்துரை செய்யலாம். இதுவரை (28—2—82 வரை), 19 சிறு தொழிலகங்கள் பலன் பெறும் வகையில் ரூ. 17.39 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

## சிறுதொழில் முனைவோருக்கு ஆலோசனை மற்றும் வெளிநாட்டில் வாழும் இந்தியர்களுக்கு தமிழகத்தில் தொழில் துவக்க உதவி

சிறு தொழில் முனைவோர், தங்கள் திட்டங்களைச் செயல்படுத்த சிட்கோ ஆலோசனை மற்றும் தொடர்புப் பணிகளை அளிக்கிறது. சிறு தொழில் முனைப்பை வளர்ப்பதற்காக அவ்வப்போது பயிற்சித் திட்டங்களை அளிக்கவும் சிட்கோ விரும்புகிறது. இதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. வெளி நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் தமிழ்நாட்டிலுள்ள சிறு தொழில்களில் முதலீடு செய்யும் வகையில், உதவிகளையும் சிட்கோ அளிக்கும்.

வெளி நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் முதலீடு செய்ய விரும்பும் தொகைக்கு ஏற்ப தகுந்த திட்டங்களைக் கண்டறிவதில் அனைத்து முயற்சிகளும் 'சிட்கோ'வினால் மேற்கொள்ளப்படும்.



## மிகச் சிறிய துறைத் திட்டம் (TINY SECTOR SCHEME)

சிறு தொழில்களிலும் சிறிதாக உள்ள தொழில்களுக்கு உதவும் வகையில், 'மிகச் சிறிய துறை திட்டம்' 1977-ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. இது சிறு தொழில் துறை உதவியில் குறிப்பிடத்தக்க ஒரு வளர்ச்சியாகும். இயக்கத் தொழிற்பேட்டை என்ற கோட்பாடு ஆரம்பகாலத்தில் பல சிக்கல்களைச் சமாளிக்க நேரிட்டபோதிலும், இப்போது போதுமான அளவு பரவியுள்ளது. இதுவரை இத்திட்டத்தின் கீழ், அதிக பலன் அடைந்துள்ள பிரிவுகள் தீப்பெட்டித் தொழில், பட்டுப்பூச்சி வளர்த்தல், மரச் சிற்பக் கூடங்கள் அமைத்தல் முதலியன.

இயக்கத் தொழில் பேட்டைகளை, சிறு தொழில்களிலும் மிகச் சிறிய தொழில்களுக்கு உதவும் வகையில், தோல் தொழில், ஆட்டோ மொபைல் மற்றும் கைத்தறித்துறை ஆகியவைகளுக்கு உதவும் வகையில், விரிவமைக்க வேண்டும் என்று கோரும் அளவுக்கு, கணிசமான ஆதரவு பெருகி வருகிறது. மாநிலத்தின் தொலைதூர உள்பகுதிகளுக்கும் தொழில் திட்டத்தை எடுத்துச் செல்லும் வகையில், தீவிர தொழில் வளர்ச்சிக்கு 'மிகச் சிறிய துறை' உண்மையிலேயே ஒரு புரட்சிகர நடவடிக்கையாகும். சமுதாயத்தின் எளிய பிரிவினர், குறிப்பாக பெண்கள், கிராமப்புற கைவினைஞர்கள், சிறு தொழில்



நுட்ப வியலாளர் ஆகியோருக்கு இதன் சேவைகள் முக்கியமாகக் கிடைக்க வேண்டும் என்பது குறிக்கோளாகும்.



ஒவ்வொரு தொழிலகத்துக்கும் ரூ. 10 ஆயிரம் முதல் ரூ. 15 ஆயிரம் வரை முதலீடு தேவைப்படும். ஒவ்வொரு தொழிலகத்திலும் சுமார் 10 பேருக்கு வேலை கிடைக்கும் என்ற அடிப்படையில் பார்க்கும்போது இதன் மூலம் உருவாகும் வேலைவாய்ப்பு கணிசமானதாகும்.

மாநிலத்தில் இதுவரை 84 இடங்களில் 1360 மிகச்சிறிய கூடங்களை சிட்கோ அமைத்துள்ளது. உண்மையிலேயே சிறிய தொழில் முனைவோருக்கு உதவும் வகையில், இந்த ஆண்டுத் திட்ட காலத்தில் அம்பத்தூரில் சுமார் 100 கூடங்களும் கிண்டி தொழிற்பேட்டையில் சுமார் 50 கூடங்களும் வேகமாக அமைக்கப்பட்டு வருகின்றன. இதற்கான ஆதரவு, ஊக்கம் அளிப்பதாக உள்ளது. இத்திட்டத்தினால் கிடைக்கும் அதிக பயன் காரணமாக, பெருமளவு விழிப்புணர்வு ஏற்பட்டு இந்தக் கூடங்களை அமைக்க முன்னுரிமை அளிக்கவேண்டிய அளவுக்கு முக்கியத்துவம் ஏற்பட்டுள்ளது.



## மதிப்பீடு

இனிவரும் ஆண்டுகளில், சிறு தொழில் துறையின் விற்பனை அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். நல்ல விற்பனை வாய்ப்பு உறுதியாக இருந்தால், சிறு தொழில்துறை நிச்சயமாக சிறப்பாகச் செயல்படும். இத்துறையின் சிறப்பான செயல்பாடு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வலுவான ஓர் அடிப்படையை உருவாக்கும்.

அதிக முதலீடு, குறைந்த வேலை வாய்ப்பு கொண்ட பெரிய தொழிற்சாலைகள் தங்கள் பணிகளை பரவலாக்கி, சிறு தொழில் துறைக்கு துணைத் தொழில்களை ஒப்படைக்கலாம். இனி வரும் காலங்களில் பல்வேறு துறைகளிடமிருந்து இயக்கத் தொழிற்பேட்டைகளுக்கான தேவை அதிகமாக இருக்கும்.



திருப்போரூரில் (ஆலத்தூர்) ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள மருந்து உற்பத்தித் தொழிற்பேட்டை, இயக்கத் தொழிற்பேட்டைத் துறையில் ஒரு முன்னோடி நடவடிக்கையாகும். இதேபோன்று, ஆம்பூரில் தோல் தொழிலுக்கான இயக்கத் தொழிற்பேட்டை, கடந்த பல ஆண்டுகளாக தோல் தொழிலில் இருந்துவரும் சிக்கலான பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதில் ஒரு மைல் கல்லாக அமையும்.

சிறு தொழில்களில் உடனடிக் கவனம் செலுத்த வேண்டிய பல பிரச்சினைகளைக் கண்டறிவதில் கடந்த ஆண்டுகளில் சிட்கோவுக்கு கணிசமான அனுபவமும் அறிவாற்றலும் கிடைத்துள்ளன,

சிறு தொழில்களுக்கான மூலப் பொருட்களைக் கையாள்வது, இந்த அமைப்புக்கு ஒரு பெரிய சவாலாக அமையலாம்; மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட தொழிற்கூடங்களுக்கான தேவை திடீரென்று உயர்ந்துள்ளது. சிறு தொழில்களை அமைப்பதில். குறிப்பாக, பரம்பரை தொழில் முனைவோர் அல்லாதவர்களிடம், அதிக விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதை, இது எடுத்துக் காட்டுகிறது. இதுவரை இல்லாத அளவு, மேம்படுத்தப்பட்ட மனைகள், தொழிற்கூடங்கள் இவைகளின் தேவைகளைச் சமாளிக்கும் வகையில், போதுமான ஆதாரங்களைத் திரட்டுவதில் உள்ள நிதி சம்பந்தப்பட்ட சிரமங்களை, முற்றிலும் ஒதுக்கிவிட முடியாது.



சிட்கோ அளிக்கும் உத்தரவாதமான கூட்டு ஊக்கங்களின் பயனாக பெண்கள் சமுதாயத்தில் எளிய பிரிவினரிடமிருந்து தொழில் முனைவோர் அதிக அளவில் முன்வருவது உண்மையிலேயே மகிழ்ச்சி ஊட்டும் ஒரு நல்ல அறிகுறியாகும். ஆலோசனை மற்றும் உதவிகளை நாடும் வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்கள் உட்பட, துடிப்புள்ள தொழில் முனைவோருக்கு உறுதி அளித்து புதிய சவால்களைச் சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கை சிட்கோவுக்கு இருக்கிறது.

# தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி



கல்விக்காக 1982-83ஆம் ஆண்டில் ஒதுக்கியுள்ள ரூ. 291 கோடி அவ்வாண்டு வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 1,370 கோடியில் 21.3 விழுக்காடாகும்.

கல்வி மானியக் கோரிக்கையின் கீழ் 1982-83 வரவு-செலவு மதிப்பீட்டில் பல்வேறு நிலைக் கல்விப் பணிகளுக்கும் நிதி ஒதுக்கங்கள் செய்யப்பட்டுள்ளன.

அந்த நிதி ஒதுக்கங்களைக் கணக்கில் கொண்டால் 1982-83ல் கல்விக்காகச் செலவிட இருக்கும் தொகை ரூ. 318 கோடியாகும்.

ஆதி திராவிடர் மற்றும் பின்தங்கிய வகுப்பினர் நலப் பள்ளிகள், விடுதிகள்; ஆதி திராவிடர் பழங்குடி வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினரைச் சார்ந்த மாணவர்களுக்கும் படிப்புதவித் தொகைகள் முதலியவற்றிற்கான செலவு, சீர்திருத்தப் பள்ளிகள், தொழில் பயிற்சி நிறுவனங்கள் ஊனமுற்றோர்க்கான பள்ளிகள் போன்றவற்றிற்காக ஆகும் செலவு; மருத்துவக் கல்வி; வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகியவை கல்விகளுக்கு ஆகும் செலவு முதலிய செலவினங்கள் கல்விச் செலவு பற்றிய புள்ளி விவரங்கள் சேரா என்பது முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சமாகும்.

**பள்ளிக்கல்வி (பொது)**

1982-83ஆம் ஆண்டில் கல்வி மானியத்திற்கான ரூ. 291 கோடியில் பள்ளிக் கல்விக்கு (மேல்நிலைப் பள்ளிக் கல்வி உட்பட) ஒதுக்கியுள்ள தொகை சுமார் ரூ. 239 கோடியாகும். 1981 அக்டோபர் 1ஆம் தேதி அன்றைய நிலவரப்படி தமிழ்நாட்டில் மொத்தம் 36,896 பள்ளிகள் இருந்தன. அவற்றில் முதல்நிலை பள்ளிகள் 27,767. நடுநிலைப்பள்ளிகள் 5,556. உயர்நிலைப் பள்ளிகள் 3,573 (1,405 மேல்நிலைப் பள்ளிகள் உட்பட) மைய அரசின் உயர்நிலைப் பள்ளிக் கல்வி வாரியம் போன்றவற்றோடு இணைந்த 137 பள்ளிகளும்—79 உயர்நிலைப் பள்ளிகளும் 58 மேல் நிலைப் பள்ளிகளும்— மொத்தப் பள்ளிகளின் எண்ணிக்கையாகிய 36,896-ல் அடங்கும். அனைத்துப் பள்ளிகளிலும் பணி செய்து வந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 2.71 இலட்சம். பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை 93.75 இலட்சம்.



1982-83ஆம் ஆண்டில் 1,000 இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பதவிகள் நடுநிலைப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் சேர்த்து 150 உடற் பயிற்சி ஆசிரியர் பதவிகள்; நடுநிலைப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளின் நடுநிலை வகுப்புகளுக்கும் சேர்த்து 500 தமிழாசிரியர் பதவிகள்; உயர்நிலைப் பள்ளிகளுக்கு 50 தலைமை ஆசிரியர் பதவிகள்; உயர்நிலைப் பள்ளிகளுக்கு 300 பி.எட். தர ஆசிரியர் பதவிகள் ஆகியனவ ஏற்படுத்தப்படும். நடுநிலைப் பள்ளிகளில் உள்ள பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர் பதவிகளல் 100 முழு நேரப் பதவிகளாக உயர்த்தப்படும்.

**இளஞ்சிறார் கல்வி**

தமிழக அரசு முதன் முறையாக 1982-83ல் இளஞ்சிறார்கள் கல்விக்கெனப் பெரிய அளவிலான ஒரு திட்டத்தைத் தொடங்கவிருக்கிறது. இளஞ்சிறார்களுக்குப் பள்ளி செல்லும் மனப் போக்கைப் புகட்டுவதன் மூலம் இளஞ்சிறார் கல்வியானது தொடக்கக் கல்வி வளரவும் உதவும். மேலும் இது பள்ளி செல்லும் வயதுள்ள சிறுமியர் தம் தம்பி தங்கையரைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பிலிருந்து விடுபட்டு அச்சிறுமியர் பள்ளி செல்வதற்கும் உறுதுணை புரியும். பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டத்திலும் சிறுமியரிடையே தொடக்கக் கல்வியை மேலும் பரப்புவதற்கு குறிப்பான முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. 1982-83ல் தொடங்கப்படவிருக்கும் இத்திட்டத்தின் முதற் கட்டமாக இம்மாநிலத்திலுள்ள 4,433 குழந்தைகள் நல மையங்கள் (பால்வாடிகள்) ஒவ்வொன்றிலும் ஒரு நர்சரி பிரிவு ஏற்படுத்தப்படும். இந்த நர்சரி பிரிவுகளுக்கான பாடத் திட்டங்களை வகுப்பதற்காக 1981 நவம்பரில் ஒரு குழு அமைக்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்திற்கென 1982-83ல் ரூ 1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**தொடக்கக் கல்வி**

வகுப்புகள் 1—5க்குரிய 6—11 வயதுத் தொகுதிச் சிறுவர்களில் 94.76 விழுக்காட்டினரும் வகுப்புகள் 6—8க்குரிய 11—14 வயதுத்

தொகுதிச் சிறுவர்களில் 64.55 விழுக்காட்டினரும் இதுவரை (1981-82 )பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். பள்ளி வயதுச் சிறுவர் அனைவருக்கும் தொடக்கக் கல்வியை விரிவாக்குதல் புதிய 20 அம்சத் திட்டத்தில் ஒரு அம்சம் ஆகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் (அதாவது 1984-85க்குள்) இந்தியாவெங்கும் 6—11 வயதுத் தொகுதியினரில் 95 சதவிதத்தினரும் 11—14 வயதுத் தொகுதியினரில் 50 சதவீதமும் பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டும் என்பது ஆறாவது திட்ட இலக்கு ஆகும். தமிழகத்தில் 6—11 வயதுத் தொகுதியைப் பொறுத்தவரை அந்த இலக்கு இப்பொழுதே எய்தப்பட்டு இருப்பதும் 11—14 வயதுத் தொகுதியரைப் பொறுத்தவரை அந்த இலக்கை விஞ்சியிருப்பதும் மகிழ்ச்சிக்குரியது. இவ்விரு வயதுத் தொகுதிகளின் கீழ் 1981-82ஆம் ஆண்டில் 1.83 இலட்சம் மாணவ மாணவியர் கூடுதலாகச் சேர்க்கப்பட்டனர். 1981-82ஆம் ஆண்டில் இருந்த 33.323 தொடங்கப் பள்ளிகளில் முதல் நிலைப் பள்ளிகள் (1— 5 வகுப்புகள்) 27,767 நடுநிலைப் பள்ளிகள் (1— 8 அல்லது 6— 8 வகுப்புகள்) 5,556 ஆகும். படித்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 70.12 இலட்சமாகும். பணியாற்றிய ஆசிரியர்களின் எண்ணிக்கை 1,79,257 ஆகும். ஒட்டு மொத்தமான ஆசிரியர் மாணவர் விகிதம் 1:37 ஆகும்.

பள்ளியில் சேரும் (6—11வயது) மாணவ மாணவியருள் தொடர்ந்து 5-வது வரையில் படிக்காமல் இடையிலேயே பள்ளியில் இருந்து நின்று விடுவோர் விழுக்காடு 1973-74ஆம் ஆண்டில் 51 சதவீதமாக இருந்தது. 1980-81ல் 30 சதவீதமாகக் குறைந்து உள்ளது. தொடக்கப்பள்ளி நண்பகல் உணவுத் திட்டம் இலவசமாகப் புத்தகங்கள் கற்பலகைகளை வழங்கும் திட்டம்; 1—3 வகுப்புகளில் மாணவர்கள் அனைவரையும் மேல் வகுப்பிற்கனுப்பும் முறை (1977-78 முதல் அமலாக்கப்பட்டது); போன்றவை வரவேற்கத்தக்க இம்முன்னேற்றத்திற்கு முக்கியக் காரணங்களாகும்.

**உயர்நிலைப் பள்ளிக் கல்வி**

1981-82ல் தமிழ்நாட்டில் 14—16 வயது தொகுதியினர் 17.25 இலட்சம் பேர்களுள், 41 விழுக்காடாகிய 7.13 இலட்சம் பேர் உயர்நிலைப் பள்ளிகளில் 9—10 வகுப்புகளில் பயின்று வந்தனர். 1981-82ல் உயர்நிலைப் பள்ளி வகுப்புகள் நடைபெற்று வந்த பள்ளிகளின் எண்ணிக்கை 3,573 ஆகும்.

1981-82ல் மேற்கண்ட 3,573 பள்ளிகளில், வேவ்வேறு நிலைகளில் பயின்று வந்த மாணவர்களின் எ்ண்ணிக்கை 23.63 இலட்சமாகும்.

1981-82ல் அரசுப் பள்ளிகள் 97; நகராட்சிப் பள்ளிகள் 2 தனியார் பள்ளிகள் 19; ஆக மொத்தம் 118 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டன. சிறுபான்மையினரால் புதிதாகத் திறக்கப்பட்ட தனியார் உயர்நிலைப் பள்ளிகள் எ்ண்ணிக்கை இதில் சேரவில்லை.

**கல்விச் சலுகைகள், படிப்பு உதவித் தொகைகள் மற்றும் இதர ஊக்குவிப்புப் பணிகள்:**

தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி பொதுவாக 1—12 வகுப்புகளில் ஏறத்தாழ அனைத்து நிலைகளிலும் இலவசமாகும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்கள் சிறப்புப் படிப்பு உதவித் தொகைகளையும், இதர வசதிகளையும் ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறையிடமிருந்து பெறுகின்றனர். அதேபோன்று வசதியைப் பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் பிற்பட்டோர் நலத்துறையிடமிருந்து பெறுகின்றனர். கிராமப் புற மாணவர்களுக்கான படிப்புதவித் தொகைத் திட்டத்தைப் பள்ளிக் கல்வித்துறை நிருவகித்து வருகிறது. இம்மாநிலத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும், ஆண்டுக்கு நான்கு மாணவர்களுக்குப் புதிதாக படிப்பு உதவித் தொகைகள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன. ஒருமுறை உதவித் தொகையினைப் பெற்ற மாணவர் மேல்நிலை கல்வி உட்பட, பள்ளிக் கல்வியை முடித்து வெளிவரும்வரை இவ்வுதவித் தொகையினைப் பெறுவர்.

**மேல்நிலைப் பள்ளிக் கல்வி:**

1981-82இல் செயல்பட்டு வந்த 1347 மேல்நிலைப் பள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு (1981-82ஆம் ஆண்டு மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட 106 பள்ளிகள் உட்பட):



| பள்ளிகளின் வகை | எண்ணிக்கை |
|---|---|
| எஸ்.எஸ்.எல்.சி | 1,274 |
| ஆங்கிலோ-இந்தியன் | 26 |
| மெட்ரிகுலேசன் | 33 |
| தொழில் நுட்பப் பள்ளிகள் | 14 |
| மொத்தம் | 1,347 |

(மைய அரசின் பள்ளிக் கல்வி வாரியம் போன்றவற்றுடன் இணைந்த 58 மேல்நிலைப் பள்ளிகளின், எண்ணிக்கை மேற்கண்ட 1,347 பள்ளிகள் என்ற எண்ணிக்கையில் சேர்க்கப்படவில்லை.)

**மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்பாடங்கள்:**

1981-82ல் மொத்தம் 1,014 மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்பாடங்கள் கற்பிக்கப்பட்டன. சில பள்ளிகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட தொழிற் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. அவ்வாறு கற்பிக்கப்பட்ட தொழிற் பாடங்களின் மொத்த எண்ணிக்கை 1,602 ஆகும். 1981-82ல் மேல்நிலைப் பள்ளிகளில் பயின்று வந்த 2.75 இலட்சம் மாணவர்களில் 58,520 பேர் (அதாவது சுமார் 21 சதவிகிதத்தினர்) விவரப்படி தொழிற்பாடங்களைப் பயின்று வந்தனர்.

| | தொழிற்பாட வகை | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | வேளாண்மை | 4,561 | 35 | 4,596 |
| 2. | மனையியல் | 73 | 2,818 | 2,891 |
| 3. | வாணிகத்துறை | 20,884 | 10,617 | 31,501 |
| 4. | பொறியியலும் தொழில்நுட்பவியலும் | 15,037 | 86 | 15,123 |
| 5. | உடல்நலம் | 327 | 3,919 | 4,246 |
| 6. | பலவகை | 66 | 97 | 163 |
| | மொத்தம் | 40,948 | 17,572 | 58,520 |

முன்னர் உயர்நிலைப் பள்ளிகளில் இருமுனைப் பாடங்களைக் கற்பித்து வந்தவர்களான 491 முழு நேர தொழிற்பாட ஆசிரியர்களும், அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றுவோரில் பொருத்தமானவர்கள் இருப்பின் அவர்களும், பிற இடங்களில் வெளி நபர்களும் ஆக சுமார் 4,300 பகுதி நேர ஆசிரியர்களும் (மாதம் ரூ. 150 ஊதியத்தில்) தொழிற் பாடங்களைக் கற்றுத் தருகின்றனர். தொழிற்பாட மாணிட்டர்களை நியமிக்கும் முன்னோடித் திட்டமும் செயற்பட்டு வருகிறது.

மேல்நிலைப் பள்ளித் தொழிற்பாட மாணவர்களின் வேலை வாய்ப்புக்களை அதிகரித்தல், அவர்கள் உயர்கல்வியும் தொடர் கல்வியும் பெற வழி செய்தல், போன்ற நோக்கங்களுடன், மேல்நிலைக் கல்வித் தொழிற்பாட வகுப்புகளின் பாடங்கள் பாடத்திட்டம் ஆகியவற்றை மாற்றி அமைப்பதற்காக, 1982 சனவரியில் உயர்மட்டக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.

**கல்லூரிக் கல்வி:**

தமிழ்நாட்டில் கலை, அறிவியல், மற்றும் வணிகவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை தற்பொழுது 187ஆக உள்ளது. அவற்றில் பயில்வோர் எண்ணிக்கை 1980-81ல் 1,54,700 பேர் ஆக இருந்தது. 1981-82ல் 1,77,100 ஆக அதிகரித்து உள்ளது.

இத்துறையில் 1979-80ஆம் ஆண்டு முதல் சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய ஐந்து ஊர்களில் அந்தந்த வட்டாரத்துக்கு ஒன்று என்ற வகையில் கல்லூரிக் கல்வி துணை இயக்குநர் அலுவலகங்கள் 5 செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வட்டார அலுவலகத்திலும், ஒரு துணை இயக்குநர் பிற பணியாளர்களுடன் வேலை செய்து வருகின்றனர். 1982-83ஆம் ஆண்டில் இவ்வலுவலகங்களில் ஒவ்வொன்றிலும் மேலும் ஒரு உதவி இயக்குநர் பதவி ஏற்படுத்தப்படும்.

அண்மையில் பாரதியார் பல்கலைக் கழகமும், பாரதிதாசன் பல்கலைக் கழகமும் அமைக்கப்பட்ட நிலையில் பல்கலைக் கழக வாரியாக மேற்கண்ட 187 கல்லூரிகளின் விவரம் வருமாறு:

| பல்கலைக்கழகம் | நிருவாக வரம்பிற்குட்பட்ட மாவட்டங்கள் | கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| சென்னைப் பல்கலைக் கழகம் | சென்னை, செங்கற்பட்டு, வடார்க்காடு, தென்னார்க்காடு, சேலம், தர்மபுரி | 44 |
| பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி | 33 |
| மதுரை காமராஜ் பல்கலைக்கழகம் | மதுரை, இராமநாதபுரம் திருநெல்வேலி, கன்னியாகுமரி | 77 |
| பாரதிதாசன் பல்கலைக்கழகம் திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் புதுக்கோட்டை | 33 |
| | | 187 |

இவ்வாண்டில் (1981-82) நிறுவப்பட்ட மூன்றாவது பல்கலைக் கழகம் தஞ்சாவூரில் 1981 செப்டம்பரில் அமைக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆகும்.

1981-82ல் சுய ஆட்சி உரிமை தரப்பட்டுள்ள 3 கல்லூரிகளையும் சேர்த்து இம் மாநிலத்தில் மொத்தம் 13 கல்லூரிகள் சுய ஆட்சி உரிமை பெற்றுள்ளன. அக் கல்லூரிகள் தாமே பாடத்திட்டங்களை வகுக்கவும் தேர்வு நடத்தவும் உரிமை பெற்றவை. எனினும் பட்டங்களை அந்தந்தப் பல்கலைக் கழகங்களே வழங்கும்.

**தொடர் கல்வி:**

மாலை நேர வகுப்புகளை நடத்திவரும் கல்லூரிகளின் எண்ணிக்கை 33-மதுரை காமராஜ் பல்கலைக் கழகமும் சட்டக் கல்லூரிகளும் உட்பட, இம்மாலை நேர வகுப்புகளில் பயில்வோர் சுமார் 8000 பேராவர். மேல் நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் "உட்படுத்தப் பட்ட" ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் 1981-82ல், "கோடை விடுமுறைக்கால வகுப்பு மற்றும் அஞ்சல் வழிக் கல்வி" தரும் முனைப்புத் திட்டம் ஒன்றின் கீழ் கணிதம் இயல்பியல், வேதியியல், விலங்கியல், தாவர இயல், மனையியல் மற்றும் பொருளாதாரம் ஆகிய பாடங்களில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் கல்லூரிகளில் நடத்தப்பட்டன. இத் திட்டத்தின் கீழ் 172 ஆசிரியர்கள் "எம்.ஏ" வும், 731 ஆசிரியர்கள் "எம்.எஸ்.சியும்" பயின்றனர். 1982-83ல் அரசுக் கல்லூரிகளில் கூடுதல் மற்றும் புதிய மாலை நேர வகுப்புகளைத் துவங்குவதற்காக ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போது மதுரை காமராஜ், அண்ணாமலை மற்றும் சென்னைப் பல்கலைக் கழகங்கள் அஞ்சல்முறை வகுப்புகளை நடத்தி வருகின்றன. 1981-82ல் மொத்தம் 90,000 பேர் அவற்றில் பயின்று வந்தனர். மேலும், முறையான கல்வி பெறாதவர்களுள் 21 வயது நிரம்பியவர்களுக்காக மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் நடத்திவந்த "அனைவரும் படிக்கத் தக்க பல்கலைக் கழக" வகுப்புக்களில் ஏறத் தாழ 14,000 பேர் பயின்று வந்தனர்.

**கல்லூரிகளில் தமிழ் பயிற்று மொழி:**

தமிழ்ப் பயிற்று மொழியை ஊக்குவிக்கும் முறையில் பட்ட வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஊக்க உதவி பணம் புத்தகப்படியாக ரூ. 180 தரப்பட்டு வருகிறது. 1980-81ல் 18,040 பேர்களும் 1981-82ல் 20,695 பேர்களும் இவ்வுதவிப் பணம் பெற்றனர். இத்திட்டத்திற்காக 1982-83ஆம் ஆண்டில் ரூ. 35 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் தமிழைப் பாடமொழியாகக் கொண்டுள்ள கல்லூரி மாணவர்களுக்காக இதுவரை 901 பாடப் புத்தகங்களை வெளியிட்டுள்ளது. ரூ. 50 லட்சம் விலை மதிப்புள்ள புத்தகங்கள் கல்லூரிகளிலுள்ள புத்தக வங்கிகளுக்கு இலவசமாக அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தை மதிப்பீடு செய்யவும் வருங்காலத்தில் புதிய வெளியீடுகள் பற்றிய திட்டமிடவும் அண்மையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

**தொழில் நுட்பக் கல்வி:**

தொழில்நுட்பக் கல்விக்காக 1982-83ல் சுமார் ரூ. 15.66 கோடி (கட்டிடங்கள், கடன்கள், அண்ணா பல்கலைக் கழகத்துக்கு மானியம் ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கங்கள் உட்பட) ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துறையின் கீழ் 7 பொறியியல் கல்லூரிகளும், 50 பல் தொழில் நுட்பப் பயிலகங்களும் (மகளிர் பயிலகங்கள் ஏழும், தனித் தொழில் பட்டய டிப்ளமா-கல்வியகங்கள் எட்டும் உட்பட) 14 தொழிற்பாட மேல்நிலைப் பள்ளிகளும் உள்ளன.



இவற்றில் சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கை பொறியியற் கல்லூரிகளில் (திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரியில் தமிழ் நாட்டுக்கு ஒதுக்கியுள்ள இடங்கள் உட்பட) முழு நேரப் பட்ட வகுப்புகளில் 1,470 பேர் பல் தொழில் நுட்பப் பயிலகங்களில் பட்டயப் படிப்புகளில், 6,800 பேர்; மற்றும் **தொழிற் பாட மேல் நிலைப் பள்ளிகளில்** 840 பேர்; பல் தொழில் நுட்பப் பயிலகங்களில் சேர அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதோடு, பின்வருமாறு புதிய பல் தொழில் நுட்பப் பயிலகங்களையும் திறந்துள்ளதால் அப்பயிலகங்களில் சேர அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது:

| ஆண்டு | புதிதாகத் திறந்த பல் தொழில் பயிலகங்கள் |
|---|---|
| 1979—80 | 1 |
| 1980—81 | 5 (மகளிர் பயிலகங்கள் 2 உட்பட) |
| 1981—82 | 6 |

அண்ணாமலை பல்தொழிற் பயிலகம், செட்டிநாடு, மற்றும் முத்தையா பல்தொழிற் பயிலககம் அண்ணாமலை நகர் ஆகிய பயிலகங்களில் 1981-82இல் ஷிப்டு முறை புகுத்தப் பட்டது. அவற்றில் இம்முறை செயல்படும் பாங்கைக் கவனித்த பின்னர் மற்றும் சில நிறுவனங்களுக்கும் இம்முறை விரிவாக்கப் படும். 1981-82இல் திருநெல்வேலியில் புதிதாக ஒரு அரசு பொறியியற் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது.

**தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தின கழுளள பொறியியல் கல்லூரிகள்:**

1982-83ல்; பொறியியற் கல்லூரிகளில் பின்வரும் பட்ட மேற்படிப்பு வகுபபுகள தொடங்கப்படும்.

தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தின் கீழுள்ள பொறியியல் கல்லூரிகள்:

| | |
|---|---|
| அழகப்பச் செட்டியார் தொழில்நுட்பக் கல்லூரி, காரைக்குடி. | நுண் அலை மற்றும் ஒளி அலை பொறியியல். |
| அரசினர் தொழில் நுட்பக் கல்லூரி கோயம்புத்தூர் | செயல் முறை வேதியியல் |
| கோயம்புத்தூர் தொழில் நுட்ப நிறுவனம், கோயம்புத்தூர் | கணக்கீட்டுப் பொறி சார்ந்த வரைவு வடிவமைப்பு. |

**அண்ணா பல்கலைக் கழகம்:**

பொறியியலிலும் தொழில் நுட்பத்திலும் தரமான உயர்கல்வி தரும் ஒரு சிறந்த மையத்தினை உருவாக்கும் நோக்கத்துடன் 4.9.1978 அன்று அண்ணா பல்கலைக் கழகம் சென்னையில் நிறுவப்பட்டது. பொறியியல் கல்லூரி, கிண்டி ஏ.சி. தொழில் நுட்பக் கல்லூரி வளாகத்தில் அமைந்திருந்த சென்னைப் பல்கலைக் கழகத் தொழில் நுட்பத் துறைகள்;அப் பல்கலைக்கழக கட்டிடக் கலை— நகர்ப்புறத் திட்டப்பள்ளி; சென்னைத் தொழில் நுட்ப நிறுவனம் குரோம்பேட்டை ஆகிய நான்கு நிறுவனங்களை ஒருங்கிணைத்து அண்ணா பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 3,900க்கும் அதிகமாகும். அவர்களில் பட்ட வகுப்புகளில் 3,255 பேரும், பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் 686 பேரும் பயிலுகின்றனர். இவ்வெண்ணிக்கையில் 300 மாணவியரும் அடங்குவர். இப்பல்கலைக் கழகத்தில் 21 பட்ட வகுப்புப் பாடமுறைகள், 31 பட்ட மேற்படிப்புப் பாடமுறைகள், 7 பட்ட மேற்படிப்புக்கு உயர்ந்த நிலையில் பட்டயப் படிப்பு பாடமுறைகளும் உள்ளன. கணிதம், இயல்பியல், வேதியியல் ஆகியவற்றில் எம்.ஃபில், படிப்பிற்கான வசதிகளும், பொறியியல், தொழில் நுட்பம், அறிவியல் ஆகிய துறைகளில் முனைவர் (டாக்டர்) பட்டம் பெற ஆராய்ச்சி செய்வதற்கான வசதிகளும் இப்பல்கலைக் கழகத்தில் உள்ளன. நாட்டு நலனுக்கு முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் ''எத்தனால்''ஐக் கொண்டு தானியங்கி உந்து வண்டிகளை இயக்குதல் போன்றவற்றில்— ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சக்திவள் ஆதாரங்கள்; கட்டடத் தொழிலியல் ஆகிய துறைகளில் ஆய்வு மையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இப்பல்கலைக் கழகத்திற்குத் திட்டமல்லாத மானியமாக ரூ. 180 லட்சம் வழங்க 1982-83ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் பல்கலைக் கழக மானியக் குழுவின் உதவியையும் பெற்று, மேலும் பல வளர்ச்சிப் பணிகளை அண்ணா பல்கலைக் கழகம் மேற்கொள்ள வகை செய்யும் பொருட்டு திட்ட மானியமாக ரூ. 62 இலட்சம் தரவும் 1982-83ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வரசின் நிதியுதவியுடன் 'அண்ணா பல்கலைக் கழகம் ''தொலைவிலுணரும் ஆராய்ச்சி நிலையம் (Remote Sensing Centre) அமைக்க அரசு ஏற்பளித்துள்ளது. பூமியிலுள்ள பலவகையான கனிமம் போன்ற மூலப் பொருட்களை ஆய்வு செய்து கண்டறிந்து, கணக்கெடுத்து, வகைப்படுத்தி பயன்படுத்தும் பணிகளுக்கு இந்நிலையம் உதவிபுரியும். இதனால் வேளாண்மை, கனிமப் பொருள்களைக் கண்டுபிடித்துக் கணக்கெடுத்தல் போன்ற பல்வேறு துறைகளிலும் இம்மாநிலத்தில் உள்ள மூலப் பொருள் ஆதாரங்களை மிகு பயன்விளையும் வகையில், பயன்படுத்த இயலும்.

**ஆவணக் காப்பக நூலகம்:**

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம், நிறைய புத்தகங்களையும் ஆவணங்களையும் கொண்ட மாபெரும் நூலகங்களில் ஒன்றாகும். மற்ற பொது மற்றும் கல்லூரி பல்கலைக் கழக நூலகங்களைப் போல் அல்லாமல் புத்தகங்கள் மட்டுமின்றி ஆவணக் காப்பக நூலகத்தில் பல்வேறு அரசுத் துறைகளின் வெளியீடுகள்- சென்சஸ் அறிக்கைகள், மாவட்ட விவரச் சுவடிகள், நிருவாக அறிக்கைகள் போன்றவை— ஏராளமாகத் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன. இந்நூலகத்தில் நாள்தோறும் சுமார் 100 புத்தகங்கள் வரப்பெற்று வகைப்படுத்தப்பட்டு, பட்டியலிடப் பெறுகின்றன.

**அருங்காட்சியகங்கள்:**

சென்னை, புதுக்கோட்டை, சேலம், மதுரை ஆகிய இடங்களில் அரசு அருங்காட்சியகங்கள் அருங்காட்சியக இயக்குநரின் கீழ் செயல்படுகின்றன. திருச்சிராப்பள்ளியில்



மாவட்ட அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு வருகிறது. வேலூரில் ஒன்றும், ஈரோட்டில் ஒன்றுமாக 1982-83ல் மாவட்ட அருங்காட்சி யகங்கள் மேலும் இரண்டு அமைக்கப்படும்.

சென்னையில் ரூ. 29 இலட்சம் செலவில் குழந்தைகள் 'அருங்காட்சியகம் கட்டும் பணி யும் சென்னை அருங்காட்சியகத்தைச் சார்ந் துள்ள தேசீய கலைக்கூடத்துக்கு ரூ. 25 இலட் சம் செலவில் புதிய கட்டிடம் கட்டும்பணியும் நடைபெற்று வருகின்றன.

**தொல் பொருள் ஆய்வுத்துறை:**

மாநில தொல் பொருள் ஆய்வுத்துறை பண்டைய வரலாற்றுச் சின்னங்களைப் பாது காத்தல்; வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங் களில் காட்சியகங்கள் அமைத்தல்; தமிழகத் தின் பண்டைய வரலாற்றை வெளிப்படுத்தும் கல்வெட்டுக்களைக் கண்டுபிடித்தல்; வரலாற் றுச் சிறப்பு மிக்க இடங்களில் அகழ்வாய்வு செய்தல்; பண்டைய தமிழ் ஓலைச்சுவடிகளை சேகரித்து பாதுகாத்து வெளியிடுதல் ஆகிய தனது பணிகளை முனைப்புடன் செய்து வரு கிறது.



அண்மையில் கோவாவிலுள்ள "தேசீய ஆழ்கடல் ஆராய்ச்சி நிறுவனத்தோடு" இணைந்து இத்துறை காவிரிப்பூம்பட்டினத் திற்கு அப்பாலுள்ள கல்லுக்கடியில் நடத் திய தொல் பொருள் ஆய்வு பயனுள்ள முடிவு களைத் தந்துள்ளது. தரங்கம்பாடி வரை நடந்த இந்த ஆய்விலிருந்து பூம்புகார் வான கிரி பகுதியில் கடலுக்கடியில் கட்டிடங்களும் மூழ்கிப்போன கப்பல்களும் புதைந்து கிடக் கின்றன என்பதாகத் தெரியவருகிறது. இந்த ஆய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

பண்டைய வரலாற்றுச் சின்னங்களைப் பழுதுபார்த்து பேணிவரும் பணி தொடர்ந்து விரிவாக மேற்கொள்ளப்படும். கங்கை கொண்ட சோழபுரம், கோவலன்பொட்டல் ஆகிய இடங்களில் இத்துறை மேற்கொண் டுள்ள அகழ்வாய்வுகள் தீவிரமாக்கப்படும். வரும் 1982-83ம் ஆண்டில் பின்வரும் புதிய பணிகளை மேற்கொள்ள திட்டங்கள் தீட்டி யுள்ளது. அதாவது ஆசிரியப் பெருமக்கள் 200 பேர்களுக்குக் கல்வெட்டு, பண்டைய வரலாறு ஆகியவை குறித்து பயிற்சி அளித்தல் அண்மையில் அகழ்வாய்வு மற்றும் கல்வெட்டு கள் மூலம் வெளியாகியுள்ள வரலாற்றுச் செய்திகளை அறிஞர்களுடைய கவனத்துக்குக் கொண்டு வரும் வகையில் மாவட்டக் கருத் தரங்குகள் நடத்துதல்; சுற்றுலாத் துறையுடன் இணைந்து செஞ்சிக் கோட்டை போன்ற வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த இடங்களைச் சுற்றுலா மையங்களாக மாற்றுதல்: தமிழக வரலாறு பற்றிய புதிய கண்டுபிடிப்புகளை அறிஞர்கள் ஆராய்ந்து கல்வித் திட்டத்தில் சேர்க்க ஆவன செய்தல்; கல்வெட்டு ஆராய்ச்சியைத் தஞ்சா வூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து மேலும் விரிவாக மேற்கொள்ளு தல்; தமிழகக் கோயில்களிலுள்ள பண்டைய ஓவியங்களை வேதியியல் முறையில் தூய்மைப் படுத்தி பாதுகாக்கும் முயற்சிகளை விரிவாக்கு தல்—ஆகிய இந்தப் புதிய பணிகளை மேற் கொள்வதற்கான திட்டங்கள் இத்துறையிடம் இருந்து வரப்பெற்று ஆய்வில் உள்ளன.

## தமிழ் வளர்ச்சி

**தமிழ் வளர்ச்சி இயக்ககம்:**

அனைத்துத் துறைகளிலும் அரசுப் பணி கள் அனைத்திலும் தமிழைப் பயன்படுத்தச் செய்வதற்கான முனைப்பான நடவடிக்கை களைத் தமிழ் வளர்ச்சித்துறை எடுத்து வரு கிறது. அரசு அலுவலகங்கள் அனைத்திலும் தமிழ் ஆட்சிமொழித் திட்டத்தைச் செம் மையாகவும் முழுமையாகவும் நிறைவேற்று வதற்கான மூவாண்டு முனைப்புத் திட்டம் ஒன்று 1981-82ல் 17 துறைகளில் செயல் படுத்தப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் அது மேலும் பல துறைகளுக்கு விரிவாக்கப்படும்.

1867-1935 ஆண்டுகளில் வெளியான தமிழ் நூல்களின் விவர அட்டவணை 19 தொகுதிகளாக இதுவரை வெளியிடப்பட் டுள்ளது. 1935க்குப் பின் வெளியான தமிழ் நூல்களுக்கான விவர அட்டவணையைத் தொகுக்கும் பணி தொடருகிறது.

தமிழில் மூல நூல்களை ஆக்கி வெளி யிடும் ஆசிரியர்களுக்கு நிதியுதவி அளிப்பதற் கான திட்டம் ஒன்றையும் தமிழ் வளர்ச்சித் துறை செயல்படுத்தி வருகிறது. 1981-82ல் இத்திட்டத்தின் கீழ் 7 புத்தகங்களின் ஆசிரி யர்களுக்கு நிதியுதவி தரப்பட்டது. தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் இரண்டாவது பதிப் பைத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் மூலமாகத் தயாரித்து வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறந்த தமிழ் நூல்களுக்கு விருது அளிக் கும் திட்டத்தின் கீழ் 1975-80 ஆண்டுகளில் வெளியான தமிழ் நூல்களில் சிறந்தவற் றுக்கு 1982ஆம் ஆண்டு திருவள்ளுவர் நாள் அன்று (சனவரி 15) விருதுகள் அளிக்கப்பட் டன.

**தமிழ்நாட்டு வரலாறு:**

தமிழ்நாட்டு வரலாற்றில் தொல் பழங் காலத்தைப் பற்றிய முதல் தொகுதி வெளி யிடப்பட்டுள்ளது. சங்க காலம் பற்றிய இரண் டாவது தொகுதி இரண்டு பகுதிகளாக விரை வில் வெளியிடப்படும்.

**மொழி பெயர்ப்புப் பணி:**

பிறமொழி நூல்களில் சிறந்தவற்றைத் தமிழில் வெளியிடுவதற்கும், அரிய தமிழ்

இலக்கியங்களைப் பிற மொழிகளில் வெளியிடுவதற்குமான திட்டத்தின் கீழ் இதுவரை மொழி பெயர்ப்பு நூல்கள் ஆறு வெளியிடப்பட்டுள்ளன. இரண்டு நூல்கள் விரைவில் வெளியாகும். மேலும் நூல்கள் மொழிபெயர்ப்புக்கு எடுக்கப்பட்டுள்ளன.

**தமிழ்க் கவிஞர்களுக்கும், அறிஞர்களுக்கும் பாராட்டு:**

இசுலாமியத் தமிழ் இலக்கியத்தில் ஆராய்ச்சி செய்வதற்காக மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் உமறுப் புலவர் பெயரில் ஆராய்ச்சிப் பணியிடம் ஒன்று, சென்னை பல்கலைக் கழகத்தில் தமிழ் கிறித்துவ இலக்கிய வளர்ச்சிக்கு அறக்கட்டளை ஒன்று, சென்னைப் பல்கலைக் கழகத்தில் பாவேந்தர் பாரதிதாசன் நினைவாக ஒன்றும், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நினைவாக ஒன்றுமாக இரண்டு அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் ஆகியவற்றை இவ்வரசு ஏற்படுத்தியுள்ளது. பாவேந்தர் பாரதிதாசன் ''விருது'' ரூ. 10,000. இதுவரை கவிஞர்கள் திருவாளர்கள் சுரதா, வாணிதாசன், எஸ்.டி. சுந்தரம், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், முத்துலிங்கம் ஆகியோருக்கு அளிக்கப்பட்டது தமிழ் எழுத்தாளர்களுக்கான திரு வி.க.விருது ரூ. 10,000 இதுவரை திருவாளர்கள் நாரண துரைக்கண்ணனுக்கும், அ.கி. பரந்தாமனாருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

**வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு ஓய்வூதியம்:**

மாத வருமானம் ரூ. 400க்கு மேல் இல்லாமல் இருக்கிற தமிழறிஞர்களுக்கு மாதம் ரூ. 250 வீதம் ஓய்வூதியம் தரப்படுகிறது. இதுவரை 120 அறிஞர்களுக்கு ஓய்வூதியம் தரப்பட்டுள்ளது.

**பிற மாநிலங்களிலும் பிற நாடுகளிலும் தமிழ்க் கல்வியையும் தமிழாராய்ச்சியையும் ஊக்குவித்தல்:**

பிற மாநிலப் பல்கலைக் கழகங்கள், நிறுவனங்கள் ஆகியவைகள் 24க்குத் தமிழில் பகுதிநேர பட்டய வகுப்புகள் தொடங்குவதற்காக இதுவரை நிறுவனத்துக்கு ரூ. 15,000 வீதம் மானிய உதவி அளிக்கப்பட்டுள்ளது. திருவனந்தபுரத்திலுள்ள ''திராவிட மொழிகளின் மொழியியல் ஆராய்ச்சிக்கான பன்னாட்டுப் பள்ளி''யின் ஆராய்ச்சிப்பணிகளுக்காகவும் மானியம் தரப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்கள் தமிழ் கற்றுக் கொள்ளப் பயன்படுத்தக்கூடிய பாடங்களைக் கொண்ட புத்தகம் ஒன்றை வெளியிடும் பணியில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

**செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகரமுதலி:**

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் முதல் மடலத்தின் முதல் பகுதி—மொழியியலறிஞர் மறைந்த தேவநேயப் பாவாணர் அவர்கள் தொகுத்தது—விரைவில் வெளியிடப்படும். அவ்வகர முதலியின் மற்ற பகுதிகளைத் தொகுக்கும் பணி தொடருகிறது.

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்:**

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 19 ஆராய்ச்சி அலுவலர்கள், 12 முழு நேர ஆராய்ச்சி மாணவர்கள், டாக்டர் பட்டம் பெற ஆய்வு நிகழ்த்தும் 38 பகுதிநேர மாணவர்கள் ஆகியோர் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ளனர். தமிழ் ஆராய்ச்சி பற்றிய அரையாண்டு ஆராய்ச்சி இதழ் ஒன்றை இந்நிறுவனம் வெளியிட்டு வருகிறது. வெளி நாட்டு மற்றும் பிற மாநில மாணவர்கள் 28 பேருக்கு இந்நிறுவனம் இவ்வாண்டு தமிழ் கற்றுத் தந்தது. தமிழ் இலக்கியக் கொள்கைகள் பற்றிய மாதா மாதாந்திர கருத்தரங்குகளுடன் இந்நிறுவனம் இலக்கியம், பண்பாடு போன்ற துறைகளில் தமிழரின் மரபுச் செல்வம் பற்றிய பெரும் கருத்தரங்குகளையும் நடத்தி வருகிறது. 1981-82ல் வரலாற்று மரபுச் செல்வம் பற்றிய பெரும் கருத்தரங்கு நடத்தப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியம், வரலாறு பற்றிய சிறந்த நூல்களும், இதுகாறும் வெளியிடப்படாத சில ஓலைச் சுவடிகளின் அச்சிட்ட வடிவங்களுமாக இதுவரை 44 தரமான நூல்களை இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. இந்நிறுவனத்தில் ''சுவடி''யியல் ''மொழிபெயர்ப்பியல்'' எனும் பட்ட மேற்படிப்புப் பட்டய வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன.



**தமிழ்ப் பல்கலைக் கழகம்:**

இவ்வாண்டு 15-9-1981ல் தொடங்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக் கழகம் பல்வேறு புலங்களுடனும் துறைகளுடனும் செவ்வனே செயல்படுகிறது. அண்மையில் வெளியீட்டுப் பிரிவு ஒன்று தொடங்கப்பட்டது. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி அருகில் சுமார் 1,000 ஏக்கர் நிலம் இப்பல்கலைக் கழகத்துக்காகக் கையகப்படுத்தப்பட்டு வருகிறது. பல்கலைக் கழகத்திற்கான கட்டிட வேலை இன்னும் சில மாதங்களில் தொடங்க இருக்கிறது.

**உலகத் தமிழ்ச் சங்கம்:**

மதுரையில் நடந்த ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி அறிவித்த உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையைத் தலைமை இடமாகக் கொண்டு நிறுவப்படும். இச்சங்கம் நிறுவுவதற்காக நிலம் விரைவில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்த நிறுவனத்தில் தமிழ் மொழி வல்லுநர்கள் பணிபுரிவர். இவர்கள் தமிழ் ஆராய்ச்சிப் பணியினைத் தீவிரமாக மேற்கொள்வார்கள். இந்தச் சங்கம் ஆராய்ச்சித் துறையில் முழு தன்னாட்சி உரிமை உள்ளதாகச் செயல்படும். அது உலகெங்கணும் உள்ள பல உலகத் தமிழ்ச் சங்கக் கிளை நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு இயங்கும். இச்சங்கம் நிறுவ 1982-83ல் ரூ. 105 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

# அரசு அருங்காட்சியகம்,
# சென்னை-600 008.

# கலைப்பொருட்கள் கோள்முதல்

அரசு அருங்காட்சியகம், மற்றும் தேசியக் கலைக் கூடத்திற்குக் கலைப் பொருட்களை வாங்கும் குழு கீழ்க் கண்ட வகை கலைப் பொருட்களைக் கொள்முதல்செய்யும் பொருட்டு ஆலோசனை நடத்த அருங்காட்சியக நூற்றாண்டு பொருட்காட்சி மண்டபத்தில் 1982 ஜூலைத் திங்கள் 9-ம் நாள் காலை 11 மணி அளவில் கூட இருக்கிறது.

**வகை : 1**

***கீழ்க்கண்ட பண்டைய கலைப்பொருட்கள்***

இந்திய கற்சிற்பங்கள்; துணி மணிகள்; மரம்; கண்ணாடி; தந்தம்; அப்பிரகம்; காகிதம் முதலியவற்றின்மேல் தீட்டப்பட்ட தஞ்சாவூர் வண்ண ஓவியங்கள் பொம்மைகள் போன்ற கோவிலில் பயன்படுத்தப்படும் கலைப் பொருட்கள். கிராமிய மற்றும் பழங்குடி மக்கள் கலைப் பொருட்கள்; இந்திய நாணயங்கள் மற்றும் செப்பேடுச் சாசனங்கள்.

**வகை : 2**

***சம காலத்திய கலைப் பொருட்கள்***

சிற்பங்கள், ஓவியங்கள் முதலியவை.

மேற்படி இருவகை கலைப் பொருட்களை அளிக்க விரும்பும் நபர்கள் பொருட்களின் விரிவான பட்டியல் ஒன்று தயாரித்து குறைந்தபட்ச விலைகளையும் குறித்து 1—7—1982க்குள் " செயலாளர், கலைப்பொருட்கள் வாங்கும் குழு,
அரசு அருங்காட்சியகம், சென்னை—600 008 "
என்ற முகவரிக்கு எழுதவும்.

மேலும் 9—7—1982 அன்று கலைப்பொருட்கள் குழுவினிடம் நேரில் சமர்ப்பிக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்படாத பொருட்களை உரிமையாளர்கள் குழுவின் கூட்டம் முடிந்தவுடன் அன்றைய தினமே எடுத்துச் செல்ல வேண்டும். வகை இரண்டில் ஒரு நபர் ஒரே கலைஞரின் கலைப் பொருட்களில் இரண்டிற்கு மேல் சமர்ப்பிக்கக் கூடாது.

குறிப்பு : சம காலத்திய கலைப்பொருட்களில் நன்கு சட்டம் போடப்பட்ட பொருட்கள் மட்டுமே ஒப்புக் கொள்ளப்படும்.

அருங்காட்சியகங்களின் இயக்குநர்,
அரசு அருங்காட்சியகம், சென்னை.

DIPR/28648/82-2/APRC.








# மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா !

நாகர்கோயில்
6.6.1982







# சிலைத் திருட்டும் மீட்பும்

[குற்றப்பிரிவு, குற்றப்புலனாய்வுத்துறைத் துணைத் தலைவர் அவர்களின் அறிக்கையின் சுருக்கம். தஞ்சை திருச்சி மாவட்டங்களைச் சேர்ந்த கோயில்களில் நிகழ்ந்த சிலை திருட்டுக்களும், அவற்றை அமெரிக்கா மற்றும் இலண்டனிலிருந்து மீட்பது பற்றிய நடவடிக்கைகளும்.]

**த**ஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருவிலாக்குடி என்ற கிராமத்தில் 20.2.78ந் தேதி இரவில் கள்வர்கள் ஈசுவரர் கோவிலை உடைத்து அதனுள் இருந்த விலை மதிக்க முடியாத சுமார் 100 கிலோ எடையுள்ளதும் 105 சென்டி மீட்டர் அளவுள்ளதுமான நடராஜர் சிலையை பீடத்துடன் (பீடம் 76 சென்டிமீட்டர் அளவுள்ளது) பெயர்த்து எடுத்துக்கொண்டு சென்று விட்டனர்.



21.2.1978 அன்று மேற்படி கோயில் நிர்வாக அதிகாரி (அருள்மிகு மணவாளேஸ்வர சுவாமி கோயில்) குத்தாலம் காவல்நிலையத்தில் மேற்படி சிலை களவு போனது குறித்து விசாரிக்கும்படி முறையீடு அளித்தார்.

இவ்வழக்கு சம்பந்தமாக மேற்கொண்டு துப்பு எதுவும் கிடைக்காததால், 9.8.79ந் தேதி தமிழகக் குற்றப்பிரிவு, குற்றப்புலனாய்வுத்துறை இவ்வழக்கு விசாரணையை மேற்கொண்டது. புலனாய்வில் கிடைத்த தகவல்படி பழைய குற்றவாளியும், மாயூரம் மாப்படுகையைச் சேர்ந்த தங்கப்பாவின் குமாரர் சுப்பிரமணியன் என்பவர் 17.11.1979ந்தேதி கைது செய்யப்பட்டு கவனமாக விசாரிக்கப்பட்டதில், சென்னையில் சீதம்மாள் காலனியில் முதல் குறுக்குத் தெருவில் 13-ஆம் எண் வீட்டில் வசிக்கும் விஜயராகவன் என்பவரின் குமாரர் சி.வி.ராமன் என்ற நபர் தன் கூட்டாளிகள் பத்துபேர்களுடன் 1974ஆம் ஆண்டிலிருந்து 1979-ம் ஆண்டு வரை 15 கோயில்களில் கும்பலின் துணையுடன் தொன்மை வாய்ந்த சிலைகளை, தஞ்சை மாவட்டம், பாபநாசம், திருநீலக்குடி, குத்தாலம், குடபேரளம், பெரம்பூர், குடவாசல், பொறையார், நடுகாவேரி, பாலையூர், தஞ்சாவூர் கிழக்கு காவல் நிலையத்திலும், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மீன்சுருட்டி, தி. பழூர், விக்கிரமங்கலம் ஆகிய ஊர்களிலும் களவாடியுள்ளனர். சட்ட விதிகளின்படி சி.வி. ராமனும் அவர் கூட்டாளிகளான பத்து நபர்களும் கைது செய்யப்பட்டனர். குற்றவாளிகளான டி.சுப்பிரமணியம், எஸ். ராஜாராம், ஏ. கிருஷ்ணமூர்த்தி, டி. கணேசன், அருணாசலத்தின் குமாரர் ராஜேந்திரன், சி.வி.ராமன் ஆகியோர் சீர்காழி கும்பகோணம் இரண்டாம்வகுப்பு நடுவர் நீதிமன்றத்தில் தங்கள் குற்றங்களுக்கு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தனர்.

மேற்கண்ட களவாடப்பட்ட சிலைகள் சி.வி. ராமனிடம் தரப்பட்டது. அச்சிலைகளை சி.வி. ராமன், சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் வசிக்கும் பால்ராஜ் நாடார் என்பவரிடம் கொடுத்து அவைகளைப் பம்பாயில் உள்ள வல்பை பிரகாஷ் பிரேம்தார் ஷரிசா மூலமாகவும், கல்கத்தாவைச் சேர்ந்த ஜேதா அகுஜா மூலமும் வெளிநாட்டிற்கு விற்றுவிட்டனர். அரிய நடராஜர் சிலை உட்பட மேற்கண்ட அனேக சிலைகள் இலண்டன் நகரைச் சேர்ந்த பெரியதொரு நிலையத்தின் பின்ஸ்பர்க் சர்ச்சில் கலைப் பொருள் விற்பனை அகம் நடத்தும் பினாகுல்கி என்பவருக்கும் ஆல்ர்பட் அம்ரான் என்பவருக்கும் விற்கப்பட்டது. களவாடப்பட்ட இச்சிலைகள் இந்தியாவிலிருந்து லண்டனுக்கு மரபுமீறிய சட்டத்திற்குப் புறம்பான வகையில் கள்ளத்தனமாகக் கடத்தப்பட்டுள்ளன. எவரெஸ்ட் காலரி என்ற கலைப்பொருள் விற்பனை அகம் கையாண்ட நடைமுறை தந்திரம் என்னவெனில் கடத்தப்பட்ட சில சிலைகளை வைத்துக்கொண்டு, ஒரு சிலையை விற்பனை செய்யப் போவதாக ‘அபாலோ’ என்ற லண்டன் பத்திரிகையில் விளம்பரப்படுத்தி, விளம்பரத்தைக் கண்டு வாங்க வந்த வாடிக்கையாளர்களிடம் களவாடப்பட்ட எல்லாச் சிலைகளையும் விற்பனைக்கு காட்டுவது என்பதே அவர்கள் செயல்.

மேற்கண்ட சிலை திருட்டு வழக்கில் புலனாய்வு செய்ய காவல்துறை துணைத்தலைவர் (குற்றப்புலனாய்வுத்துறை) குற்றப்பிரிவு திரு. கே. கே. ராஜசேகர நாயர் அவர்களும், குற்றப்புலனாய்வுத்துறை துணைக் கண்காணிப்பாளர் திரு ஜே. இராமகிருஷ்ணனும் வெளிநாடுகள் சென்றனர். அமெரிக்காவில் அமெரிக்க சுங்க இலாகா அதிகாரியுடன் தொடர்பு கொண்டு டெக்காசு மற்றும் போர்ட் ஓர்த்தில் உள்ள கிம்பல் கலைப் பொருள் விற்பனையிடத்திற்குச் சென்று நடராஜர் சிலையைப் பார்வையிட்டனர். டெக்காசில் நடத்திய விசாரணையில் இந்தியாவிலிருந்து கடத்தப்பட்ட நடராஜர் சிலை 1979-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் வினாகுலால், எல்.டி.சோராரியாவும் இலண்டனில் 15, பெர்க்லி தெருவில் உள்ள எவரெஸ்ட் கலைப் பொருள் விற்பனையகத்தினைச் சேர்ந்த ஆல்பர்ட் அம்ரான் அறுநூறு ஆயிரம் அமெரிக்க டாலருக்கு டெக்னாசில் போர்ட் ஓர்த்தைச் சேர்ந்த சிம்பெல் கலைப் பொருள் அருங்காட்சியகத்திற்கு விற்கப்பட்டுள்ளது. ஆல்பர்ட் அம்ரான் என்பவர் இலண்ட

னில் 111-ஆம் எண்ணில் போர்டசா ஆவில், போட்சா என்ற இடத்தில் வசிக்கிறார். பினாகுலால் என்பவர் ஏமாற்றும் உள்நோக்கத்தோடு முறைகேடாகத் தவறான 'உறுதி மொழிகளைத் தந்து மேற்கண்ட சிலையை விற்றுள்ளார். வாஷிங்டனில் உள்ள உலகப் போலீஸ் (இண்டர்போல்) நிறுவனத்தைச் சேர்ந்த திரு ஹொலின்ட்ராப்பைச் சந்தித்து அவரிடம் இந்தியாவிலிருந்து களவாடப்பட்ட நடராஜர் சிலை திரும்ப தாயகம் கொண்டுவரும் முயற்சிக்கு உதவி அளிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

**தஞ்சை மாவட்டம் புன்செய் கிராமத்திலுள்ள அருள்மிகு நல் துணை ஈஸ்வரர் ஆலயத்திலிருந்து திருடப்பட்ட சிலைகள் மீட்பது குறித்து.**

10.5.79-ந்தேதி இரவு மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த வரசநாடு அஞ்சல் மகாரானுபுரம் பெருமாள் குமாரன் கண்ணசன் என்பவரும், அவருடைய கூட்டாளிகளும் தஞ்சை மாவட்டம் புஞ்சை கிராமத்தின் கண் உள்ள அருள்மிகு நல்துணை ஈஸ்வரர் கோயில் சுவர் ஏறிக் குதித்து கோயில் பூட்டை உடைத்து, தனி அம்மன், ஸ்ரீவள்ளி, ஸ்ரீதெய்வானை, ஸ்ரீ பிரதோஷநாயகரும் அம்மனும், ஸ்ரீ மாணிக்க வாசகர் ஸ்ரீ சுப்பிரமணியர், ஸ்ரீவள்ளி, மற்றும் ஸ்ரீ தேவசேனை முதலிய எட்டு பஞ்சலோகத்தாலான சிலைகளைக் களவாடினர்.

மேற்கண்ட எட்டு சிலைகளையும் கணேசன் என்பவர் பம்பாயில் மாடர்ன் ஆண்டிகிராப்ட் உரிமையாளர் டி. ரமணிக்லால் பட்டுக்கு விற்றுவிட்டார். இதனை விலைக்கு வாங்கிய ரமணிக்லால் லண்டனில் உள்ள தன் குமாரரும் இங்கிலாந்தில் வாம்பனை மிடில் செக்ஸ் எண். 31-ல் கிங்ஸ்மோர் சாலையில் புராகிரசில் கலைப் பொருள் விற்பனையக உரிமையாளருமான கிஷோருக்கு அனுப்பி விட்டார். இந்தத் தகவலின்பேரில் உலகப் போலீஸ் (இன்டர்போல்) டெல்லி கிளையினரை இது சம்பந்தமாக இலண்டன் இன்டர்போலை அணுகி, கடத்தப்பட்ட சிலைகளைப்பற்றிய விவரங்களைச் சேகரிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. சிலைகளின் போட்டோ பிரதிகளும் இலண்டன் இன்டர்போலுக்கு அனுப்பபப்பட்டது. இலண்டன் ஸ்காட்லாந்து யார்டு போலீஸ் ஹிதேந்திர ராவலை(ரமணிக்லால் குமாரர்) இது சம்பந்தமாகக் கைது செய்தது. இவர்களைக் கைது செய்து, 240 சிலைகளையும், பஞ்சலோகத்திலான ஸ்ரீ வள்ளி, ஸ்ரீ தெய்வானை, தஞ்சை மாவட்ட புஞ்சைக் கிராம அருள்மிகு நல் துணை ஈசுவரர் கோயில், மற்றொரு ஸ்ரீ வள்ளியைக் கைப்பற்றினர்.



செம்பனார் கோயில் காவல் நிலைய வழக்கு சம்பந்தப்பட்ட கடத்தப்பட்ட மூன்று சிலைகள் தானா என்பதை நேரில் கண்டு அடையாளப் படுத்த உரிய கோவில் அர்ச்சகரை 5.1.1982ந் தேதிக்குள் லண்டன் நகருக்கு அனுப்பும்படி ஸ்காட்லாந்து யார்டு போலீசார், டெல்லி இன்டர்போல் நிறுவனத்திற்குச் செய்தி அனுப்பினார்கள். அவ்வாறே தமிழக அரசு ஒப்புதலுடன், தஞ்சை மாவட்டம் புஞ்சைக் கிராம கோயில் குருக்கள் திரு எஸ். முத்தையா குருக்கள் (சுந்தரம் குருக்கள் குமாரர்)2.1.82ல் அழைத்துக் கொண்டு போகப்பட்டது. 4.1.1982ல் திரு முத்தையா குருக்களை, காவல்துறை பண்டகசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த மூன்று சிலைகளை—ஸ்ரீ வள்ளி, ஸ்ரீ தெய்வானை மற்றுமொரு ஸ்ரீ வள்ளி முதலிய மூன்று சிலைகளை உரிய முறையில் கண்டுபிடித்து அடையாளங்காட்டி ஊர்ஜிதப்படுத்தினார். அவருடைய தமிழ் வாக்குமூலம் உரிய மொழிபெயர்ப்பாளர் உதவியுடன் ஆங்கிலத்தில் லண்டன் 4-ஆம் நெம்பர் குற்ற ஆய்வு மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது. அச்சமயம் குற்றவாளி ஹிதேந்திர ராவல் வழக்கு மன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

மேலும், ஸ்காட்லாந்து காவல் துறையினர், பிரதோஷ நாயகரும், அம்மனும் உள்ள நல்துணை ஈசுவரர் கோயில் சிலைகளின் கலர் போட்டோ ஒன்றைக் குற்றவாளி ஹிதேந்திரா ராவலிடமிருந்து கைப்பற்றினர். இலண்டனில் உள்ள இந்தியத் தூதுவராக வர்த்தகப் பிரிவு ''முதற் செயலாளர்'' திரு. ஏ.பார்டியா அவர்கள், ஸ்காட்லாந்து போலீசார் கைப்பற்றி வைத்துள்ள 240 சிலைகளையும் சம்பந்தப்பட்ட ஹிதேந்திர ராவல் பற்றிய வழக்குகள் முடிந்ததும், இந்தியாவுக்குத் திரும்ப அனுப்ப ஏற்பாடு செய்வதாக உறுதிஅளித்துள்ளார். இதுகுறித்து இந்திய அரசாங்கத்திற்கு அமெரிக்காவில் உள்ள நம் இந்தியத் தூதுவரை அணுகி தற்போது போர்ட் ஒர்த் கிம்பெல் கலைப்பொருள் விற்பனையகத்தில் வைக்கப்பட்டுள்ள திருவிலாக்குடி கோயிலில் களவுபோன நடராஜர் சிலையை மீட்டு விரைவில் தாயகம் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் எனவும், அங்ஙனமே இங்கிலாந்து நாட்டு இந்தியத் தூதுவரை அணுகி தமிழகத்தினைச் சேர்ந்த நல்துணை ஈஸ்வரர் கோயிலில் இருந்து களவுபோன மூன்று சிலைகளையும் மீட்டுக்கொண்டு வர, மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.




## அட்மிஷன் அறிக்கை

1982-83 ஆண்டுக்கான அடியிற்கண்ட டிப்ளமா மற்றும் சர்டிபிகேட் பயிற்சிகளில் சேர விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| பயிற்சியின் பெயரும் பயிற்சிக் காலமும் | கல்வித் தகுதி |
|---|---|
| **டிப்ளமா பயிற்சிகள்:** | |
| 1. இயக்குநர் மற்றும் திரைக்கதை எழுதும் பயிற்சி (3 ஆண்டுகள்) | அங்கீகாரம் பெற்ற ஒரு பல்கலைக் கழகப் பட்டம் |
| 2. சினிமாபடப்பிடிப்புக்கலை (3 ஆண்டுகள்) | இயல்பியல் மற்றும் வேதி இயல்களுடன் மேல் நிலைப் படிப்பு அல்லது போட்டோகிராபி (அல்லது) அவற்றுக்கு ஈடான கல்வித் தகுதி |
| 3. ஃபிலிம் பிராசசிங் (3 ஆண்டுகள்) | ,, ,, |
| 4. சவுண்ட் ரிகார்டிங் & சவுண்ட் இன்ஜினியரிங் (3 ஆண்டுகள்) | இயல்பியல் மற்றும் வேதி இயல்களுடன் மேல் நிலைப் படிப்பு அல்லது ரேடியோ & டெலிவிஷன் அல்லது டொமெஸ்டிக் எலக்ட்ரானிக் எக்விப்மென்ட் அல்லது அவற்றுக்கு ஈடான கல்வித்தகுதி |
| 5. ஃபிலிம் எடிட்டிங் (2 ஆண்டுகள்) | மேல்நிலைப்படிப்பு (எந்தப் பாடப்பிரிவும்) அல்லது அதற்கு ஈடான கல்வித்தகுதி. |
| **சர்டிபிகேட் பயிற்சி** | |
| 6. சினிமா நடிப்பு (ஓராண்டு) | எஸ்.எஸ்.எல்.சி, தேர்வு அல்லது அதற்கு ஈடான கல்வித்தகுதி |

1. நடிப்புப் பயிற்சியைப் பொறுத்தமட்டிலும் தகுதி வாய்ந்த நபர்களுக்கு கல்வித் தகுதி பற்றிய நிபந்தனை தளர்த்தப்படும்.
2. சினிமா நடிப்புப் பயிற்சி, தமிழ், தெலுங்கு, கன்னடம் மலையாளம், ஆகிய மொழிகளில் அளிக்கப்படும்.
3. ஏதாவது ஒரு துறையில் பயிற்சி பெற அந்நிய நாட்டு மாணவர் ஒருவருக்கு இடம் ஒதுக்கப்படும்.
4. பயிற்சிக்குரிய இடங்களின் எண்ணிக்கை, வயது வரம்பு. மற்றும் இதர விவரங்கள் பிராஸ்பக்டஸில் கொடுக்கப்பட்டுள்ளன

சொந்த முகவரியிட்ட (22 செ.மீ. × 12 செ.மீ. அளவுள்ள) 1.00 ரூபாய் தபால் தலையிட்ட உறையுடன், பிரின்சிபால், பிலிம் & டெலிவிஷன் இன்ஸ்டிட்யூட் ஆ.ஃப் தமிழ்நாடு, சென்னை என்ற பெயருக்கு ரூ 2/- மதிப்புள்ளதும் 1-6-82 அல்லது அதற்குப் பின்பு வாங்கப்பட்டதுமான போஸ்டல் ஆர்டரை இணைத்து அனுப்பி விண்ணப்பப்படிவமும் பிராஸ்பெக்டஸும் அடியிற் கையொப்பமிட்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் கிடைப்பதற்கான கடைசித் தேதி 30-6-1982**

தலைவர்
**தமிழ்நாடு ஃ. பிலிம் & டெலிவிஷன் இன்ஸ்டிட்யூட்**
சி.ஐ.டி. வளாகம், அடையாறு, சென்னை-600 113.

# வெற்றி பெற்ற மாணவ மணிகள்!

இந்த ஆண்டு மேல்நிலைப் பள்ளி இறுதித் தேர்வு எழுதிய மாணவர்களில் 61.9 சதவிகித மாணவர்கள் தேறிவிட்டனர். இவர்கள் பள்ளிகள் மூலம் இறுதித் தேர்வு எழுதியவர்கள். இந்த ஆண்டு இத்தேர்வுகளை எழுத பள்ளிகள் மூலமாகப் பதிவு செய்து கொண்டவர்கள் ஒரு இலட்சத்து 30 ஆயிரத்து 309 மாணவர்கள் ஆவார்கள். இவர்களைத் தவிர தனிப்பட்ட முறையில் இத்தேர்வு எழுதியவர்கள் 27 ஆயிரத்து 210 பேர் ஆவர்.

இவர்களில் மொத்த மதிப்பெண்களில் 60 சதவிகிதமோ, அதற்கு மேலோ பெற்று சிறப்பாகத் தேறியவர்களின் எண்ணிக்கை 44 ஆயிரத்து 484 ஆகும்.

வெற்றி பெற்ற மாணவர்களில் 226 பேர் கணிதத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்களும் 128 பேர் ''அக்கவுண்டென்சி'' தேர்வில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்களும் பெற்று வெற்றி பெற்றுள்ளனர்.

சென்னையில் மேல் நிலைப் பள்ளி இறுதித் தேர்வு (பிளஸ் 2 தேர்வு) முடிவுகள் வெளியிடப்பட்டன. இதில் சென்னை எழும்பூர் டான்பாஸ்கோ மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவர் எம். டி. கிரிதர் முதல் இடத்தைப் பெற்றுள்ளார். இவர் 1138 மதிப்பெண்கள் (94.8 சதவிகிதம்) பெற்று தேறியுள்ளார். டான்



எம். டி. கிரிதர்

பாஸ்கோ பள்ளி மாணவர்கள் இத்தேர்வில் மிகப் பெரும் சாதனையை நிகழ்த்தியுள்ளனர். இத்தேர்வில் முதல் பத்து இடங்களைப் பெற்றுள்ள 13 மாணவர்களில் 7 பேர் டான்பாஸ்கோ பள்ளியைச் சேர்ந்தவர்கள். அத்துடன் முதல் 5 இடங்களையும் இப்பள்ளி மாணவர்களே பெற்றுள்ளனர்.

மேல்நிலை இறுதித் தேர்வில் முதல் 10 இடங்களைப் பெற்று இருக்கும் 13 மாணவர்கள் விவரமும், அவர்கள் பெற்றுள்ள மொத்த மதிப்பெண்களும் வருமாறு:

(1) எம். டி. கிரிதர் (டான்பாஸ்கோ) 1138 மதிப்பெண்கள் (94.8 சதவிகிதம்).

(2) வி. எஸ். ஸ்ரீகாந்த் (டான்பாஸ்கோ) 1126 மதிப்பெண்கள் (93.8 சதவிகிதம்).

(3) எம். ஜெயந்த் (டான்



வி. எஸ். ஸ்ரீகாந்த்

பாஸ்கோ) 1118 மதிப்பெண்கள் (93.2 சதவிகிதம்).

(4) கே. ஹரீஷ் நாயுடு (டான்பாஸ்கோ) 1116 மதிப்பெண்கள் (93.0 சதவிகிதம்).

(5) (1) எஸ். நந்தகுமார் (டான்பாஸ்கோ) (2) எஸ். வெங்கடேஷ்குமார் (சென்னை எம்.சி.சி. மேல் நிலைப் பள்ளி). இருவரும் 1114 மதிப்பெண்கள் (92.8 சதவிகிதம்).



எம். ஜெயந்த்

(6) சி. இராமச்சந்திரபட் (திருச்சி ஈ. ஆர். மேல் நிலைப் பள்ளி) 1110 மதிப்பெண்கள் (92.5 சதவிகிதம்).

(7) எஸ். சென்னியப்பன் (கடலூர் செயின்ட் ஜோசப் மேல்நிலைப்பள்ளி) 1106 மதிப்பெண்கள் (92.2 சதவிகிதம்).

(8) (1) எம். ராதாகிருஷ்ணன் (தூத்துக்குடி காரப்பேட்டை நாடார் மேல் நிலைப் பள்ளி)[2] வி. சீனிவாசன் (சென்னை டான்பாஸ்கோ) இருவரும் 1105 மதிப்பெண்கள் (92.1 சதவிகிதம்).

(9) (1) வி. ஷோபனா (திருச்சி எஸ். வி. இந்து பெண்கள் மேல்



பி. அருணா

நிலைப் பள்ளி) ; [2] பி அருணா (சென்னை ஆர். கே. எம். சாரதா வித்யாலயா) இருவரும் 1103 மதிப்பெண்கள் (91.9 சதவிகிதம்)

(10) டி. செசில் மனோகர் (சென்னை டான்பாஸ்கோ) 1101 மதிப்பெண்கள் (91.8 சதவிகிதம்).

பிளஸ் - டு தேர்வில் மாநிலத்திலேயே அதிக மதிப்பெண்கள் வாங்கி முதலாவதாக வந்துள்ள எம். டி. கிரிதரன் மொத்தம் 1200 மதிப்பெண்களுக்கு 1138 மதிப்பெண்கள் பெற்றுள்ளார்.




# மூங்கில் துறைப்பட்டு -ஒரு முன் மாதிரி!

**மு. முத்துக்காளத்தி**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கடலூர்.**

மூங்கில் துறைப்பட்டு என்ற பெயரில் ஒரு மோகனம் இருப்பதாகத் தோன்றிற்று எனக்கு.

''என்ன அங்கே?'' என்று கேட்டேன், என் நண்பர் தென்னார்க்காடு மாவட்ட நேரு இளைஞர் மன்றங்களின் இணைப்பாளர் திரு எம். பாலசுப்பிரமணியம் அவர்களை.

'கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை அங்கே இருக்கிறது. திரு க. இளங்கோவன் தனி அலுவலர். நிர்வாகத்தினர்-தொழிலாளர்-விவசாயிகள் முத்தரப்பு ஒத்துழைப்புக்கு உன்னதமானதோர் எடுத்துக்காட்டு. அவர்களிடையே நிலவும் நல்லுறவு நம்மைப் புல்லரிக்கச் செய்யும். நாட்டுக்கு இப்படிப்பட்ட அமைப்புகள் தான் அடித்தளமாக அமைய வேண்டும். ஒரு துறையினர் தங்கள் நலனை மட்டும் வற்புறுத்தி, பிற துறையினர் நலனைப் புறக்கணிக்கும் தன்மையை இங்கே கடுகளவும் காண முடியாது. ஒருவர் மற்றவர் நலனைப் பேணுகிறார்கள். கடமையைச் செய்து விட்டுத்தான் உரிமையைக் கேட்கிறார்கள். போராடுவதில்லை. வாதாடுகிறார்கள். இதமாக எடுத்துரைக்கிறார்கள். நாட்டின் ஒட்டுமொத்தமான நலனில் அக்கறை காட்டுகிறார்கள். நீங்கள் ஒரு தடவை வந்து நேரில் பாருங்கள்'' என்றார் பாலசுப்பிரமணியம்.

அந்த வாய்ப்பு 4.4.'82-ந்தேதி கிட்டியது. நானும் நண்பரும் சென்றிருந்த சமயம் சென்னையிலிருந்து திரு எஸ்.வி. கனகராசன் தொழிலாளர் நல துணை ஆணையர் (சர்க்கரைத் துறை) திரு எஸ் செயராமன், முதுநிலை தொழிலாளர் கல்வி அலுவலர், இந்திய அரசு, புதுவையிலிருந்து அனைத்திந்திய வானொலி நிலையத்தைச் சேர்ந்த திரு முல்லைவளவன் ஆகியோரும்தொழிலாளர் நிகழ்ச்சிகளில் பங்கேற்க வந்திருந்தனர். அனைவரையும் ஆலையின் சார்பில் தனி அலுவலர் திரு. க. இளங்கோவன், தொழிலாளர் நல அலுவலர் திரு பி. முத்துவேலப்பன், அலுவலக மேலாளர் பக்தவத்சலம் ஆகியோர் வரவேற்று, ஆலையின் பல்வேறு பகுதிகளைச் சுற்றிக் காண்பித்து விளக்கமளித்தனர்.

கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 1961-ல் பதிவு செய்யப்பட்டு, 1967ல் உற்பத்தி தொடங்கியது. கரும்பு உற்பத்தியாளர் 13,006 பேர் அங்கத்தினர்களாக உள்ளனர். இவர்கள் தென்னார்க்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர் வட்டங்களையும், வடார்க்காடு மாவட்டம் திருவண்ணாமலை, செங்கம் வட்டங்களையும் சேர்ந்தவர்கள். இவர்களில் 5-10 ஏக்கர் வைத்திருப்பவர்கள் 500-க்கும் குறைவானவர்களே. மற்றவர்களெல்லாம் சிறு விவசாயிகள்தான். இந்த விவசாயிகள் நாட்டு நலனிலும், சமூகப் பொறுப்பிலும் காட்டும் அக்கறை மிகச் சிறப்பானது. நிர்வாகத்துடன் ஒத்துழைத்து, தொழிலாளர்களுடனும் சுமுக உறவை வளர்த்துக் கொண்டுள்ளனர். விவசாயிகள் அனைவரும் சேர்ந்து சமூகக்கூடம் ஒன்று கட்ட ரூ.2.5 இலட்சம் அளவிற்கு உதவ முன் வந்திருப்பதாகக் குறிப்பிட்டார், கூட்டுறவு ஆலையின் நிறுவனத் தலைவர் திரு நாராயணசாமி நாயுடு. இது போலவே, தொழிலாளர்களும் ஆண்டுக்கு 4, 5 நாட்கள் தங்கள் ஊதியத்தை நல்ல காரியங்களுக்குக் கொடுக்கின்றனர் என்றார் தனி அலுவலர் நண்பர் இளங்கோவன்.

பெண்ணாற்றின் தென்கரையில் 142 ஏக்கரா பரப்பில் ஆலை அமைந்துள்ளது. ஆயிரம் மெட்ரிக் டன் சாறு பிழியும் திறனுடன் ஆரம்பிக்கப்பட்டு, இப்பொழுது 2,000 மெட்ரிக் டன் திறன் பெற்றுத் திகழ்கிறது. ஆலை விஸ்தரிப்பு வேலைகள் 1977 நவம்பரில் முடிக்கப்பட்டன. இவைகளுக்கு மொத்தச் செலவு ரூ. 295 இலட்சம். ஒட்டச் சாறு பிழியும் டிஃப்யூஷன் பிளாண்ட் Diffusion Plant அமைக்கப் பெற்ற முதல் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை தமிழ்நாட்டிலேயே இதுதான். இந்த இயந்திரத்திற்கு மட்டும் ரூ.59 இலட்சம் செலவாயிற்று. ஒரு டன் கரும்பு அரைத்தால் அதிலிருந்து கிடைக்கும் சாறு உலக நாடுகளில் 12 சதவிகிதமாகவும், இந்தியாவில் 11 சதவிகிதமாகவும் இருக்கிறது. இந்த ஆலையில் 10.4 சதவிகிதம்.

ஆயிரம் பேர் வேலை செய்யும் ஆலை. 5லிருந்து 6 மாதக்காலம் அரைவைப் பருவம். இந்தக் காலத்தில் வழக்கமான தொழிலாளர்களைத் தவிர, 150 முதல் 200 வரை அன்றாடத் தொழிலாளர்களும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளப்படுகின்றனர்.

தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி, கேன்டீன், ஓய்வு அறை, கல்விக்கூடம், கூட்டுறவுச் சங்கம், மனமகிழ் மன்றம் எல்லாம் இருக்கின்றன. இனிக்கின்றன!

அத்தியாவசிய தொழிலாளர்களுக்குசுமார் 200 இல்லங்கள் கட்டிததரப்பட்டுள்ளன. வேலை செய்பவர்களில் சுமார் 25 சதவிகிதம் பேர் இவ்வாறு வீட்டு வசதி பெற்றுள்ளனர்.

இங்கிலீஷ் மீடியம் பள்ளியொன்று எல்.கே.ஜி, யு.கே.ஜியுடன் இயங்கி வருகிறது. குழந்தைகள் நர்சரியுடன் நாற்றங்கால் நர்சரியும் இருக்கிறது. இங்கே உற்பத்தியாகும் காய்கறிகள் ''கேஜி''யில் விற்கப்படுகின்றன.



தொழிலாளர்கள், அலுவலர்கள், அதிகாரிகள் ஆகிய மூன்று பிரிவினருக்கும் தனித்தனியே மனமகிழ் மன்றங்கள் எல்லா வசதிகளுடனும் இருக்கின்றன. மூன்றிலும் டி.வி. உண்டு. டேபிள் டென்னிஸ், பத்திரிகைகள் இருக்கின்றன.

மகளிர் சங்கம் ஒன்றும் சிறந்த பணியாற்றி வருகிறது. குடும்பநலத் திட்டம், சத்துணவு, வீட்டு நிர்வாகம், நுண்கலை ஆகியவற்றில் பெண்களை ஈடுபாடு கொள்ளச் செய்கிறது. இதன் வெற்றியின் பெரும்பங்கு பம்பரமாகச் சுழலும் திருமதி சிநேகலதா இளங்கோவனைச் சாரும்.

தொழிலாளர்களின் முத்தமிழ்க் கலை மன்றம் நாடகம், இசை நிகழ்ச்சிகளை வளர்த்து வருகிறது.

தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு இரண்டு செட் சீருடையும், காலணிகளும் வழங்கப்படுகின்றன.

கூட்டுறவுச் சங்கத்தில் மாவரைக்கும் இயந்திரம், எண்ணெய் ஆட்டும் செக்கு எல்லாம் இருக்கின்றன. உணவுப் பண்டங்கள் சத்துடனும் சுத்தமுடனும் கிடைக்க இவை உதவுகின்றன. ''இங்கே ஒரு பேக்கரி நடத்துகிறோம். கேக் 25 காசு தான். சாஃப்ட்டாக இருக்கும்''. என்றார் நண்பர் இளங்கோவன்.

''சாப்பிட்டால்தானே தெரியும்!'' என்றேன் நான்.

அனைவருக்கும் 'கேக்' வரவழைத்துக் கொடுத்தார்கள். மிகவும் சுவையாகத்தான் இருந்தது!

மட்டன் கிலோ 14 ரூபாய் தான். இலாப நோக்கின்றிச் செயல்படுவதால் இந்த விலைக்கு விற்கப்படுகிறது.

கேன்டீனில் தரமான உணவுப் பண்டங்கள் குறைவான விலைகளில் வழங்கப்படுகின்றன. தேநீர் 10 காசு, காபி 20 காசு; இட்லி 10 காசு, வடை 10 காசு, பூரி 30 காசு, சாப்பாடு ஒரு ரூபாய். சாப்பாட்டுக்கு அங்கே போய்விடலாம் போல தோன்றுகின்றது அல்லவா? விழாக் காலங்களில் சிறப்புணவு இனிப்புப் பொட்டலங்கள் இந்த மாதிரியே குறைந்த விலையில் கிடைக்கின்றன.

தொழிலாளர் உடல் நலனை உறுதி செய்ய மருந்தகம் ஒன்று உள்ளது. மருத்துவ அலுவலர் மருந்து கலக்குவோர், நர்சுகள், ஏனைய பணியாளர்களுடன் நவீன வசதிகள் பொருந்தியது இந்த மருந்தகம். இலவச மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது. அவசர கேசுகளைக் கவனிக்க ஆம்புலன்ஸ் வசதி உண்டு.

அன்று இந்த மருத்துவமனையில் இரண்டு பிரசவங்கள் நடந்தன. இரண்டும் ஆண் குழந்தைகள். கடந்த ஆறாண்டில் 580 பிரசவங்கள் நல்லமுறையில் நடைபெற்றுள்ளன. தினசரி 160 -180 பேர் சிகிச்சைக்காக வருகின்றனர். குடும்ப நல அறுவைச் சிகிச்சையிலும் சிறந்த அக்கறை காட்டப்படுகிறது.

''தொழில் தொடர்பான நோய் என்ன ஏற்படுகிறது?'' என்று டாக்டரைக் கேட்டேன்.

''இருதய நோய், ஆஸ்துமா, காசம்'' என்றார் டாக்டர் பி.ஜி. மோகன கிருஷ்ணன்.

''குழந்தைகளிடம்?''

''மாலைக்கண் வியாதி அதிகமாக இருக்கிறது. வைட்டமின் 'ஏ' குறைவால் இது ஏற்படுகிறது'

''வீட்டுக்கொரு முருங்கை வளர்த்தால் இந்த நோயை முறியடித்து விடலாமே'' என்று பட்டது எனக்கு!

நாட்டில் எத்தனையோ இலட்சக்கணக்கான ஏழை எளிய மக்களைவிட, நல்ல நிலையில் உள்ள இத் தொழிலர்ளர்கள் சத்துணவில் சிறந்த கவனம் செலுத்த வேண்டியது அவசியம். அவர்களது வருமானத்துக்குள் இதைச் செய்துகொள்ள முடியும். முயற்சி மட்டுமே தேவை!

''செய்யும் தொழிலே தெய்வம்'', ''நீ வாழ பிறரைக் கெடுக்காதே'' ''இந்த ஆலை உனக்கு என்ன செய்தது என்று பார்க்காதே, நீ இந்த ஆலைக்கு என்ன செய்தாய் என்று பார்'' இப்படி வாசகங்களை எழுதி வைத்து வழிகாட்டும் தொழிலாளர்கள், இந்த வகையிலும் மற்றவர்களுக்கு வழிகாட்ட முன் வருவார்களாக!



# முகப்பரு நீக்க எளிய வழி



**டாக்டர் கே. வி. திருவேங்கடம்**

அமைப்பாளர்

மருந்து வேதியல் ஆராய்ச்சி நிலையம்,

சென்னை மருத்துவக் கல்லூரி.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபோது அண்ணாரின் ஊக்கத்தினால் 1969ல் உருவாகிய மருந்து வேதியல் ஆராய்ச்சி நிலையத்தின் அரும்பணியை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

முகப்பருவிற்குச் சிறந்த ஒரு நிவாரணியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் திருநீற்றுபச்சையெனப் படும் மூலிகையையும், சரும நோய்ப் பகுதியில் கையாளப் படும் மருந்துகளையும் ஒப்பிட்டுப் பார்த்து மருந்து வேதியல் ஆராய்ச்சி நிலையம் ஆராய்ச்சி நடத்தி சிறந்த முடிவுகளை அறிவித்துள்ளது. திருநீற்றுப் பச்சை முகப்பருச் சிகிச்சைக்கு உகந்தது என்பது இந்த நிலையம் நடத்திய ஓர் ஆராய்ச்சியில் கண்டு பிடிக்கப்பட்டது.

தற்போது ஒப்பிடப்பட்ட சோதனைக்கு முகப்பரு உள்ள 51 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒரு பிரிவில் 25 பேர்கள் திருநீற்றுப் பச்சை உபயோகித்தனர். அதாவது தேவைக்கேற்ப அதன் இலைகளைக் கசக்கி அதனின்று வெளிப்படும் சாற்றை பரு இருக்கும் இடங்களில் தினந்தோறும் ஒரு வேளை பகலிலோ அல்லது இரவிலோ தடவிக் கொண்டனர். மற்றொரு பிரிவில் 26 பேர்கள், சருமநோய்ப் பகுதியில் கையாளப்படும் மருந்துகளை அதாவது, 500 மில்லி லிட்டர் அளவுள்ள டெட்ராசைக்கிளின் மாத்திரைகளைத் தினமும் உட்கொண்டனர், தவிர பரு இருக்கும் இடங்களில் தேவைக்கேற்ப கந்தகக் களிம்பைத் தடவிக் கொண்டனர்.

இவ்விதம் 6 வார சிகிச்சைக்குப் பிறகு, இரு பிரிவினரையும், பரிசோதனை செய்ததில் முதற் பிரிவில் அதாவது திருநீற்றுபச்சை இலையை உபயோகித்தவரில் 18-பேர்களுக்கு (72 %) முகப்பரு, புண் இவற்றின் எண்ணிக்கை 60% க்கும் மேலாகக் குறைந்து காணப்பட்டது. 6 பேர்களுக்கு (24%) எவ்விதமாற்றமும் ஏற்படவில்லை. ஒரே ஒருவருக்கு பரு, புண் இவற்றின் எண்ணிக்கை கூடுதலாயிற்று. இரண்டாவது பிரிவில், அதாவது சருமநோய் பிரிவில் கையாளும் மருந்துகளை உபயோகித்தவரில் 15 பேர்களுக்கு முகப்பரு, புண் இவற்றின் எண்ணிக்கை 60%க்கும் மேலாகக் குறைந்து காணப்பட்டது. 10 பேர்களுக்கு (38.46%) எவ்வித் மாற்றமும் ஏற்படவில்லை. ஒரே ஒருவருக்கு பரு, புண் இவற்றின் எண்ணிக்கை கூடுதலாயிற்று. மற்றும், திருநீற்றுப் பச்சை இலைகளை உபயோகிக்கும் பொழுது வேறு எவ்விதமான விளைவுகளும் ஏற்படவில்லை.

இந்தச் சிறிய ஒப்பிடப்பட்ட சோதனையிலிருந்து, திருநீற்றுப் பச்சை, சருமநோய்ப் பகுதியில் கையாளப்படும் முறையைவிட சிறந்தது, எளிமையானது என்பது புலப்படுகிறது. மேலும் சிகிச்சை முறைக்கான செலவினை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, சருமநோய்ப் பகுதியில் மருந்துகளுக்கு ஒரு நபருக்கான செலவு குறைந்தது, ரூ. 100- என்றும், ஆனால் அதே கால அளவிற்குத் திருநீற்றுப் பச்சைக்கான செலவு ரூ. 5-தான் என்பதும் அறியவருகிறது. எனவே திருநீர்ப் பச்சை ஓர் எளிய, சிறந்த ,சிக்கனமான முகப்பரு நிவாரணி என்பது குறிப்பிடத் தக்கது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்...அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு !


கண்ணைக் கவரும்
வண்ணப் பேழையாக....
படித்துப் பாதுகாக்க வேண்டிய
கருத்துக் கருவூலமாக....
நாட்டு மக்கள் ஏற்றம் பெற்றிட
நல்ல பல திட்டங்களைத்
தீட்டிச் செயல்படுத்திடும்
அரசின் ஆக்கப் பணிகள்
தொகுப்பு மலராக....
அதிகப் பக்கங்களுடன்
தமிழரசு
1-7-1982 இதழ்
வெளிவருகிறது!